மகாமகோபாத்யாய, டாக்டர்
உ.வே. சாமிநாதையர் நூல்

# அரிச்சந்திரன் சரிதை.

இது

சென்னை இராஜதானி வித்தியாசாலைத்

தமிழ்ப் பிரதமபண்டிதராகிய

திருவல்லிக்கேணி சுதரிசனம்

கிருஷ்ணமாசாரியரவர்களால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து

மொழிபெயர்த்து எழுதப்பட்டுச்

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ஸ்ரீ. கோபாலாசாரியரால்

பதிப்பிக்கப்பட்டது.

(மூன்றாவது பதிப்பு.)

1901.

PRINTED AT THE R. P. PRESS, MADRAS.

*All Rights Reserved.*

GF
O-1F:9(O-3)
D1

ஸ்ரீ

# பதிப்புரை.

---

அமிழ்தினுமினிய தமிழ்மொழிச் செல்வர்காள்!

சென்னைப் பிரஸிடென்ஸிகாலெஜ் தமிழ்த்தலைமைப்பண்டிதரும் எனது பிதாவுமான உ. வே. சுதர்சனம். கிருஷ்ணமாசாரியர் அவர்களால் இயற்றப்பட்ட 'அரிச்சந்திரன் சரிதை' என்னும் இவ்வசனநூலை, அவர்காலத்து எப். ஏ. பரீக்ஷைப்பாடமாகவைத்து அவரைப் பெருமைப்படுத்தியதோடு அன்னார் காலஞ்சென்றபின்னரும் 1902-ஆம் வருஷத்து எப். ஏ. பரீக்ஷைக்கும் அந்நூலின் பிற்பகுதியைப் பாடமாகவைத்து அவரது முயற்சியைப் பயனுறச்செய்த சென்னை யூனிவர்சிடியார்பால் யான் நன்றி என்றும் மறவேன்.

இந்நூலை முன்பதிப்பிற்கிணங்க அரும்பதவுரையுடன் அச்சிட்டுவெளிப்படுத்துதற்குதவிய சென்னை, கிறிஸ்டியன்காலெஜ் தமிழ்ப் பண்டிதர் கா. ஸ்ரீ. கோபாலாசாரியர் அவர்களுக்கும் யான் வந்தனம் செலுத்துகின்றேன்.

இன்னமே இந்நூலின் மற்றைப்பகுதியும் பாடமாக ஏற்படுமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றனன்.

சார்வரி ஞு
தை மீ 10உ

இங்ஙனம்:
இந்நூலாசிரியர் குமாரன்
சுதர்சனம்-சிங்கராசாரியர்

BESANT NAGAR, MADRAS-600 090

# முகவுரை.

அரிச்சந்திரன்சரிதை - அரிச்சந்திரமகாராஜனுடையசரித்திரம். சரித்ம் என்னும் வடமொழி சரிதையென வழங்கியது. இந்நூல் வாய்மையின்மேன்மையை விளக்குவது. வாய்மையொன்றையே முக்கியமாகக்கொண்டு ஒழுகுபவனுக்கு ஒன்றும் குறைவில்லை, "சத்தியமே நித்தியம்," "சத்தியமே ஜயம்" என்கிற பெரியோர் வழக்கின்படி எல்லாத் துன்பங்களையும்போக்கி அழியாப்புகழையும் செல்வத்தையும் அதுவிளைக்கும் என்பது இந்நூலின் துணிவு. இச்சரிதம் ஸம்ஸ்கிருதபாஷையில் வேதசாரங்களான நூல்கள் பலவற்றிலும் அரிச்சந்திரோபாக்கியானம் என்று பிரசித்தமாயுள்ளது. இது ஸ்ரீவேதவியாசபகவான் அருளிச்செய்த பதினெண்புராணங்களில் ஒன்றாகிய ஸ்காந்தபுராணத்தின் ஓர் பிரிவாகிய அரிச்சந்திரோபாக்கியானத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதப்பட்டது. தமிழில் நல்லூர் ஆசுவீரகவிராயர் என்பவரால் அரிச்சந்திரபுராணம் என்னும் செய்யுள் இயற்றப்பட்டுப் பழமையாய் வழங்கிவருகின்றது. தமிழ் கற்கும் மாணாக்கர்களுக்குத் தெளிவாகவும் திருத்தமாகவும் பாஷை எழுதப்பழகுதற்கு உதவியாக மிக எளியநடையும் மிகக் கடின நடையும் இன்றி வேறுபாஷைகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதனால் கலந்துவரும் இதரபாஷைநடையும் விரவாது இயற்றமிழாய் ஒரு வசனம் இருக்கவேண்டியது என்று நினைத்துத் தமிழின் அருமை தெரிந்தவர் என்னை ஒரு வசனகிரந்தம் எழுதும்படி தூண்ட எனக்கும் அது மிகவும் ஆவசியகம் என்றுதோன்றியதனால் எனது சிற்றறிவுக்கியைந்தவண்ணம் ஒருவாறு செய்து முடித்தனென். சந்திகள் இருந்தால் மாணாக்கர்களுக்குப் பதம்பிரிப்பதிலே காலம்செல்லும், பாஷைநடையை அறிதற்குச் சங்கடமாயிருக்கும் என்கிற உத்தேசத்தினாலே பெரும்பாலும் சந்திகள் இல்லாமலே எழுதப்பட்டது. இதனுள் என் அறிவுக்குப் புலப்படாதபிழைகள் காணப்படினும் புலமையுடையோர் திருத்திக்கொள்ள விரும்புகிறேன்.

# அட்டவணை.

| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| கரு | நக்ஷத்திரகன் அரிச்சந்திரனைப் பணத்துக்காக நிர்ப்பந்தித்தல் ... ... ... ... ... | |
| கசு | அரிச்சந்திரன் மனைவியை விலைசெய்தல்... ... | ரு |
| கஎ | காலகௌசிகன் சந்திரமதியை விலைக்குவாங்கிச் செல்லுதல் ... ... ... ... ... | க0 |
| கஅ | நக்ஷத்திரகனுக்குப்பொருள்தரல்... ... ... | கஉ |
| ககூ | நக்ஷத்திரகன் அரிச்சந்திரனைகொடுந்தலைத் தானே வைத்துக்கொண்டு முனிவர்பொருள் கொடுக்க மீண்டும் நிர்ப்பந்தித்தல் ... ... ... | கசு |
| உ0 | நக்ஷத்திரகன் அரிச்சந்திரனை விலைகூறல்... ... | கஅ |
| உக | வீரவாகு என்னும் புலையன் அரிச்சந்திரனைக் கொள்ளுதல் .. ... ... ... ... ... | உச |
| உஉ | அரிச்சந்திரன் புலையனுக்கு அடிமையாய் மயானம் காத்திருத்தல்.. ... ... ... ... | உஅ |
| உங | சந்திரமதி காலகௌசிகன்மனையில் பணிசெய்து வருந்துதல் ... ... ... ... ... | ஙச |
| உச | லோகிதாசியன் அரவுதீண்டி இறத்தல் ... ... | ஙங |
| உரு | சந்திரமதி மயானத்தில் புத்திரனுக்குத் தீக்கடன் இயற்றப்புகுதல் ... ... ... ... | ஙசு |
| உசு | சந்திரமதியைக் கொலைபாதகியென்று தலைவாங்கத் தீர்மானித்தல்... ... ... ... ... | சச |
| உஎ | அரிச்சந்திரன் தன்மனைவியின் சிரத்தைச்சேதிக்க வாள்வீசுதல் ... ... ... ... ... | சஅ |
| உஅ | திரிமூர்த்திகளும் பிரத்தியக்ஷமாய் அரிச்சந்திரன் மனைவியைக் கொலைசெய்யாதுதடுத்துச் சத்திய விரதத்தை மகிழ்தல் ... ... ... ... | ருக |
| உகூ | தேவர் அநுக்கிரகத்தால் குழந்தைகள்பிழைத்தல்... | ருங |
| ஙo | அரிச்சந்திரமகாராசன் மீண்டும் அயோத்தியில் அரசாளுதல் ... ... ... ... ... | ருஎ |

ஸ்ரீ

கடவுள் துணை.

# இப்பாடத்தின் பூர்வகதைச்சுருக்கம்.

முன்னொருகால் நைமிசாரணியம் என்னும் புண்ணியஸ்தலத்தில் முனிவர்கள் பலரும் வேள்விபுரிந்து நற்சரிதங்களை உசாவிக்கொண்டிருக்கும் அமயத்தில், சூதபுராணிகர் ஆங்கெழுந்தருள, அவரைப் பணிந்து போற்றி, 'ஆரிய! இம்மண்ணுலகில் அம்பரீஷன், பகீரதன் முதலிய முடிமன்னர் பதினறுவரும், சகரன், நளன் முதலான சக்கிரவர்த்திகள் அறுவரும் புண்ணியபுருடராதலின் அவரது சரிதங்கேட்கப்பாவந்தொலையுமெனவும், அவருள் அரிச்சந்திரன்சரிதை புலைக்குற்றத்தைத் தொலைக்குமெனவும் புலமையுடையோர் புகல்கின்றனர். ஆகவே, வாய்மை வலியுறுத்திய வள்ளலாகிய அவ்வரிச்சந்திரனது நற்சரிதை அடியேமுக்கருளவேண்டும்' என விண்ணப்பஞ்செய்தனர். சூதமுனிவர் அவர்களை நோக்கி 'நற்றவமுனிவீர்! நாரதனென்னும் தேவவிருடி ஒருகால் சத்தியலோகஞ்சென்று தம்தந்தையாகிய பிரமதேவனை அடிபணிந்து, எல்லாநற்குணங்களிலும் உத்தமகுணம் இன்னதெனவும் அதனையுடையான் இன்னவனெனவும் சொல்லுமாறு வேண்ட, அன்னவூர்தி அருளிச்செய்யலாயினன்' என்றுசொல்லி அம்மன்னவன் சரிதையைச் சொல்லுவாராயினர் :—

நீர்வளம் நிலவளம்முதலிய பலவளங்களும் குலவப்பெற்ற கோசலநாட்டின் இராஜதானியாகிய அயோத்திமாநகரின்கண், சூரியன் மரபிற்றோன்றிய மநு இக்ஷ்வாகு முதலியோரது பரம்பரையில் திரிசங்கு என்ற அரசனொருவன் இருந்தனன். அவனுக்கு ஒரு மகன் உதித்தனன். அவன் தன்குலகுருவான ஸ்ரீவசிஷ்டமுனிவரால் சௌளம் உபநயநம் செய்விக்கப்பெற்று, சகலகலைகளும் முற்றக்கற்று, சமஸ்த சற்குணங்களுக்கும் ஆகரமாய், அகண்ட பூமண்டலத்தையும் ஒருகுடைக்கீழ் ஆளுதல்கொண்ட சக்கரவர்த்தியாய், அரிச்சந்திரன் எனப் பேர்பெற்றுச் சத்தியவிரதத்தைக்கைக்கொண்டு புகழ்பூண்டு உலகை ஆண்டுவந்தனன். இவ்வாறு இருக்கையில், சில அந்தணர் ஒருநாள் அரசனையடைந்து கன்னோசிநாட்டின் மன்னவன் மதிதயன்றன் திருமகளான சந்திரமதியென்னும் கன்னிகையின் அழகு அறிவுமுதலிய பல சுபகுணங்களையும் எடுத்துரைத்தலும், அதுகேட்டு அரிச்சந்திரன் அக்கன்னிகையை மணஞ்செய்யக் காதல்

கொண்டு, வசிஷ்டர் முதலானவர்களோடு கன்னோசிநாடு அடைந்து மதிதயனைக்கண்டு மணம்பேசுகையில், அவன் தன்மகளை அரிச்சந்திரன் பார்த்தபின்னரோ கலியாணச்செய்தியை முடித்தல்வேண்டுமென்ன, அங்ஙனமே அப்பெண்மணியை அரிச்சந்திரன்முன்பே கொணர்ந்து நிறுத்த, அவன் அவள்கழுத்தில் மாங்கலியம் விளங்கக்கண்டு கோபங்கொண்டு, 'முன்னரோ ஒருவனுக்கு மணம்புகுந்து மாங்கலியம்பூண்ட மகளையோ மணப்பது' என்று கடுத்துரைத்தலும், அந்தணர்முதலியோர் சந்திரமதி பிறந்தபோது மாங்கலியத்தோடு தோன்றியதையும், அதனைக்கண்டு மதிதயன் மனங்கலங்கியதையும், அப்போது கடவுள் அவனது கட்புலத்திற்றோன்றி அம்மாங்கலியம் அவளுக்குக் கணவனாவான் ஒருவனுக்கேயன்றிப் பிறர்க்குக்காணப்படாதவாறு வரமளித்ததையும் எடுத்து அரிச்சந்திரனுக்கு விளங்கஉரைத்தனர். அப்பொழுது அசரீரியும் வாக்களித்தது. அதன்மேல், அரிச்சந்திரன் சகலசம்பிரமத்தோடும் அவளை மணமுடித்துத் தனது நகரடைந்து இன்பம் நுகர்ந்துவாராநிற்க, சந்திரமதி பேரெழில்வாய்ந்த ஒருமகனை ஈன்றனள். அம்மகனுக்கு லோகிதாசியன் என்னும் பெயரிட்டு அருமையாகவளர்த்து அறநெறிதவறாது அரிச்சந்திரன் அவனியைக் காத்துவந்தான்.

இங்ஙனம் இருக்க, தேவலோகத்தில் ஒருநாள் தேவேந்திரன், வசிஷ்டர் விசுவாமித்திரர் முதலான பலமுநிவரும் பிறரும் சூழ்ந்திருந்தசபையில் வசிஷ்டரைநோக்கி, குணங்களில் உத்தமகுணம் யாதெனவும் அதனையுடைய புருடனும்உளனோ எனவும்கேட்க, அம்முநிவர் 'பூமியில் அரிச்சந்திரனென்பானோர் அரசர்க்கரசன் சத்தியவிரதம்பூண்டு அகண்ட பூமண்டலாதிபத்தியஞ் செய்கின்றான்' என்றுகூறலும், ஆங்கிருந்த விசுவாமித்திரர் அதனைக்கேட்டுப் பொறா[து] அவ்வரசன் பொய்யன்எனவும், அவன்பால் கூறை சோறு கொள்ளும் குருவாயினமையின் அம்முநிவர் அவனைக்கொண்டாடுகின்றனர் எனவுங்கூற, வசிஷ்டர், அவன் வாய்மைதவறுவனேல் தாம் பிராமணியத்தையிழந்து தென்றிசைக்கு ஏகுவதாகச் சபதஞ்செய்ய, விசுவாமித்திரரும், அம்மன்னனைப் பொய்யனாக்கிடின் தாம் பல்லாயிரம் ஆண்டு கடுந்தவம்புரிந்து பெறுந்தவப்பயனிற் பாதியளித்து அம்மன்னனை ஏழுதீவினுக்கும் இறைவனாக்குவதாகவும் பிரதிஜ்ஞைசெய்தனர். இங்ஙனம் இருவரும் வெவ்வேறாயடி மண்ணுலகு அடைந்தனர்.

அப்பால் விசுவாமித்திரர் அரிச்சந்திரன் வேள்விசெய்து வெகுண்மையுடனிருக்கும் சமயமறிந்து அவன்மாட்டு அணுகி, தாம் ஸர்வேசுவரனைக்குறித்து ஒருபெருவேள்வி செய்யப்புகுவதாகவும், அதற்கு ஐராவதத்தின் குலத்துத்தோன்றிய ஐயக்தமென்னும் யானையின் மீதேறி நீண்டகையாலொருவன் இரத்தினமொன்றைத் தன்வலி கொண்டுமேலெறிய அது செல்லும் உயரமளவு பொருள்வேண்டுமாதலின் அதனைப்பெறும்பொருட்டு வந்ததாகவும் அரசனுக்கு அறிவிக்க, அங்ஙனமே அவன் அவர்க்குவேண்டியபொருட்குவையைவழங்க, அவர் அதனை அவனிடத்தே அடைக்கலம்வைத்துத் தாம்வேண்டும்போது கொடுக்கும்படி சொல்லிவிட்டுப்போயினர். பின்பு, விசுவாமித்திரர் கொடிய விலங்குகளையும் பறவைகளையும் ஏவி அரிச்சந்திரனது நாட்டிலுள்ள உயிர்களையும் பயிர்களையும் அழிக்கச்செய்து வறுமையும் பிணியுமலியச்செய்தனர். அதனாற் பல்லுயிர்களும் வாடி அரசனை யடைந்து தமது அல்லல்கூறி முறையிடலும், வேந்தன் அவர்க்கு அபயம்அளித்து, மந்திரிமாரோடு ஆராய்ந்து வனத்திற்சென்று வேட்டையாடத்துணிந்து படைகளோடு புறப்பட்டு வனம்புகுந்து புலி கரடிமுதலிய பல துஷ்டமிருகங்களையும் கழுகுமுதலிய கொடிய பறவைகளையும் வேட்டமாடிக்கொன்றனன். கொலையுண்டன ஒழிய எஞ்சியவிலங்குகள் விசுவாமித்திரரை அடைந்து நிகழ்ந்ததைக்கூறின. அப்பொழுது, முனிவர் மிகப்பெரிய உடலும் வலியுமுடைய ஒரு பன்றியைப்படைத்து ஏவ, அஃது அரசன்சேனையைச் சாடியோடுதலும், அதனைக்கண்ட மன்னன் அதன்மீது கணையெய்து இரத்தம் பெருக அடித்துத்துரத்திச்சென்று வசிஷ்டாச்சிரமத்தை யடைந்து அவரால் விசுவாமித்திரர் தன்மீதுகோபங்கொண்டு குற்றந்தேடிக் கொண்டிருப்பதையறிந்து திரும்புகாலையில் நிழலும் நீரும் பழமுமுள்ளதொருபொழிலைக்கண்டு அதன்கண் தங்கி நித்திரைசெய்கையிற் சடைமுடியுடைய ஓரந்தணன் தன் மணிமகுடத்தைக் காலாலுதைத்துருட்டித் தன்னையும் தன்மனையாளையும் மகனையும் நகர்ப்புறத்தே தள்ளிச் செல்வமெல்லாங்கவர்ந்துகொள்ள, தான் பலதுயருழந்து இறுதியில் இழந்தநாட்டை மீண்டும்பெற்று மனைவிமக்களோடு வாழ்ந்ததாகக்கண்டகனவை மன்னன் மனையாளுக்குரைத்துக் கலங்கிநிற்க, அவன் தேற்றத்தேறியிருக்கையில், விசுவாமித்திரர், அரசன் தன்மிருகங்களைவதைத்ததும் பொழிலிறுத்ததும் காரணமாகச்சினந்து ஓடிவந்து அரசனது மணிமுடியைக்காலாலுதைத்துத்தள்ளிக் கடுமொழி கூற, வேந்தன் அவரடியிற்சரணடைந்துவேண்ட, முனிவர் ஒருவாறு

கோபந்தணிந்து தாம் அடைந்தகஷ்டத்திற்குப் பிரதிப்பொருள்கொடுக்குமாறு கேட்டனர். அப்பொழுது அரசன் தனது இராச்சியமெல்லாவற்றையும் அவர்க்குப்பொன்னோடு தாரைவார்த்துக் கொடுத்துவிட்டுத் தான்மனைவியையும் மகனையும் உடன்கொண்டு வனஞ்செல்லப் புறப்படுந்தருணத்தில் முனிவர் அரசனைப்பற்றியீர்த்துத் தாம் முன்பு அடைக்கலமாக வைத்தபொருளைக் கொடுத்துவிட்டுப் போம்படி நிர்ப்பந்தித்தலும், மன்னவன் மனங்கொளாத்துயருழந்து அவர் பாதத்தில்வீழ்ந்து அக்கடனைத்தீர்த்தற்கு ஒருமாதத்தவணை அளிக்குமாறு வேண்டினன். அவ்வாறே அவரும் அளிக்கப் பெற்று விடைகொண்டு செல்லுகையில் முனிவர் தமது சீடனான நக்ஷத்திரகனை அவனுடன் அனுப்பி அவனைக்குறைவின்றி உபசரித்துத் தமக்குரிய பொருளை அச்சீடனிடம் கொடுத்தனுப்பும்படி விடுத்தனர். வனத்திற் செல்லும்பொழுதும், கொடியவெப்பத்தாலும் கடும்பசியாலும் பெருமழையாலுமேயன்றி வேதாளகணங்களாலும் முனிவர் இழைத்த பல பெருந்துன்பங்களையும் நுகர்ந்து, முனிவர்தவத்தால் முடுகிக் கொல்லவந்த காட்டுத்தீயினின்று கற்பின் தெய்வமான மனைவியின் தூய்மையால் தப்பிப்பிழைத்துச்சென்றனன். பின்னர், நக்ஷத்திரகன் அரசனை விட்டகன்று தன்னுடன் அயோத்திக்கு வரும்படி சந்திரமதிக்குப் பலவிதமாகத் துர்ப்போதனைசெய்தும் பயன்படாதாக, சந்திரமதியின் தாமவசனங்களால் நக்ஷத்திரகன் வெட்கமடைந்தனன். அப்பால் கங்கையைக்கண்டு அதன்கண்ணீராடிக் காசிக்ஷேத்திரத்திற்புகுந்து தேவாலயத்திற்சென்று தேவனைத்தெரிசித்தான்.

ஸ்ரீ

கடவுள் துணை.

# அரிச்சந்திரன் சரிதை.

[வாய்மையின் மேன்மை.]

காப்பு.

*சீர்திகழல் லிக்கேணிச் சீர்பார்த்த சாரதிமால்*
*ஏர்திகழும் பொன்னுடனே யென்னெஞ்சில்—பார்புகழும்*
*வாய்மையரிச் சந்திரன்றன் வண்சரிதை செப்புதற்குத்*
*தூய்மைமிகத் துன்னிடுக வே.*

---

## கரு - ஆவது அத்தியாயம்.

### நக்ஷத்திரகன் அரிச்சந்திரனைப் பணத்துக்காக நிர்ப்பந்தித்தல்.

பின்பு மனைவிமக்களோடும் நக்ஷத்திரகனோடும் நகரவீதிகளில் மறையோது மண்டபங்களும் கலைகள்பயிலும் கழகங்களும் வளம்மிடைந்த கதிர்மணியிழைத்த எழுநிலைமாடங்களும் பூரணகும்பங்கள்பொலியும் பொன்மாளிகைகளும் பண்டங்கள்நிறைந்த ஆவணங்களும் கண்குளிரக்கண்டு சென்று ஓரிடத்தில்நின்று ஓரந்தணன் மாளிகைக்கு அணுகச் சீடர்கள்சூழ ஓர்யோகியிருக்கும் மடத்தில் சிலநாள் இருந்தனர். அவ்வாறிருக்கையில், நக்ஷத்திரகன் தீயெழ விழித்து மன்னவனை உருக்துச் சொல்லலுற்றனன்: 'அரசனே! நீயேன் முனிவர்தனம் கொடுக்கவில்லை? அறிவிலியே! நீயும் பெரிய அரசவம்சத்திற் பிறந்தாயே! நான் உனக்காகக் காத்திருப்பது மனதில் எண்ணவில்லையே! நீ முன் ஒருமாதம் தவணை வைத்துப்போந்தனை. எல்லாம் ஆய்விட்டன. இன்னுமிரண்டேதிவசந்தான்உள்ளன. உனக்குப்பணம் எப்படிவரும்?

ல்லை எய்யாமை-யெல்லாவறமுந்தரும்"; "பொய்யாமைபொ
ய்யாமை யாற்றி னறம்பிற-செய்யாமை செய்யாமை நன்று"
அஃதொன்றே யமையும். "எல்லாவிளக்கும் விளக்கல்ல சா
ன்றோர்க்குப்-பொய்யா விளக்கே விளக்கு"; அதனினூங்கு
அறிவுமில்லை. இவ்விரதம் காப்பதற்கு எதையும் விடலாம்.
நினக்கே அற்றுத்தீர்ந்த பொருளாகிய எம்மை விற்பது
ஒருபொருட்டோ?' என்று இரந்துவேண்ட, அரிச்சந்திரன்
ஒன்றும்தோன்றாமல் அசைவற்றுநின்று சந்திரமதியின் துணி
வுக்கு வியப்புற்றிருந்தனனாய், நெடுந்தூரம் நினைந்து நெட்டுயி
ர்ப்பெறிந்து, இல்லாளைநோக்கிக், 'காதலி! மன்னர் மன்னன்
மகளே! நீசொன்னசொல் என்செவியில் ஈயம்உருக்கி ஊற்றி
யதுபோலாயிற்று. உடலும் ஆவியும்வேகின்றன. நெஞ்சமும்
நெக்குஉருகுகின்றது. நீமுன் காட்டுத்தீயில் விழவும் மனந்து
ணிந்து உயிர்சுமந்துநின்றேன்; கருணையில்லாத வன்னெஞ்ச
னேன்; இன்னும்என்செய்யேன்? என்னிலும் கொடியவனும்
ஒருவன்உளனோ? என்அறிவும் அன்பும் அழகிது அழகிது!'
எனப்புகன்று, பின்னும், 'துணைவியே! வனத்தில்வருந்திநடக்
கும்பொழுது, பசியாற்களைக்கும் வேளையிலும், குகைகளிலும்
மரத்தின்அடிகளிலும் தங்கும்பொழுதத்தும், அடும் காயும்
அருந்தும் அமயத்திலும், வெயிலில்கன்றியும்மாரியில்விறைத்
தும் இருந்ததருணத்திலும் நின்னைப்பிரியா திருந்தமையின்
சித்தம்சலியாமல் சுகமேஉற்றுஇருந்தேன். உயிர்க்குஊசாத்
துணையாம் நின்னையும்விட்டு உறைகிற்பனோ? கூறாய். பதியும்
இழந்து பத்தினியையும்பிரிந்து மகவையும்துறந்து மண்ணிலு
மிருக்கலாமோ? கண்டார்நகையாரோ? கல்நெஞ்சனென்னாரோ?
மாபாவியென்றும், மானமிலானென்றும், மதியிலியென்றும், திரு
விலியென்றும், தெருத்தோறும்தூற்றாரோ?' என்று கண்ணீர்
பெருகக்கலுழ்ந்து, மநுகுலத்திற்பிறந்த மன்னவனும் மான
தனனுமாகிய அரிச்சந்திரன் மயங்கி அயர்ந்தனன். இவவண
ணஞ்சோர்ந்து உருகும்வேந்தனை நக்ஷத்திரகன்கண்டு, 'ஏடா

அரசப்பதரே! கற்றறிமோழையே! மானமுளையாயின்முனிவா வெறுக்கைநல்காயோ? எவ்வாற்றானுனக்குப் பொருள்எய்துப? வஞ்சித்துப்போகக்கருதிச் சமயம்பார்க்கின்றனையோ? உன்னை உயிரோடுவிடேன். முனிவரிடம்வா;' என்று கையைப்பற்றியீர்க்கக் கண்டசந்திரமதி 'பிராணநாத! எழு எழு' என்று விளம்பிக் கணவன்பாதத்தில் வணங்கி, 'நன்மையே நேரும; அஞ்சேல்' என்றுதேற்றரவுகூற, வேந்தனுமெழுந்து மனமறுக கத்தோடு மனைவிமக்களைக்கையைப்பற்றிஅழைத்துக்கொண்டு மறுகுதோறும்செல்லலுற்றனன்.

---

## கசு - ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரன் மனைவியை விலைசெய்தல்.

அந்நகரில் உள்ளோர் அனைவரும் வெளிவந்து நோக்கி வியந்து, 'இவனுரோ மகாபுருஷன்வருகிறான். மலைபோல்உயர்ந்து எழுத்தூண்போல்திரண்டுபணைத்து முழந்தாள்தடவும தடங்கையும், காதளவும்நீண்டு செவ்வரிபரந்து விசாலமாய்க் கருணையொழுகும் கஞ்சமலர்போன்ற கண்களும், உவாமதி போன்றமுகமும், புன்னகை பொலியும் வாயும, மாதிரம் சிறிதென அகன்றமார்பும், சங்கு, நேமி, கற்பகம், துவசம், கமலம், அங்குசம், வச்சிரம் ஆகிய அரச சின்னங்கள் வரைகளில் அமைந்த அடிச்சுவடும் உள்ளோனுய், வனப்பேவடிவெடுத்தாற்போன்ற இராஜலக்ஷ்மிவிளங்கும் மேனியுடையனுய், இந்நகரை அலங்கரித்துவருகின்றனன். பூமியில்பாதம் வருந்த நடக்கின்றனனே! இஃதென்னே? அவன் அருகில் மகாலக்ஷ்மி போல்வருபவள் மனைவிபோலும். அவள் வனப்புவர்ணித்துச் சொல்லஅமையுமோ! அவள்மருங்கில் மகனைக்கண்ணுறுமின்; மூவுலகிலும நிகர்உண்டோ! காணக்கிடைத்தது யாம்செய்த தவப்பயனே. நுதல்விழியும் சடைமுடியும் புலியதளும் யானை

புரியுந்துறந்து இவ்வுருவெடுத்துச் சங்கரனே விசாலாக்ஷியோ டும் முருகனேடும் வருகின்றனனே! ஆன்றிச் சங்கும்நேமியும் துறந்து இரண்டுபுயம்மறைத்து மகாவிஷ்ணுவே மகாலக்ஷுமி யோடும் மன்மதனேடும் வருகின்றனனே! ஆயிரங்கண்ணை மறைத்து அயிராணியோடும் சயந்தனேடும் தேவேந்திரனே வருகின்றனனே!' என்று வியந்து ஒருவர்க்கு ஒருவர் பேசிக் கொண்டிருக்கையில், அரிச்சந்திரமன்னவன் மெல்லமெல்ல நடந்து மனைவியோடும் மகனேடும் செல்லலுற்று அங்குள்ள அந்தணர்முதலியவர் அனைவரையும் பார்த்து, 'புண்ணியப் பதிவதிவீர்காள்! என்னுரைகேண்மின்; கருணைபுரிந்துகேண் மின்: நான்சூரியவம்சத்திற்பிறந்த திரிசங்குமன்னவன் குமா ரன்; பூமண்டலசக்கிரவர்த்தி; அரிச்சந்திரன்என்னும் பெய ரினேன். விசுவாமித்திரமாமுனிவருக்கு இராச்சியமும்பொரு ளும் முற்றும்வழங்கி மனையாளோடும் மகனேடும் காடேசர ணமாகப்புகுந்தேன். முன்விசுவாமித்திரமுனிவர்க்கு வேள்வி க்காக நான்கொடுத்த தனத்தை என்னிடத்திலேயே அடைக்க லம் வைத்துப்போயினர். இராச்சியமும் பொருளும் முனிவர் பாலாயின. பின்அவர் தம்தேசத்தில் பொருள்தேடிக் கொடுக்க கல் ஆகாதென்றுகட்டளையிட்டு நக்ஷத்திரகனையும்கடன்வாங்க அனுப்பி ஒருமாதம் காலவரையறையும் அளித்துவிடுத்தனர். வைத்தநாள்வரையும்அணுகியது. அஃது இறுக்கவணிலேன் ஏங்குகின்றேன். வருவாயும்இல்லேன். பொருள்வாய்ப்புக்கே துவும் காண்கிலேன். இல்லக்கிழத்தியை விலைசெய்தாயினும் முனிவர்க்குத் திரவியம்தேட முயலுகின்றேன். அந்தணனு க்குப் பொருள்கல்குவேன்என்று வாய்நேர்ந்துபிறழல் அற மோ! மறமன்றோ! வைத்த அடைக்கலங்கொள்வது மிக்க தீவினையன்றோ! இருடிகள் பொருள்கொள்வெனேல் எச்சம் இழந்து எழுமையும் எரிவாய்நரகு எய்தவன்றோ நேரும். நாப்பிறழாமே முனிவர்க்குப்பொருள் நல்கவேண்டும். அத ற்கு ஐராவதவம்சத்திற்பிறந்த ஜயந்தம்என்னும் யானைமேல்

நின்று இரத்தினம்எறிய அதுசெல்லும் உயரத்தின் அளவு நமணியக்குவியல்வேண்டுவது. அவ்வளவுபொருள் விலைகொடுத்து இவளைக்கொண்மின். இவள்என்மனைவி ; சந்திரமதிப்பெயரினள் ; கன்னோசிநாட்டுக்கன்னபுரி மன்னவன்மகள் ; அருந்ததிக்கற்பினள் ; நம்மாணைகடவாது ஏவல்புரிவாள் ; இறையும் ஐயுறவின்றிக் கொள்ளுங்கள் ; கொள்ளுங்கள்' என்று விலைகூறினன். அதுகேட்டு நகரவாசிகள் அனைவரும் தத்தம்செவித்தொளைபொத்தி, 'ஆ! ஆ!! அவனி அனைத்தும் ஆளும்அரசர்க்கரசனுக்கும் என்ன ஆபத்துநேர்ந்தது!' "கூத்தாட் டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம் - போக்கு மதுவிளிந் தற்று"; "ஒருநாயகமாயோட வுலகுடனாண்டவர் கருநாய்கவர்ந்தகாலர் சிதைகியபானையர் பெருநாடுகாண விம்மையேபிச்சைதாம்கொள்வர்" என்பதாகச்செல்வம் நிலைஇல்லை. எம்மாண்புள்ளார்க்கும் இடர்வரும் என்பது ஒருதலை. அறநிலைதவறின்றி ஒழுகும்அரசனுக்கும் அருந்துயர்எய்துமோ? விதியை யார் வெல்கிற்பார்!' என்றும், 'வரையாது வழங்கிய வள்ளலுக்கும் வஞ்சகஞ்சூழ்வாருண்டோ? அவர்நெஞ்சு என்னகல்நெஞ்சோ? தவஞ்செய்து அகங்காரமமகாரங்களை அறுத்து அனைத்துயிரினும் அன்பு பூண்டு அருளேமேனியாக்கொண்ட அந்தணர்க்கு அதியனாய் அருந்தவனானவிசுவாமித்திரனும் உபகாரிக்கு அபகாரம்செய்தனனாயின் அறநெறிநிற்பார் ஆர்'? என்றும், 'இன்னணம்கொடுமைபுரிவாரை இதுகாறுமெங்கும் கண்டிலேம்' என்றும், 'இவ்வரசன்கையில் இருந்த இராச்சியமும்பொருளும் எல்லாம்வழங்கியும்இன்னும்வலிமைசெய்துபிடித்துப்பொருள்கேட்கிறான்; அவற்கென்ன பேரவாவோ? காதலியும் கான்முளையும் அன்றிக்காசளவும் காவலன்கைத்திலனே! பதியிழந்து பணமிழந்து பதாதியாகப் பத்தினியோடு பழுவம் உற்றபின்னும் பருவரல் இயற்றுவது அறமோ! அம்முனிவனுக்கு என்னகதி அமையுமோ! யாமும் ஆதுலர்பலரையும்கண்டோம் ; மானமில்லாராய்ப் பேரவாக்கொண்டவர்களாய் மரியாதையறியாதா

ராய்க் கொடுந்தொழிலராய்க் கையராய்ப் பிறர் உண்டியும் உடையுமே நுகர்ந்துமுடித்தும்பொருள்வவ்வுவாருமுளர் ; ஆயி னும் ஆர்வமோடுஈல்குவார்க்கு இன்னல்புரிவாரை எங்கும் கண்டிலோ' மென்றும், 'முற்காலத்தில் விரோசனன்மகன் பலி சக்கிரவர்த்தி மூவுலகும் கைக்கொண்டு இறுமாந்திருக்கை யில் இந்திரன் அரசிழந்த துயரத்தினால் திருமாலிடம்சென்று சரண்புக்குத் தனக்குற்றதன்மையை நிகழ்த்த, அச்சுதனும் அருள்புரிந்து காசிபமுனிவர் பத்தினி அதிதிதேவிவயிற்றில் பிறந்து குறள்மாணியாம் படிவங்கொண்டு மாவலியின்வேள் விச்சாலே நணுகி மூவடிநிலம் வேண்ட, அவன் திருமால்என்று அறியாமல் கொடுக்க இயன்று குண்டிகையினின்றும் நீர்த்தா ரைவார்க்க, அவறகு ஆசானாகிய வெள்ளி தடுத்தும், அவன் கேளாமல் தானஞ்செய்ய, அவ்வெள்ளி சிறிய உருவங்கொ ண்டு குண்டிகை நீர்த்தாரையை அடைக்க, குறட்பிரமசாரி கண்டு துரும்பால்கிளற வெள்ளியின்கண் ஊறுபட்டது. மா வலி அதுகணிசியாது மூவடிவழங்கினன். உடனே நெடுமால் மூடி அண்டங்கீண்டுமேற்செல்லவும், அடிபாதலத்தில் அழு ந்தவும் வளர்ந்து ஓரடியால் மண்ணையும் ஓரடியால் விண்ணை யும் அளந்து மற்றோரடிக்கு இடம் இன்றாக மாவலியின் வே ண்டுகோளின்படியே அவன் தலையிலேயே அடிவைத்துப் பாத லத்தில்அழுததினன். பலிசக்கிரவர்த்தி தேவர்களை அடக்கி னன்; ஆதலின் அவன் உபகாரியாயிருந்தும் தேவர்களுக்காகத் திருமால் அவனைப்பாதலத்தில் அழுத்தினன். மற்றோர் கால த்தில் ஜமதக்கினிபகவான் குமாரனாகிய பரசுராமன் க்ஷத்தி ரியவம்சங்களைக்கருவறுத்து மண்முழுதும் தன் அகப்படுத்து வேள்விசெய்து காசிபமுனிவருக்குப் பூமிமுற்றும் வழங்கி னன். உடனே காசிபமுனிவர் எனக்குத்தானஞ்செய்த பூமி யில் தாதாவாகிய நீ இருக்கலாகாதென்று துரத்தப் பரசுரா மன் கடலில் தன் குடாரத்தைவீசிக் கடல்விலகிய இடமான மகேந்திரவனச்சாரலில் எய்தினன். பரசுராமன் சினம் மிகு

ந்தவனுதலின் காசிபமுனிவர் உலக நன்மைக்காக உபகாரி யைத் தாத்தினர். அவ்வாறின்றி, அறமூர்த்தியாய் அருட்கடலாய் ஆறியமனத்தனாய் அமரர்பணிதலைமேற்கொண்டு ஒழுகுபவனான அரிச்சந்திரனிடம் இவ்வாறு அருந்துயர் இழைத்தல் மிக்க அதிசயம்! இவ்விசுவாமித்திரமுனிவர் அரசனாயிருக்கையில் வேட்டைக்குவந்து இளைப்பு அடைந்தகாலத்தில் தன்னை உபசரித்த வசிட்டமுனிவரைக் காமதேனு கொடாமைக்காக எதிர்த்துப் போர்செய்தவர். இப்பொழுதோ அரிச்சந்திரன் செய்த உதவியைமறந்து அவனுக்கே தீங்கு இயற்றுகின்றனர். ஆதலின், உபகாரிக்கு அபகாரம்செய்வதே இவர் இயல்பு' என்றும், 'இம்மன்னவன் வேதாளத்தினாற் பிடியுண்டவன்போல் அம்முனிவர் ஆணைக்கு உட்பட்டு நீதியின்றி உழல்கிறான். தானம்என்பது தாதாவின் மகிழ்ச்சியால் கொடுப்பது. அஃதின்றிக்கைத்தொன்றுமிலனாய்க் கானம் சென்றபோது எவ்வாறுநல்குவான்? பொருள் கிடைப்பின் தாராதொழியான் எனவெண்ணாது, பொருள்வவ்வப் பேரவாவால் வருத்தின் அதற்கு உடைந்து சுகத்துக்கேதக்க மெல்லியலாய்த்துயர்உறப்பொறுத் தன்மையளாய்க் கற்பின் கிழத்தியாய் அன்புடையள் ஆன பத்தினியை அடிமையாய் அருளின்றி விற்கத்துணிந்தனனே! இவனுக்குவேண்டும் பொருள் உதவி, விலைசெய்யவிடாமல் மன்னவனோடு மகிழ்ந்திருக்கச் செய்வாரை இந்நகரில் கண்டிலம்' என்றும் இவ்வாறு அந்நகரில் வதியுமாக்கள் ஒருவர்க்கொருவர்சொல்லி, 'இனி இங்கிருந்து இத்துயர்காண்பதினும் ஏகுவதே நலம்' என்று நெட்டுயிர்ப்பெறிந்து கண்ணீர்ஒழுகக் கலங்கிநின்று இதுகாணல் ஆற்றாராய் அவரவர் தத்தம் அகம்புகுந்தனர். காசிநகரத்தில் உள்ள நான்குவருணத்தவரும் பொருள்தரத் திரமில்லாராய், 'யூபுனையப் (படுகுழியினின்று ஏற்ற யானையே வல்லதாகுதல்போல அரசர்க்குவரும்இடர் அரசராலேயேநீக்கத்தக்கது; நம்மாற்றலுக்கு இயலாதே!' என்றுதுக்கித்து இரங்கினர்கள்.

னர், கண்ணீர் ஆறாகக் கலுழ்ந்து செல்லாநிற்கக்கண்ட நக ரத்துமாதர் நடுங்கி, 'பாரத்தினால்வருந்திப் பயத்தினால் விதிர் விதிர்த்து அடிபெயர்க்க ஆற்றாளாய் மெல்ல வழிக்கொண் டேகி மலரினும்மெல்லிய மேனி மெலிவெய்தி அலக்கணுற் றுத் தளிரினும் மென்மையான பாதங்கள் பரலூன்றிக் குருதி சோரவும் குழல்சோரவும் பேய்பிடித்தவள்போலச் செல்லு கின்றனளே! இவள் முற்பவத்தில் எப்பவம் செய்தனளோ! அறிகிலேம். விதிவலிது. பிரமதேவன் இவ்வளவு மென்மை யான மேனியைப்படைத்து அவ்வளவு கொடிய துன்பத்தை எவ்வண்ணம் கற்பித்தனனோ! இக்கொடியவேதியன் எவ்வெ த்துயர் உறுத்துவானோ!' எனமாழ்ந்துகலுழ்ந்தனர். வேதி யன் விரைந்துசென்று வீட்டகம்புக்கனன். சந்திரமதியும மகனும் துயராற்றவலியிலளாய் மெலிந்து மெல்லக் குறுகி னாள்.

---

## க௮ - ஆவது அத்தியாயம்.

### நக்ஷத்திரகனுக்குப் பொருள்தரல்.

பின்பு கதிரவன் குலத்துதித்தோனாகிய காவலன் மனைவி மக்களைத்தணந்து மனங்கலன்று கதுப்பில் ஊன்றியகைய னாய்ச் செயற்பாலதொன்றும்தோரானாய் அலமந்து அசை வற்றுநின்று கண்ணீர் ஆறாய்ப்பெருகச் சிந்தையுற்றிருக்க, நக்ஷத்திரகன்நோக்கி, 'அறநெறிதவறாது வாய்மைக்கு வயப் பட்டு முனிவர்க்குப் பொருள்நல்க மனைவியையும் மைந்தனை யும் விலைசெய்துவிட்டனை. நேரவேண்டுவதேதோ நேர்ந்து விட்டது. இனிக்கவலைகொண்டு பயனென்? பிரதிக்ஞையை நிறைவேற்றப் பிராணனையும் புதராய்க்கருதும் உன்னை நிக ர்ப்பவரும் உளரோ! எவ்வுலகும் ஒழுக்கத்தால்வென்றனை. இனிஎக்கமுறேல்; கவலேல்' எனத்தேற்றினன். அண்ணலும்

சிறிதுஆறி நெட்டுயிர்ப்பெறிந்து எல்லாம் தேவதேவன் திருவிளையாட்டு எனத்தேறி நக்ஷத்திரகனைப் போற்றிப்பணிந்து, கௌசிக முனிவர்க்கு இறுக்கவேண்டும் வெறுக்கைமுற்றும் கொள்கவென அளித்தனன்; நக்ஷத்திரகனும் அகமகிழ்ச்சியோடுபெற்றுப் பின்னும் அரசனைநோக்கி 'வள்ளால்! நீ தந்த வெறுக்கைமுற்றும் நின்னோடு நெறிக்கொண்டு இடர்உழன்று பசிநோன்று இதுகாறும் பின்தொடர்ந்த எனதுகூலிக்கு அமைவதாயிற்று; இன்னும் முனிவர்க்குரியதுசேரவேயில்லை. வேறு விரகேதேனும் இயற்றி அவர்க்குத்தரவேண்டும் தனம் தேடித்தருக. இன்னும் தவணையும் சிறிதேஉள்ளது; இதற்குள் அதுதந்து உன் உண்மையை நிலைபெறுத்து' என அறைய, அஃது இருசெவியினும் எஃகு உருக்கி ஊற்றினாற்போல் நுழைந்து இறைமகன் உடலம் உருக்கத் தளர்ந்து ஊக்கம் அழிந்து, 'அறவாழியந்தணனே! அனைத்துலகும் அளிப்பவனே! ஆபத்சகாயனே! அநந்தனே! இதுவும் உனக்கோர் விளையாட்டோ? மெய்ஞ்ஞானமூர்த்தியே! எனது அல்லல் ஒழியாயோ?' எனப்பகவானைநினைந்து, பின்பு அந்நக்ஷத்திரகனைநோக்கி, 'அந்தணர்மைந்த! அருமறையோதி அறம்தெளிந்தோய்! நீயும் அடாதது அறைதியோ! இஃதென்ன புதுமை! கண்ணெதிரில் கண்டதை மறைக்கின்றாயே! நேரே அசத்தியம் பேசுகின்றாயே! உனதுகூலிக்காகத் திரவியம்கொடுக்க முனிவர் ஆணை உண்டோ? கிஞ்சித்தும் கிருபையின்றிக் கூறுகின்றனை. உன்கையில் தந்தபொருளை என்கையில்தானேகொடு; —னகரும சிறிது உதவுகிறேன்; அன்றி நகரத்துள்ள நான்மறையோரிடம்சென்று விண்ணப்பஞ்செய்து அவர் ஆணைப்படி நடக்கிறேன்' என்று அடிபணிந்து கூற, நக்ஷத்திரகன் சினந்து தீயெழவிழித்து, 'அரசப்பதரே! கேள்; உன் அறிவு என்ன அறிவு! என்கூலிக்கு ஒன்றும் கொடாமல் வஞ்சித்துச் செல்ல நினைக்கின்றாயோ? விசுவாமித்திர முனிவர் சிஷியன் நான், விடுவேனோ? மதிகேடனே! நினைத்துப்பார்; முனிவர்

எனக்கு உண்டி உதவி உபசரிக்கப்புகன்றிலரோ? பொய்யா விரதனெனப் பெயர்பூண்டு, பொய் உரைப்பதே தொழிலாகக் கொண்டனை. உன்னோடு நெடுந்தூரம் நடந்து ஊர்களையும் பதிகளையும் சேரிகளையும் கடந்து முள்ளும் பரலும் நிரம்பிய அதரில் அடிகள் கொப்புளித்துக் கிழிந்து குருதி சோரவும் வெயிலில் தலைவெடிக்கவும் படாதஇடர் எல்லாம்பட்டு ஆகார மின்றித் தண்ணீரும் காற்றுமே அயின்று பிணியுண்டு உடல் இளைத்துப் புலிகளும் கரடிகளும் சிங்கங்களும் அரவுகளும் சரிக்கும் அரணியத்தில் அகம்நடுங்க மெய்நடுங்கி வலியொடுங் கிக் குற்றுயிராய் உறக்கமின்றி உன்னையும் உன் மனைவிமக்க ளையும் காக்க மந்திரம் உச்சரித்து உங்களைக் கண்ணிமையில் வைத்துக் காத்து, வேதாப்பியாசமும் கலைபயிலலும் இழந் தேனை வஞ்சித் தேகவோ இம்மாற்றம் மொழிந்தனை? ஆ! உன் சத்தியம் நன்று நன்று! முனிவர் மாணுக்கர் அனைவரும சுகமே முப்பொழுதும் உண்டு வேதவேதாங்கங்கள் சற்றுக களிப்போடு அமர்ந்திருக்க, எனக்கு நேர்ந்த இடுக்கணைவ்வளவு? நினைத்துப்பார். தினங்களை எண்ணு. ஒவ்வொரு தினத்துக்கும் திருப்தியாக அன்னம் கொடுத்தால் எவ்வளவு செல்லும் என் றுவகை ஆலோசித்து அறிந்துகொள்; அஃது இன்றி என் கையில் வந்ததிரவியத்தை உன்வசம் கொடுத்துவிட்டு, ஊரில் அறிவுமயங்கிக்கிடக்கும் கிழவர்களிடத்தில்சென்று, அவ்வளவு இவ்வளவு என்று விவாதமிட்டுத் தீர்த்துக்கொள்ளவேண்டிய சண்டிவாளம் என்ன? கையில்கிட்டிய பனலை யொழிக்க முகில்பிற்றும் களிபார்த்திருப்பதோ மதி! நன்று நன்று! யான் எனக்குச் சேரவேண்டும் பொருள் எடுத்துக்கொண்ட பின்தான் முனிவர்க்குப் பொருள் நல்குவேன்; முனிவரும் தனியே யென்னைக்கூவி என்செவியில் மறையாய் ஓதியதும் இதுதான். இவ்வாசைபற்றியன்றோ உன்னுடன் எங்கும் உழன்றேன்' என்று கடுமொழிபகர்ந்து விளவி, இதோ முனி வர்பாற் சென்று 'நம்பொருள் நல்கவில்லை; என் மெய்

வருத்தக் கூலியொன்றே வலிதில் வவ்வினேன்' எனமொழிந்து, 'உன்னை யென்செய்கிறேன் காண்' என்று கடு நடையாகச் செல்லலுற, அரசன் தொடர்ந்து தொழுது மறித்து இருத்தி, 'மெய்ஞ்ஞான வேதியர் மதலையே! முற்று முணர்ந்த முனிவர் மாணக்கனே! அருள்சிறிதும்அறியாயோ! உன்மனம் எதனாலியன்றதோ! அந்தணர் அண்ணலான முனிவர்க்கே என்வயின்கருணையின்றாயின் உனக்கெவ்வாறு கருணை வரும்! இஃது என்விதியின் கொடுமையே அன்றி மற்றன்று' என உள்ளமழிந்து, 'முற்புலத்திற் செய்தவினை இன்னவண்ணம் மூண்டது. நின்னைவெறுத்து என்பயன்?' என்று தன்னைப்பலவண்ணம் வெறுத்துக்கொண்டு, 'ஆபத்பாந்தவ! அசரணியசரணிய! எங்குமுள்ளாய்! எல்லாமுணர்ந்தோய்! இறைவா! அடியேனை அளியாயோ! இடர்க்கடற்கரை ஏற்றாயோ' எனச்சாவேசுவரனை அடைக்கலம் புகுந்து, 'எவர்பால் செல்கேன்? எங்ஙனம் நாடுகேன்? எவ்வாற்றான்ஈட்டுவேன்? மனைவியையும் மகனையும் இழந்து மயங்குதற்கு என்ன மாபாவம் செய்தேனோ? முன்சன்மத்தில் பூரணமான அறுசுவையுண்டியுண்ணும் அந்தணனைக்கைப்பற்றி ஈர்த்து உண்ணவொட்டாமல் ஓட்டியும், மனைவியையும் மக்களையும் மனையையும்போக்கியும் மனமறுக்கம் விளைத்திருந்தால் அன்றி இக்கொடுந்துயரம் நுகரநேராது' எனமொழியாநின்று, முனிசிடனைப்பணிந்து, 'நின்வயிற்றந்த பொருள் என்னிடம்தா. உனக்குக் கொடுக்க வேண்டும் திரவியம் முற்றும் கொடுத்துவிடுகிறேன்' என்று இரந்துகேட்க, நக்ஷத்திரகன் சினவிச் செங்கண் தீயெழ விழித்து, 'என்னை மதிகேடனென்று எண்ணினையோ? என்கைப் பொருள் உன்கைக்கொடுத்து, மகாராச! விசயீபவ எனப் போற்றி ஆசிகூறி, அருள்செய்து எனக்குஉணவுகல்கு என்று எண்சாணுடலும் ஒருசாணாகஒடுங்கி, முகங்கறுத்துப் பல்லைத் திறந்து இளிவரல்எய்தி, நின்முகம்நோக்கிச் சமயம் பார்த்து, முகமன் இயம்பி, இரக்கவேண்டுமோ? கையில் வாய்த்தகறை

யைவிட்டுக் குன்றுதோறும் இருள் இருக்கும் இடந்தேடப் புகுவாருமுளரோ! தன்காரியத்தில் கண் எவனுக்குமிருக்கு மன்றோ? காட்டுப்பூனை கல்வியளவில் மீறுமாயின் என்னைப் பொருளும் உனக்குவரும். இப்பொருளில் ஆசைவையாதே. ஏன்கறுக்கவும் சிவக்கவும் விழித்துப்பார்க்கிறாய்? தப்பித்து ஓட வழிதேடுகிறாயோ? அன்றி என்னைப்பொருள் கவரநினைக்கிறாயோ? என்பிராணனையாவது விடவேன், பொருள்கொடேன். நீ என்சிரத்தைச் சேதித்துப் பொருள்வவ்வுவையாயின் கொள்ளலாமேயன்றி நான்பிராணனோடிருக்கையிற் சிறிதும் வஞ்சிக்கமுடியாது, அதுசெய்யத் துணிதியாகில்தாமதமின்றிக்கடுகச் செய்' என முனிமாணாக்கன்மொழியக்கேட்டுமனங்கலன்று தலைகவிழ்ந்துகண்ணீர்சோரத் திகைத்துநின்றனன்.

---

## கக - ஆவது அத்தியாயம்.

**நக்ஷத்திரகன் அரிச்சந்திரன் கொடுத்ததைத் தானே வைத்துக்கொண்டு முனிவர்பொருள் கொடுக்க மீண்டும் நிர்ப்பந்தித்தல்.**

'இம்முனிவர்க்கு வெறுக்கை கொடுப்பதில் எனக்கு ஏன் இவ்வளவு அவிவேகம்? மனைவியையும் மகனையும் விலைசெய்த போழ்தே நக்ஷத்திரகனுக்கும் சிறிது வாங்கிக் கொடுத்திருந்தால் உத்தமமாயிருக்குமே! அன்றியும் யானே நேரில் எடுத்துச் சென்று முனிவர்கையில் கொடுத்திருந்தால் இதுவும் தீர்ந்திருக்குமே! ஒருவகையும் தோன்றாமல் மூடனாய் மோசம போனேனே! இனிஎவ்வகையில் விசுவாமித்திரமுனிவர்க்குத் திரவியம்கொடுப்பேன்? வருவாய்க்குவகையொன்றும் காணேனே!' என்று தனக்குள்ளே பச்சாத்தாபப்பட்டுக்கொண்டு, தலைகவிழ்ந்து இருக்கும் இராசனை நக்ஷத்திரகன் நோக்கி, 'பயனற்றவனே! பதரே! அதம! உன்னை இதுகாறும்பின்தொடர்ந்து என்னபயன் பெற்றேன்? காட்டில் எறிக்கும் நிலாவும் தூங்கினவனைக்கண்டு தொழுகையும் போலாயிற்றே! ஏன் ஒன்றும்

உரையாமல் மரம்போல் நிற்கின்றனை ? தனம் தரசக்தியில்லை ; சத்தியவாதியல்லேன்' என்றுசொல்; இல்லாவிடின் எழுந்திரு; என்திரவியமாவது கொடு ; இரண்டில் ஒன்றுவிரைந்துசெய் ; இனிநான் இங்குத்தாமதிக்க ஒண்ணாது ; இளைப்புத் தீர்த்துக் கொள்ளஇல்லம்செல்லுகிறேன்; ஊணுமில்லை, உடையுமில்லை, உறக்கமுமில்லை, ஜபமும், தபமும், ஓமமும், அத்தியயனமும் உன்னால் நாசமாயின. "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" ஆதலின் ஒழுக்கம் கெட்டுப் பதிதனானேன். எல்லாவின்னலும் உன்னால் துன்னின. இனி எவ்வாறுஉய்வேன்' என்று இகழ்ந்துகூற, மன்னவன் முனிமாணுக்கனைப்போற்றி, 'அருட்கடலே! அந்தணர் மணியே! சுவதேசத்தைவிட்டுப் பரதேசமும் வனமும் திரிகையில் அறுசுவையுண்டியும் அன்னத்தூவிபொதிந்த அமளியும் அரும்பெறற்கௌசேயமும் பெருவிலையவணிகளும் எவ்வண்ணம் வாய்க்கும்? நும்போலும் கற்றுணர்ந்த பெரியோர் நாடும், காடும், நல்குரவும்,செல்வமும், இன்பும், துன்பும் ஒப்ப நினைவார்கள் ; அஃதின்றி என்குற்றமே கூறிக்காலம்கழிக்கின்றீர். நீர் குணக்கடல். நான்குற்றக்கடல். உம்முடையகுணம் போல என்குற்றம் அளவிடலரிதே. இனி வீணுக வாய்நோந்து வருந்தவேண்டாம். கருணாநிதியே! இதுகாறும் செய்த தவறுகளைப் பொறுத்தருள்க. நீவிர் நும்மனைக்குச்சென்று சுகமேயிருக்கலாம். காலத்தில் உண்டு உறங்கிப் பசியின்றி வேதாத்தியயனம் செய்து ஜபதப ஓமங்களும் செய்யலாம் ; ஏகுமின். ஆயினும அடியேன ஒருவிண்ணப்பம் செய்வதுளது; கேட்டருளுதி' என இரந்து 'மனைவியையும் மகனையும் விலைசெய்த பொருளோ நும்பாலதாயிற்று. விசுவாமித்திர முனிவர் பொருளுக்கு வகையொன்றுமில்லை. என்செய்து தருகேனே? ஒன்றும் தோன்றவில்லையே!' எனமொழிந்து மனம் மறுகி மாழ்கிச்சிந்தித்து, 'மனைவியும் மகனும்போய் மானமும கெட்டு, இவ்வுடல் இருந்து ஆகும் ஊதியமென்! என்னுடல்

துறப்பதே இன்பம். ஆயினும் இருஷியின் இரணம் தீர்க்காது இறப்பது அறமன்றே!' என அலமந்து நினைந்து நினைந்து ஓர்வகை துணிந்து, 'முனிமாறுக்க! ஈமவர்வந்தவர்களில் யாரொருவனேனின்றேன். என்னையார்க்காகிலும் விலைப்படுத்திப் பொருள்கொண்டேகுக' எனப்பணிவுடன் அடியணிந்து பகர்ந்தனன்.

---

## உ ம் - ஆவது அத்தியாயம்.

### நக்ஷத்திரகன் அரிச்சந்திரனை விலைகூறல்.

பின்னர், பார்ப்பனச் சிறுக்கனும், சணப்புள் வீட்டுக கோழி தானே தளைப்பட்டதுபோல் தன்வாசகினாலேயே சிக்கிக்கொண்டான் என்றுநினைத்து, உள்ளத்தில் உவகைகொண்டு, அரசனைநோக்கி, 'உன் இஷ்டப்படி எல்லாம் செய்யப் பிணைப்பட்டேனோ?' என்று உரைக்கப் பின்னும் மன்னவன் அடிவீழ்ந்துவேண்ட, மனமே இல்லான்போல்பாவித்து, உள்ளத்தில் உவகையோடு 'ஓம்' என ஒருப்பட்டு உடனே எழுந்து அரிச்சந்திரன் கையைப்பற்றிப் பஞ்சாங்கச் சுவடியின் கயிற்றால் அகங்கை யிரண்டையும் அணைத்துக்கட்டி, அரசர் மறுகில் அழைத்துக்கொண்டு செல்லாநின்று, அந்தணர் அரசர்வணிகர்முதலிய அனைவரையும்அழைத்து, 'இவன் அயோத்திக்குஅதிபதி; அருக்கன் குலத்தில்உதித்தவன்; அறநிலை திறம்பாதோன்; அரிச்சந்திரநாமதேயன்; அருந்தவர் அண்ணலாகிய விசுவாமித்திரமுனிவர்க்கு அரசாட்சிமுதலிய அனைத்தும் அர்ப்பணம்செய்து, அவர் அடைக்கலம்வைத்த பொருளைத்தர ஆற்றலில்லானாய் அரணியம்துருவி அலக்கண் எய்தி ஈண்டுக்குறுகி இல்லாளையும் இளையோனையும்விலைசெய்துபெற்றபொருளைஎனதுகூலிக்கு நல்கினன். உயர்ந்தமலையொன்ற யானையின்மேல் கொடியரொருவன் இவர்ந்துநின்று மணிஎறி

யும் உயர்ச்சி அளவுபொருட்டுவியல் கௌசிகமுனிவர்க்குநல் கவேண்டும், அதற்காக இவனைவிலைசெய்கின்றேன். இம்மன்ன வன் உலகெல்லாம்ஒருகுடைக்கீழ் ஆண்டவன்; மன்னுயிர் அனை த்தும்தன்னுயிரென அன்போடுஓம்புதல் செய்தவன். கலைக் கடல் கரைகண்ட கருணைக்கடல். வேள்விகள் அளவறவேட்டு மாதவர்க்கும்மற்றவர்க்கும் மகாதானம்வழங்கினோன். கௌசிக முனிவர் அருளால்சரீரத்தோடு சுவர்க்கமடைந்ததிரிசங்குமகா ராஜன்மைந்தன். வாய்மைதிறம்பாவலிமையுடையோன். நிகரில் லாதநின்மலன். இவனைவிலைகொண்டுபொருள்நல்குமின். செல் வம்மிக்கோரே!' எனவிலைகூவ, அதுகேட்டநகரவாசிகள் எல்லா ம் மிகவும்மனம்வருந்தி 'மன்னவர்மன்னவனுக்கும் துன்பத்துள் துன்பம்தொடர்ந்ததே! ஜகதீசுவரனுக்கு அருளில்லையே! இப் பார்ப்பனன்மனம் வைரத்திலும் வன்மையுள்ளதே; ஐயமில் லை; நெடும்பாவி. இவன்எவ்வண்ணம் அந்தணர் குலத்தில் தோன்றினனோ அறியேம்' எனமொழிந்து இத்துயரைக்கண் ணுறல் ஆற்றாராய், அவரவர்தத்தம்அகம்சென்றனர். இவ்வம யத்தில் கௌசிகமுனிவரும கரந்துவந்து இயமனை அழைத்து, 'நீசண்டாளரூபியாய் வீரபாகுஎன்னும் பெயரினனாய்மணிகர் ணிகைக்கரையில் மயானத்துக்குத்தலைவனாய் மன்னி, மன்ன வனை விலைகொண்டு அடிமையாக்கிப்புலைத்தொழில் புரிவித் துப் புன்கண் எய்துவித்துப் பொய்புகலச்செய்' என உரைத் துச் சென்றனர். நமனும் முனிவர் சொன்னவண்ணமே இ யைந்து, பயங்கரமான தோற்றமும் சிவந்தகண்களும் செம்பு போன்றபங்கியும் தடித்தஉடலும் வெடித்தகுரலும்உடையனா ய்க்கடுமொழியே கூறுவோனாய்த் தோலாடைதரித்து அரக்க ன்போன்றவனாய் வள்வாளுருவிவலங்கைப்பிடித்து இடங்கை யில் எழுத்தாணிஊன்றி வீரவாகு என்னும்பேர்பூண்டு மது ப்பருகிக் களிகொண்டவனாய்க்குஞ்சிசோர மெய்மறந்து அடி க்கடித்தட்டித்தடுமாறி வேந்தர்வீதியினூடுபுகக் கண்டவர்வெ ருவிவிரைந்தோடினர். அப்புலையன் மெல்லமெல்ல மதுமயக்க

த்தால் தட்டுத்தடுமாறித் தீவிழித்துத்தெழித்துக்கொண்டே நக்ஷத்திரகனும் நரபாலனும் நடக்கும்வழியில் எதிர்வந்துநின்று, கொடுமையுடையநக்ஷத்திரகனை நோக்கி, 'ஏன் உரத்துக் கூவுகின்றனை? வினவுவாரின்றி ஏன்வீணாய் விளித்து விளம்புகின்றனை? மிகஉயர்ந்து பருத்துமகாபுருஷன்போல் நெடுங்கையனுகியநரன்யாவன்? நீஏன்கயிற்றால்கட்டியிழுக்கின்றனை? மறையாமல் உண்மை உரை' என அறைய, முனிமாணுக்கன் சினந்து துரும்பையிடையிட்டு 'நீபுலையன், யானோவேதியன்; உன்னோடுபேசல் எனக்கு இயலாது. ஒன்றும்பேசாமல்வாய் புதைத்துச்செல். இராசகிங்கரர்கள் என்னோடுநீபேசக்காணில் என்னையும் இழித்து உன்னையும் நாக்கொய்வார்கள். தூலையில் விலகிச்செல்' என்றுமொழியக்கேட்டு, வீரவாகுசினந்து நக்ஷத்திரகனைநோக்கி, 'நீதான் இன்றுபுதிதாய்இம்மொழிகூறக்கேட்டேன்; என்திறல்அறியாய்போலும்; என்னென்று உன்னினை. இந்நகரில் தீயொழுக்கமுடையோரைப் பிடித்துத்தண்டனை செய்கையும் நல்லொழுக்கமுள்ளசான்றோரைக்காக்கையும்மேற்கொண்டு அறமும்மறமும் ஆராய்ந்து அறவோரை அளித்து, மறவோரைமட்டின்றிஒறுத்து நகரம்காப்பவன். யான்கருமசண்டாளன் அல்லேன். ஒன்றுபுகல்வென்கேள் அந்தணனாய்ப் பிறந்தானொருவன் அவ்வந்தணர்க்குரியஅறுதொழிலும் அறம்திறம்பாது ஆற்றுவானாயின் அந்தணனும், யுத்தஞ்செய்கை அரசாளுகை முதலிய அரசச்செய்கை பூணின் க்ஷத்திரியனும், ஆவுணம்புகுந்துவாணிகம் இயற்றல்முதலியவணிகர் வினைபுரியின்வைசியனும், மேழிபற்றிமண்ணையுழுது பண்படுத்திப்பைங்கூழ்போற்றல் முதலியவாம் உழுதொழில்முதலிய சூத்திரத்தொழில் இயற்றின் சூத்திரனும், உயிர்க்கொலைமுதலியசண்டாளகிருத்தியம் செய்யின் சண்டாளனும் ஆவான். அன்னவண்ணமேமற்றுமுள்ளமூவரும் அவரவர்சாதிமுறை ஒழுக்கங்கடந்து உயரப்புரியினும் இழியப்புரியினும் அவர்களேகருமசண்டாளர்கள். புலையனாயினும் தன்குலத்தொழில்

புரிந்தொழுகுவானுயின் அவனே உத்தமன். இன்னுங்கேள்; உயர்குலத்திற் பிறந்தும், பசுவைக்கொன்றவனும், சுராமுதலிய வெறி உண்டவனும், உலகைப் பழிப்பவனும், வேதத்தைவெறுத்தவனும், வேதத்தைவிலைக்குவிற்பவனும், இரகசியத்தை வெளிப்படுத்தினவனும், குற்றத்தைக் குறிக்கொள்வானும, கன்னிகைக்குப் பழிப்புப்பகர்வோனும், புறங்கூறுவோனும், சாதியொழுக்கம் தவறினவனும், இழிந்தோனுக் கேவல்புரிவோனும், இழிவான அன்னம் அபலார்க்கு அளித்துத் தான் நல்லுணவு உண்பானும், தெய்வதூஷணம செய்பவனும், குருவை நிந்திப்பவனும், அன்புள்ள அமலன் அடியவரை அவமதிப்பவனும், பிறர்சோர்வுபார்த்துத்திரிபவனும், ஒற்றுமையை ஒழிப்பவனும், உள்ளம் பேதம்செய்பவனும், நித்தியநைமித்திககருமம் துறந்தோனும், வேதியரை நிந்திப்பவனும், வேதியர்பொருள்வவ்வுவானும், தேவாலயப்பொருளை அபகரிப்பவனும், அறத்துக்குரியதனத்தை அபகரிப்பவனும, நம்பினோர்க்குக்கேடுசூழ்பவனும், நன்றிமறந்தவனும், மூர்க்ககுணமுடையோனும், ஆருசினமுடையோனும், மாறுப்பகைகொண்டு மறைந்தொழுகுவோனும், மண்ணாசையாலும் பெண்ணசையாலும் பொருள் அவாவாலும் பிறரைக் கொல்ல நினைப்பவனும், முன் வாககுகத்தஞ்செய்து பின் இல்லை என்று மோசஞ்செய்பவனும், அறவோர் அமைத்த அரசமரத்தையும் முனிவர் சூழல்ல் முருக்கமரத்தையும் துளசிவனத்தையும் அழிப்பவனும், வேள்வியை அழிப்பவனும, தெய்வவழிபாட்டை அவமதிப்பவனும், தேவதர்சனத்தைத் தடுப்பவனும், தெய்வமில்லை என்பவனும், திருவிழாவைப் பழிப்பவனும், வீடு கொளுத்தினவனும், விடமகொடுத்துக் கொன்றவனும், ஆயுதம் கைப்பிடித்து வதை புரிவதே தொழிலாகவுடையோனும், கெட்ட நெறியே ஒழுகுபவனும், தம்மைஆளும் தலைவனுக்குத் துரோகம் நினைப்பவனும், மாயம் செய்பவனும், மகளிரைப்பழிப்பவனும, மாறு

மச்சரமுடையவனும், கருமத்தால் சண்டாளர்கள் நான்சாதி முறைநிற்கையால் கருமசண்டாளன் அல்லன்; கருமசண்டாளனோடு சம்பாஷித்தல்பாவம்; சாதிசண்டாளனோடு சம்பாஷிப்பதில் பாவமொன்றுமில்லை. ஆதலின், என்னுடன் பேசலாம். ஓ பார்ப்பனச்சிறுக்க! கம்பீரமான தோற்றமுள்ள இவ்வுத்தமன்யாவன்? கையிற் கயிறுகட்டிச்செல்வதேன்? பகர்தி' என மீண்டும்வினவ, பூதேவபுத்திரன் வீரவாகு புலையனாயினும் புத்தியுள்ளோன் என்றுதெளிந்து, அரிச்சந்திரன்வரலாறும் இதுகாறும் நிகழ்ந்ததும் வேண்டியபொருளினளவும்கூறினன். 'உனக்கு இவ்வளவு அருத்தம்கொடுக்க ஆற்றலுண்டாயின், புலையரில் உத்தமனே! நீயும்கொள்ளலாம். ஐயுறல் வேண்டாம். வீணே விளம்பினேனென்றுநினையேல்' என்று வற்புறுத்திக்கூற, அப்பெரும்புலையன் நக்ஷத்திரகனைநோக்கி மகிழ்ச்சியோடு மொழியலாயினான்: 'பூசுரபுத்திர! நின்வேண்டுகோளுக்கு இரட்டியாகக்கொடுக்கிறேன். என்வசம் வேந்தனை ஒப்பிவித்துவிடு' என்றுகூறினன். அதனால் உலோகத்தையுருக்கி ஊற்றியதுபோல் இருசெவியும் வெதுப்பெய்த மனம்மறுகி, மன்னவன் சிறிது சினங்கொண்டு தூரத்தில் நின்ற வீரவாகுவைவிளித்து, 'புலையா! நீ அறமுணர்ந்தோனாய் அறைகின்றனை. நான் சூரியகுலத்திற்பிறந்த க்ஷத்திரியன். என்னை அடிமைகொள்வது உனக்கு அறமோ? உடுக்கத்துணியும் இல்லாயாய்க் கோவணத்தோடு நிற்கிறாயே! போர்வையும் தோல்தானே! வீண்வஞ்சினம் ஏன் வாதிக்கின்றனை? வந்தவழிசெல். புல்நுனிக்கும் பெறாத புலையன்நீ. மதுபானத்தினால் மெய்மறந்து பேசுகின்றனை போலும். விலகி விரைந்தேகு. அணுகநில்லேல்' எனவெறுத்துக் கூற, வீரவாகு சினந்து, ' 'என்திறல் அறியகில்லாது இன்ன வண்ணம் இயம்பினை; குலமுறைப்படி கோசருமம் போர்த்துக் கௌபீனத்தோடிருக்கை ஒழிவாகுமா? எனக்கு அடியன் ஆகுவையேல் எவ்வளமும் வெறுக்கையும் நன்குணர்வை. நீவேண்டும்

பொருட் கிருமடக்கு கல்குவல்; ஐயமின்றிக் கண்ணுரக்காண். அடைக்கலம் வைத்த வெறுக்கை இறுக்கஆற்றல்லாய் ! யான் வெறுங்கையன், நீயேசெல்வன்! செல்வமுளேயாயின்வழங்கு; நின்வள்ளன்மைகாண்பேன். புலேயனுக்குவிலேசெய்யக்கூடாது என்று பார்ப்பனச்சிறுவனே வஞ்சனேசெய்து ஓட நினேத்திரு க்கின்றனே என்பதில் ஐயமில்லே. இளேயோன் என்று ஏய்த் துச் செல்ல எண்ணுகின்றனே. அதிக்கிரமம் செய்யாதுஉய்தி. ஈங்கு ஒழுக்கம் தவறினேரை ஒறுப்பதும் நன்னெறி ஒழுகு வோரை நயந்து காப்பதும் எனதுதொழில். இப்புரியில்அநீதி எவரும் என் அச்சத்தால் செய்வதில்லே; பிரமனும் இங்கு அநீதிச் செய்கை இயற்றல் ஆகாது. இங்கு உறையும்மனிதா அனேவர்க்கும் சிக்ஷகனும் இரக்ஷகனும் நானே. பிராமண னுக்குத்தனம்தருகிறேன்என்று முன்வாக்குத்தந்துபின் இல்லே என்பவனே சண்டாளன். பிரமகத்தி செய்தவனும் அவனே ஆகிறுன். ஒருவனுக்கு ஆர உண்டி உதவுகிறேன் என்று உரைத்துப் பின்சொன்ன வண்ணம் உதவாதவனும், ஆனை யளிப்பதாக ஆசைமூட்டிப் பின் இல்லேயென்பவனும், ஏதேனு மொன்று தருகிறேன் என்றுசொல்லிப் பின் இல்லே என்று பிற்காலிக்கின்றவனும் நரகமடைவார்கள். நீ இவ்வந்தணக் குழகன் குருவுக்கு மிக்கதிரவியம் கொடுப்பதாக வாய்நேர்ந்து வகைசொல்லாமல் வழுவி ஓடக் கருதுகின்றனே. என்கண் ணெதிர்ப்பட்டும் ஏகுதலியலுமோ! வஞ்சனே இயற்றிவழிக் கொள்வாயாயின் வருத்தியாவது நின்னே ஒறுக்காதுஒழியேன். எம்முயற்சி யேனும் இயற்றிக் கண்ணேட்டமின்றி ஒறப்பல்' என்று இன்னவண்ணம்பலவாக வீரவாதம் கூறும் வீரவாகு வை நக்ஷத்திரகன்பார்த்து, 'நீகூறியவெல்லாம் மெய்யே' என உரைத்து, அரிச்சந்திரனேநோக்கி, 'நீபுரியும் வஞ்சனே இங்நீ சனும் அறிந்துரைத்தனன். நில் நில். போதும்போதும். சூழ்ச்சி தந்திரமுற்றுங் காட்டாதொழி. அப்புலேயனும் மெய்யேஉரைக் கின்றுன். அவனிலும் இழிந்தோயாதலின் பொய்யே மொழி

கின்றனை. எவன் திரவியங்கொடுப்பானோ அவனுக்கு விலை செய்து உன்பொருள்பெறுக என முன் உரைத்தனை. புலையனன்றிக்குலவானை கொளல்வேண்டும் என்றுகூறியதுண்டோ? முன்னொன்று மொழிந்து பின்னொன்று பிதற்றுகின்றது பொய்யன்றோ? நான்வேறுஎவனையும் நாடிச்செல்லேன். இவனே இரட்டிப்பு நல்க நேர்ந்தனன். இவனுக்கே விலைப்படுத்துவேன். நீசனுக்கே நீயடிமையாகவேண்டும். எனது திறல் காண். என்னோ! பார்ப்பான்; சிறுவன், வலியிலான் என்று எண்ணேல். உன்னால் நான் வெகு துன்பம் நுகர்ந்தேன். இனி என்னால் பொறுக்கொணாது. நொடியில் என் உறைவிடம் எய்தல்வேண்டும். நீ தடைசொல்லில் எனக்குக் கோபம் உண்டாம். பிரமனாயினும் இந்திரனாயினும் இன்னும் எத்தேவனாயினும் என்சினத்துக்கெதிர்நில்லான். நீயொருபொருளோ? என வெருட்டி உரப்ப, வேந்தரேந்தல் ஒன்றுந்தோன்றாமல் விதியை வெறுத்து அசைவற அமைந்து நின்றுவிட்டனன்.

---

## உக - ஆவது அத்தியாயம்.

### வீரவாகு அரிச்சந்திரனை விலைகொள்ளுதல்.

இதற்குள் புலையன் நக்ஷத்திரகனை நோக்கி மகிழ்ந்து புகழ்ந்து 'வயதில் சிறியோயாயினும் மதியிற்பெரியை. நீசொன்ன சொல்திறம்பேல். மன்னவன் முகநோக்கி மயங்கிக் கண்ணோடேல். நீ அவாவினவெறுக்கைஇன்னே ஈகுவல். இழிதொழிலாளன், இருநிதியில்லான் என எண்ணற்க. விலைகொடுப்பதில் விசாரமொன்றுமிலேன். நின்அவா அறக்கொள்க. ஆயினும் உரைப்பது ஒன்றுஉளது; திரவியம்வாங்கித் திரும்பிப்பாராமல் நீ நீங்கினால் பின் யான் நிகழ்த்துவதென்? இன்னோனுக்குப் புத்திரனும், மனைவியும், மாதாவும், பிதாவும், சுற்றமும், கேளிரும், நிலையும் இல்லை. இயல்போ இன்னது என்றுவிள

ங்கவில்லை. ஊன்மல்கிப் பருத்து ஊற்றம்கொண்ட உடலு
டையான். ஏவியபணி இயற்ற இணங்கானாயின் தண்டிக்கவே
ருமே! மீறிச்சென்றால் யானென்செய்கேன்! சிங்கவேறுபோ
ன்றதிறலும் உலம்போல்திரண்டு உயர்ந்து நீண்டதோளும்
மலைபோல் அகன்றமார்பும் உடையனாய் மகாவீரனாய்த்தோ
ற்றுகின்றனனே! இவன் எனக்குப்பணிந்து பணிபுரிவனோ?
எளியனாவே ஏவல்செய்யற்குரியான். தொழும்பன் தோலா
வென்று உடையனாயின் இறைவன் ஏக்கறு இழிதகவெய்
துவான். மனோவாக்குக்காயங்களாலும் தலைவன் ஆணைகடவா
தவனன்றோ அடிமைக்குரியன். உண்டி மிகவுண்டொருதொழி
லும் இயற்றலனாயின் செய்வதெவன்? எவ்வண்ணம் இவனை
ஒறுக்கக்கூடும்? ஒருபணி உரைக்க ஒல்லேனென்று ஒன்று
ம்புரியலனாயின் எதுசெய்வல்? யான் வெருட்டினும் உரப்பி
னும் தெழிக்கினும் புடைப்பினும் பசியாற்சளைப்பினும் நீர்
நசைதெற நாவுலர்ச்சி உறினும் என்னாணைகடத்தல் செய்யாது
அமைந்தொழுக நம்புதல் அறைந்தபின் பொருள்கொண்டு
செல்க' என்று கூறக்கேட்ட பார்ப்பனப்புதல்வன் அரிச்சந்
திரனை அழைத்து 'அரசர்மறுகில் அனைவரும் அறிய அரிச்
சந்திர! உன்னிடத்தில் ஐயுறவுகொண்டு இவ்வாறுபகர்ந்த
னனே! எழுந்திரு. அன்னோனுகு அகம்கனிய நம்பிக்கையெய்
ஆவித்து அவன்வாய்நேர்ந்த பொருளைவாங்கவழங்கு. வினை
ந்தெழு. காலக்கழிவுசெய்யேல்; மதியிலோய்' என்றுகூறி,
மன்னவன் கரம்பற்றி இழுத்தனன். உடனேவேந்தன் எழு
ந்து இறைவன் திருவுள்ளமிதுவாயின் இதுவேதக்கதென்று
இதயத்தெண்ணிப் புலையற்கடிமைபுகத்துணிந்து, நான்மறை
யுணர்ந்தவேதியரும் மன்பதைபுரக்கும் மன்னவரும் வணிக
ரும் சூத்திரரும் மற்றுமுள்ளவர் அனைவரும் அறியப் புலை
யனைநோக்கி, 'வீரவாகு! யான் சூரியன் தொல்குலத்திற்றோ
ன்றிய ஏந்தல். அவனி அனைத்தும் ஆணைசெல்லத்தனிக்கவி
கைக்கீழ் ஆண்டவன் விசுவாமித்திர மகாமுனிவருக்கு இரா

ச்சியம் முற்றும் வழங்கிவனம்புகுந்தோன். அம்முனிவர்க்கு யான் முன்வேள்விக்கு அளிக்க அவர் என்னிடத்தில் அடைக்கலம் வைத்த அப்பொருளை அவர்க்கியவகையிலேனாய் ஈண்டுத்திரிந்து, பொருள்ஈட்டி உதவ எய்தினேன். என்மனைவியையும் மகனையும் விற்றபொருளை நக்ஷத்திரகன் தனக்கென்று எடுத்துக்கொண்டனன். பொருள் தர வேறுவிரகு இன்றியே என்னைவிற்றுப் பொருள்கொள்ள இயம்பி, அவன் கயிற்றாற் கட்டுண்டு நிற்கின்றேன். என்னிலைஈது. எனக்குச்சத்தியமே விரதம். சரீரம் அழியினும் சத்தியம் இழவேன். தாயும் தந்தையும் தெய்வமும் ஆசானும் ஸ்நாநமும் தூய்மையும் அறமும் அநாதியான பரம்பொருளும் மனைவியும் மகவும் அழியாப்புகழும் நன்மையும் நண்பும் நோன்பும் நிதியும் நிலமும் மகமும் ஞானமும் முத்தியும் மந்திரமும் மாண்பும்மானமும் மற்றும் முற்றும் வாய்மையே. யான்வாய்மை வழுவி ஒழுகி உன்மனதுக்கு வெறுப்பான செயல்புரிவேனேல் பொய்யே புகலுவோன் புகும் நரகிற் போகக்கடவேன். மனமொழி மெய்களால் நின் கட்டளை கடந்து ஒழுகுவலாயின் கள்ளைக் குடித்துக்களியனாய்க் கருமம் சிதைக்கும் கயவன் செல்லும் கதி அடையக்கடவேன். நின்குறிப்பறிந்து குறித்தபணி செய்திலேனாயின் கள்வர் எய்தும் இடும்பை எய்தக்கடவல். நீ ஏவியமொழிக்கு எதிர் மொழிவேன் எனின் செய்ந்நன்றி கொன்றவனும், அயலார் செல்வங்கண்டு அழுக்கறுப்பானும், பிறர்க்குத்துன்பம்நேர்ந்துழிமகிழ்பவனும், நல்கூர்ந்தவரையும் பிணியால் நலிந்தவரையும் குரூபிகளையும் கூனனையும் குறளனையும் முடவனையும் கண்டு நகைப்பவனும், நண்பாயிருந்து வஞ்சிப்பவனும், அந்தணரையும் அறவோரையும் அவமதிப்பவனும், நியாயசபைக்கண் ஓரம் சொல்பவனும், கற்புடைமகளிர்க்குத் தூறுகூறுபவனும், அடைக்கலப்பொருளை அபகரித்தவனும், குருவுக்குவஞ்சனை செய்பவனும், பாகபேதம் செய்துண்பவனும், பரம்பொருள் இல்லை என்பானும், படைக்கலமில்

ரானைப் பகைவெல்பவனும் ஆறுசெல்வோரை அலேத்துப்ப றித்துண்போனும், சாதியொழுக்கமும் சாத்திரவிதியும் கடந்து ஒழுகுவோனும், அரசன் ஆணையின் அகன்ற அறிவிலியும், அருத்தமே கருத்தாய்க்கொண்டு அறம் மறப்பவனும், புண்ணியச்செயலிற் பொறாமை கொள்பவனும், ஆருச்சினத்தனும், கொலைத்தொழிலிற் குதூகலமுடையோனும், கணவனையும்காதலியையும் பேதம் செய்து பிரிப்பவனும், உண்டவீட்டுக்கு உலைப்பு உன்னுவானும், பாவியும், படிறனும் அடையும் அளறதில் அழுந்தக்கடவேன். என்வாய்மைக்குக் கடவுளே சாரி' என்று சூளுறவு சொல்ல, வீரவாகுவும் மனம்தெளிந்து மக்களையும பணிசெய்வோரையும் கூவி, மனையினின்றும் திரவியம்கொணர ஏவினன். அவர்களும் விரைந்துசென்று நிதி கொணர்ந்துவந்து வீதியில் தமனியக் குன்றைக் குவியல் செய்து, நக்ஷத்திரகனைநோக்கி, 'நின் அவாவின் இரட்டிநிதி இராசிதந்தேன்காண். மனதிற் குறையுண்டோ? இல்லையாயின் மகிழ்ச்சியோடு கொண்டு மன்னவனைக்கொடு' என இயமப, நக்ஷத்திரகன் மலையினும் பெரிதாய்மலிகிய தனராசிகண்டு மனங்களித்து மன்னனைக்கொடுத்து, 'புலையர்தலைவ! வீரவாகு! புண்ணியவான் நீயே. நாளுண்டசுகமே இருக்கக்கடவை'. அரசன் உன் அதீனம்; திரவியம் என் அதீனம்' என்று சொல்லி, அரிச்சந்திரனை நோக்கி, 'அரசரேறே! அறத்தின் வேலியே! உன்புகழ் என்றும் அழியாது விளங்கும். எப்பாவமும் உன் பேர்சொல்லத் தொலையும். எதுவும் பரிசுத்தமாகும். சத்யத்தைச் சலிப்பின்றிக் காத்தனை. வியன்மூவுலகும் வெற்றிகொண்டனை. நினக்குநிகர் நிருபருமுளரோ! யாண்டும் இல்லை. என்னை உன்னுயிரினும் மனைவிமக்களினும் மிக உதவிக் காத்தனை. வரையாது கொடுக்கும் வள்ளலே! வாழிவாழி' என ஆசிகூறி, காளை பூண்டசகடுகளிலும் வேசரிகளிலும் ஒட்டகங்களிலும் எருத்துப்பொதிகளிலும் திரவியத்தை ஏறறிக் கொண்டு நக்ஷத்திரகன் திரும்பிச்சென்றனன்.

## உஉ - ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரன் புலையனுக்கு அடிமையாய் மயானங்காத்திருத்தல்.

பின்பு அரிச்சந்திரனும் மனக்கவலை நீங்கிப் புலையன் அருகிற் கைகுவித்து வாய்புதைத்து, ஏதுபணி இயம்புவான் என எதிர்பார்த்திருந்தனன். வீரவாகுவும் வேந்தனை விளித்துத் தசைத்துண்டங்களையும் மதுபாண்டத்தையும் காவினிற் பெய்துதோளிற் றூக்கிச் சிரத்திலும் சும்மாடு இன்றித் தோற் பொதிசுமத்தினன். அதைத் தூக்கிக்கொண்டு மன்னவன் மனதிற்சிறிதும் அருவருப்பு இல்லானாய் மனமொழி மெய்களில் ஒற்றுமை உடையனாய் முகமலர்ச்சியோடு நின்றனன். அது கண்டவிண்ணவர்யாவரும் 'இவன் சத்தியமூர்த்தி' என்றுவியந்துபுகழ்ந்து, 'இனி இவ்விடர் நீங்கி இராச்சியம் எய்துமளவும் பசிதாகமின்றி இருக்கக்கடவை' என்று வேந்தனுக்குவரமுந்தந்து வானுலகுசென்றனர். அப்புலையனும் வேந்தனொடு புலைச்சேரிபுகுந்து தன்னில்லம் சென்று இறுத்தனன். தோலும் என்பும் இறைச்சியும்பிணமும் நரம்பும் குருதியும் சீயுமஈரம் உலராச்சருமங்களும் நிரம்பி, எங்கணும் வீசும் தீநாற்ற முள்ளதாய்த் தசைநீக்கும் கருவியும் தோல் உரிக்கும் கருவியும் பறையும்தண்ணுமும் தோல்வட்டமும் துருத்தியும் நிறைந்ததாய், நரிகளும் நாய்களும் காக்கைகளும் கழுகுகளும் பருந்துகளும் எங்கணும் பறந்து குடர்களையும் மூளைகளையும் நிணங்களையும் ஊன்களையும் கவ்வியும் வவ்வியும் பிடுங்கியும் கொத்தியும் தின்று கலகித்துக் கூட்டம் கூட்டமாய் ஊளையிட்டும் குரைத்தும் கத்தியும அச்சமுண்டாக ஆர்ப்பரிக்கவும், பூதமும் பிரேதமும் பிசாசமும் தின்று தேக்கிட்டுக் கொக்கரிக்கவும், நமனுக்கும் நடுக்கம் விளைப்பதான பயங்கர ரூபமுடையர்களாய்க் கடுஞ்சொல்லே கூறுவோராய்த் தெழித்து உரைக்கும் மதுமயக்கம்கொண்ட சண்டாளர் பலர் நிறைந்ததாய்ப் பட்டணத்துக்குப் புறத்தில் உள்ள புலைச்சேரியைக்

கண்டு மனம் அருவருக்காமல், எங்கும் அந்தர்யாமியாய்க் குற்றங்குணம்பாராத அமலனும் ஆதிபகவானைத் தியானித்து க்கொண்டு, அகங்காரமும் மடிமையும் இல்லாதோனாய், வீர வாகுவின் மனையிற்கவலையற்றீ இரவும் பகலும் ஏவியதுசெய்து கொண்டு, நள்ளிரவிலும் நடுவெயிலிலும் மூடுபனியிலும் பெருமழையிலும் ஏவின இடமெல்லாம் நாணமும்வருத்தமு ம் தோன்றாதுசென்று, அன்னபானங்கள் வேண்டாது, அப்புலை யனையே தலைவனாகக்கொண்டு, அவன் நிழல்போற் காத்து நின்று, அவன் மனம்மகிழ அரிச்சந்திரன் பணிசெய்திருந்த னன். வீரவாகு, 'இம்மன்னவன்தினமும் சோம்பல்இன்றிமுய ற்சியோடு ஏவாது குறிப்பறிந்து பணிசெய்தும் இறையும் முறைபிறழாது ஒழுகியும் மனமிரங்கச் செய்கின்றனனே ! மனுவம்சத்திற் பிறந்த மகாராசன். மண்ணெல்லாம் ஒருகு டைக்கீழ் ஆண்டவன். மதியில் ஒன்றும் விகற்பம் கருதாது மகிழ்ந்திருக்கின்றனனே ! இம்மகாநுபாவனை மனஞ்சலிக்கச் செய்ய இயலுமோ ! சத்தியமும் தவறுவனோ ? விசுவாமித்திர முனிவர்க்கு நான் என்ன உதவிசெய்யலாகும் ? ஒன்றும் இய லாதே ! கௌசிகமுனிவர் தோல்வியுடைந்தார். வேந்தனை வெல்லல் ஆகாது' எனவலித்து, 'மீண்டும் வேறு ஏதேனும் ஓர்வகையில் மனங்கலங்கச் செய்வல்' என்றுகருதி, ஒருநாள் தான் உயர்ந்ததோர் ஆதனத்தில் ஏறிஇருந்து, தன்பாதத்தை அரசன்தோளில் நீட்ட அரசன்பணிவோடு அதுதாங்குதல் கடமையெனக்கொண்டு முகஞ் சுளிப்பின்றித் திரிகரணமும் ஒத்துத்தாங்கி நின்றனன். அதுகண்டுவீரவாகு மனம்இரங் கிப் பலவிதமாகவேந்தன் குணங்களை வியந்து, 'நீநாணமும் மானமுமடவிட்டு வாய்மையே மேன்மையாகக்கொண்டு இயற் றும் தொழும்புக்கு எதிர்இல்லை. என்தொழும்பருள் நீ முத ல்வனாய் எல்லா உலகும் நடுங்கும் இவ்வியமதண்டத்தைக் கையில்தாங்கி வீரதாசன் என்று பெயர்கொண்டு மயானத்திற் காத்திருந்து யாரரவது பிணங்கொண்டு வருவார்களாயின்

ஒருபணம்வாங்கி உட்செல்ல விடைகொடு. பிணத்தின்மேல் மூடியகோடியை வாங்கிக்கொள். அப்பிணத்துக்கிடும் வாய்க் கரிசியும் அடலையில் இடும் அடைமுதலிய சிற்றுண்டியும்பிண் டானமும் கொள்ளிக்காசும் நீயே வாங்கிவை. அங்குவருப வர்களைக் கொடுமையாய்த் தண்டனைசெய். கண்ணோட்டம் செய்யேல்' என்று ஈமங்காக்கும் ஈனத்தொழில் ஏவப்பட்டு, அதுவும்செய்ய மனந்துணிந்து, காலதண்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அவ்விடம்செல்லமுயன்று, வீரவாகுவை வலஞ்செய்து வணங்கி விடைபெற்று, அவனாணைதலைமேற் கொண்டு, மணிகர்ணிகைஎன்னும் பொய்கைக்கரையில் நாநா வித பூதம் - பிரேதம் - இடாகினி - சாகினி -பிரமராக்ஷசு-பாலகி ருகம்-பேய் - பிசாசு - வேதாளம் - கூச்மாண்டம் முதலிய கண ங்கள் பிணங்களின் நிணங்களைத்தின்னத்தொடங்கியும் சொலை க்கல்லிற் பெருகும் உதிரத்தைப்பருகமுயன்றும் சிசுச்சவ ங்களின் தலைமூளைகளைத்தின்ன எடுத்தும் அச்சமுண்டாகத் திரியும் ஓர்காலுள்ளவாயும் முக்காலுள்ளவாயும் கோரரூபங் களாயிருக்கும் மூர்க்கங்கொண்ட சிறுபேய்க்கூட்டங்கள்மிக வும்உரப்பி முகிலின் முழக்கம்போல் உரறி ஆர்க்க ஆயிரங் கோடிசவந்தங்கண்மிடைந்து மிக்க அச்சந்தரும் மயானபூமி யில் மகாராஜதிலகனான அரிச்சந்திரன் மனஞ்சலிக்காது திர ளுப் நள்ளிரவில் நின்று உயிர்க்கொலைபுரிந்து ஆரவாரிக்கும் பூதம்முதலிய கணங்களைக்கண்டு, தன்வாளை உருவி அவற் றின் செருக்கை ஒழித்துத் தன்வசமாக்கி அருகு அழைத்து, 'நீவிர் இனி இவ்வீண் ஆரவாரம்செய்யன்மின். இங்கிருக்கும் துர்க்காதேவி இந்நகர் எல்லாம்காவல்செய்து இரக்ஷிப்பவள்; ஆதலின் அவள்கட்டளைக்கு உட்பட்டு இருங்கள். சூரியன் உதித்தவுடன் என் கட்டளைப்படி எனக்கு இறைவனும் வீர வாகு இருக்கும் இடம்சென்று அவன்பணி தலைமேற்கொண்டு தொழில் இயற்றுமின். சூரியன் அஸ்தமித்தஉடனே இங்கு வந்து கதிரவன் குணக்கில்உதிக்கும் காலவரையிற்காவல் இய

ற்றுமின்; என்கட்டளைகடவாது ஏவிபதுசெய்து உய்ம்மின்' என உரைத்து, பின்னும், 'நான் இருந்துகண்காணிக்கும்படி கல்லால் கட்டில்போல்மேடையொன்று சமைக்கின், அதன் மீதிருந்து இரவிற்காத்திருப்பேன்; உயரத்தில் இருந்தால்சேய்மையில் உள்ளவும் கண்ணுக்குப்புலப்படும். விரைந்துசென்மின். சிலைகள் கொணர்மின்' என்று கட்டளையிட, உடனே பேய்கள் அன்னவண்ணமே கல்லால் தூணும்நாட்டிக் கட்டில் போல் முகிலைபளாவ வுயர்த்தியடுக்கின. அம்மேடைமேல் உட்கார்ந்து அளவற்ற பூதகணங்கள் சூழ்ந்து பணிகேட்ப மயானத்தில் மன்னவன் காத்திருந்தனன். பேய்கட்டிய கல்மஞ்சம் இன்னும்காணலாம்

## உ௲ - ஆவது அத்தியாயம்.

### சந்திரமதி காலகௌசிகன்மனையில் பணிசெய்து வருந்துதல்.

இங்கு இன்னவண்ணமாக, காலகௌசிகன்பின்சென்ற சந்திரமதியும் அப்பார்ப்பனன்மனையில் எய்தி, மகனோடும் ஓராண்டு அளவுமுறைந்தனள். மகாராஜன்மகளாய்ச் சக்கிரவர்த்தியின் மனைவியாய், மலரின்மென்மையான மேனியுடையளாய், கற்புக்கரசியாய், உலகெல்லாம்தாள்பணிய வீற்றிருக்கும் இராசமகிஷியாய், சுகமே மிக நுகர்ந்து, துக்கம் என்பதை அறியாதசந்திரமதி கணவனைப்பிரிந்தபின் கவலை மிகுந்துகண்ணீர்பெருகக்கலுழ்ந்து, 'கருமத்தைத் தொலைக்கக் கருத்தனாலுமாகாது; முற்பவத்திற்செய்த கருமபபயன் நுகர்ந்தே ஒழிதல் வேண்டும்; "வேண்டினும் வேண்டாவிடினுமுற்பால தீண்டாவிடுதலரிது"' எனத்துணிந்து, தினமும் அக்கொடிய காலகௌசிகனாலும் அவன்மனைவியாய் அவனிலும் அருளிலியாகிய துச்சீலை என்பவளாலும் மிக்க துயர் உறுத்தப்பட்டனள்; எவ்வண்ணமெனில், வைகறை

க்குமுன் மூன்றாம்யாமத்தின் கடையிலேயேவிழித்து எழு ந்து பசுவினையும் கன்றையும்போற்றித் தவிடு அளித்துப்பால் கறந்துவைத்துப் புல்முதலிய கீத்துப் பின்பு கோமயம் எடு த்துக் கிணற்றில் நீர்தூக்கிக்கொணர்ந்து அலகிட்டுப்பெரு க்கி மெழுகி மனைமுழுதும் சுத்திசெய்து அவ்வவ்விடங்களில் மாக்கோலமிட்டுப் பின்பு ஆற்றிற்குளித்து ஆடைஉலர்த்தி யுடுத்து அட்டில்புகுந்து அடுகில்முதலிய அமைவுடன் அட்டு, வேதியன் வஸ்திரமும் அவன்மனைவியின் சீரையும் நதியில் தோய்த்து நன்றாக உலர்த்தி, மஞ்சனச்சாலையில் வெந்நீர் அமைத்து அவட்கு எண்ணெய்தேய்த்துக் கால் வருடிக்கை பிடித்துப் புளிஅட்டி மஞ்சட்பூசி மஞ்சனமாட்டி, அவள்மக் களுக்கும் அன்னம் அளித்து எல்லாப்பணியுமியற்றி, இல்ல த்தில் அக்காலகௌசிகனும மக்களும்மனைவியும் உண்டுகளி த்தபின், தான் அவர்கள்உதவும் புற்கைப்போனகம்கொண்டு, மைந்தனுக்கு அன்னமின்றி முலைப்பாலும் தண்ணீருமேஅரு த்தி, அஸ்தமித்தவுடன் ஆவிற்கு நீர்நல்கித் தொழுவத்தில் அணைத்துக்கட்டிப் புல்கொய்து ஈந்து மறுவின்றித் தேய்த்து ஒழிந்தபின், பார்ப்பினிமக்கட்குப் படுக்கைபரப்பி அவள் கால்வருடிக்கைபிடித்து உறங்கியபின் முன்தானையைத் தரை யில்விரித்துமகனும் தானுமாய்ப்படுக்கவும் பலவண்ணமாய்த் துயருறுத்தப்பட்டுச் சிந்தைநொந்து வதிந்தனள். இவ்வண் ணம் இயலுகையில்ஒருதினம் லோகிதாசியன்பசியால் அழுது அன்னையின் ஆடைதுனியைப் பற்றிநிற்கக் காலகௌசிகன் கண்டுசினங்கொண்டு அச்சிறுவன் இருசெவியும் பற்றிக்கிள் ளிக் கதுப்பிற்புடைத்துக் கைபிடித்து இழுத்துக்கடைப்புற த்தில்தள்ளி 'மூட! வஞ்சக! முப்பொழுதும் மூக்களவும்முப் பழமும் பாலும் அன்னமும்தின்று, கொழுத்து உடல் தெரி யாதுமதங்கொண்டு எருமைக்கடாப்போல் அழுகிறாயோ! தினமும் காலையில்எழுந்து சிறுவர்களோடு காடுசென்று புல் லும் இலையும் விறகும் குசமும் பூவுங்கொண்டுவா. என்கட்

டனைப்படி செய்யாவிடின் தெருத்தூணிற்கட்டி அடிப்பேன்' என்று வெருட்டிப் பஞ்சாங்கத்தையும் தடியையும் கையிற் கொடுத்து வெளியில் இழுத்துக்கொண்டுபோய் வனத்துக்கு அனுப்ப, லோகிதாசியன் அன்னையின் எதிர்நின்று அழ, அவள் கண்ணீர் துடைத்து, 'அவ்வேதியர்க்குக் குழந்தையைப்புடைக்கக் கை எப்படி எழுந்ததோ! மனம் எப்படித் துணிந்ததோ! நீயோகுழந்தை! வனமோ கொடியவிலங்குகள்சஞ்சரிக்கும் இடம்! பிராமண உத்தமனுக்குஏன் கருணை இப்படியாயிற்று! எல்லாம் ஊழ்வலி' என்றுவெறுத்துப் புலம்பிப் புத்திரனை நோக்கி, 'செந்தாமரைபோன்ற நின்கைகளால் எவ்வண்ணம் விறகுஒடித்துப் புல்லரிந்து குசைகொய்வாய்? தளிரின்மிக மெல்லியதாய்ச் சங்குநேமி வச்சிரம்முதலிய வரைகளுள்ளதாய்ச் சக்கிரவர்த்தி இலக்கணம் அமைந்த நின் பாதத்தினுல் பரலும் முள்ளும் வாள்போல் அறுக்க எவ்வாறு நடப்பாயோ! அறிகிலேன். இரவுஎல்லாம் பசித்தேகிடந்தாய்; அன்னமில்லையே! என்செய்வல்! தண்ணீர் ஆகிலும் பருகிச் செல்' என்றுதண்ணீர் அளித்துத் துயரத்தினுல் அசைவற்று நின்று சிறிதுதேறி மகனை ஆசீர்வதித்து வனத்துக்கு அனுப்பினுள். அரிச்சந்திரன் குமாரனும் தினமும் பார்ப்பனச்சிறுவரோடு வனம்சென்று விறகும்புல்லும் கொண்டுவாராநின்றனன்.

---

## உசுஎ-ஆவது அத்தியாயம்.

### லோகிதாசியன் அரவுதீண்டி இறத்தல்.

இன்னணம் நிகழ்ந்துவரக்கண்டு விசுவாமித்திரமுனிவர் பாதாளம்சென்று ஈகூஷகனை அழைத்து 'உன்விடம் எவர்களையும்கொல்லும் ஆதலால் விரைந்துசென்று வனத்தில்வரும் லோகிதாசியனைக் கடித்துக்கொன்றுவிடு. எனக்காக நீஇஃது

அஞ்சாதுசெய். அவன்தந்தை அரிச்சந்திரன் யானெவ்வளவு துயரம்உறுத்தியும் யதார்த்தந்தப்புவதில்லை; ஆதலால் இத் துன்பத்திலாவது அவன்பொய்ம்மொழி பகரச்செய். நீ அவ் வடவியில் ஆலமரத்தின் அடியில் இருக்கும்புற்றில் நுழைந் திருந்து லோகிதாசியனைக்கடி' என்று கட்டளையிட்டு, உட னே வனத்தில்வந்து அங்குப்போந்த பூசுரபாலர்களை மறை வாய்விளித்து 'நீங்கள் லோகிதாசியனைப் பசியினாலும் தாக த்தினாலும் வருந்தி இளைக்கும்படி திரியவடித்துச் சாயங் காலவேளையில் ஆலமரத்தின் அடியில்வஞ்சித்து அழைத்து வாருங்கள் ; அவன் பாம்புகடிக்க இறந்துபோவான்' என்று சொல்லி, இனியகாய்கனிகளும் அவர்களுக்கு அளித்துச்செ ன்றனர். தக்ஷகன் என்னும் நாகராசனும் அவர் ஆணையின் வண்ணம்செய்ய அமைந்து பழுமரத்தின் அடியில் வன்மீகத் தில்வந்திருந்தனன். சிறுவர்களும் லோகிதாசியனோடுகூடக் காடுதிரிந்துசமித்தும் தருப்பையும் சேர்த்துக்கொண்டு மெ ள்ளமெள்ளவடவிருக்கத்தின் அடியில் வந்துஉற்றனர். லோகி தாசியனும் சமித்தையும் தருப்பை முதலியவற்றையும் சிர த்திற் சுமந்துகொண்டு தட்டித்தடுமாறிஅவர்கள் பின்வந்து அடைந்தான். சமித்தும்தருப்பையும் அறுத்துச்சேர்க்கவறி யாத ஐந்துவயதுள்ள பாலனுதலின் அப்பார்ப்பனச் சிறுக் கரைப் பிராத்தித்தும், அவர்கள் உதவிசெய்யாமல் 'உனக் குக்கையில்லையோ' என்றுகேட்க, அதற்குஒன்றும் செய்ய அறியானாய் அழுது, ஆங்காங்கு திரிந்துசிறுகச்சிறுகச்சேர் த்து அரிதினிற்பெற்றசுமையை எடுத்துக்கொண்டு அப்பாரம் தாங்கமாட்டாமலும் பசிதாகங்களினாற்களைத்தும் சோர்ந்து ஆலமரத்தின் அருகில்வந்தி, அதன்நிழலிற் சுமையை இறக்கி இளைத்து வீழ்ந்து துயில்வுற்றுச் சிறிது அயர்வுநீங்கி, மீண் டும் எழுந்து அச்சிறுர்களைநோக்கி, 'யான் இலைகொண்டுவாரா மல்மறந்தேன்; இம்மரத்தில் இலை நன்றாயிருக்கின்றமையால் நீவிர் அன்புவைத்து இலைபறித்துநல்குமின்' என்றுபணிந்து

கேட்க, அவர்கள் 'நீ காளைபோலத்திரிகிறது, நாங்கள்மரம்ஏறி இலைபறித்துத்தருவதோ! இதற்கோ எங்களுடன் வந்தாய்? உனக்குக்கையில்லையோ? கால்இல்லையோ? நீயேமரம்இவர்ந்து இலைபறித்துக்கொள்' என்று இகழ்ந்து உரப்பித் தாங்கள் மரம் ஏறி இலைபறித்துக்கொண்டு இறங்கிச்செல்லலுற, அரசன்மைந்தன் அலக்கண் அடைந்து அவர்களைநோக்கி வணங்கி, 'நான்விரைந்து விருக்கம்இவர்ந்து அடைகொய்து வருகிறேன் நில்லுமின். அந்திவந்து அணுகியது. அ–விநெறி அறியேன். யான் இலைகொண்டு எய்தாவிடின்காலகௌசிகன் சினங்கொண்டு என்னையும்அன்னையையும்சிதைப்பானே' என்று மிக அஞ்சி அடிக்கடி அவர்களைவேண்டிக்கொண்டு ஏறப்பார்க்க, எங்கும் எட்டாமற்போகப் பின் வளைந்து நான்றதோர்சினையைப்பற்றி ஒருதாளை ஆளைமுகட்டின்மீதும் மற்றோர்பாதத்தைக் கிளையின்மீதும் வைத்து இலைதேடுதற்கண்வைத்து இருக்கையில், தக்ஷகன்சீறிப் பாதத்தின்பெருவிரலில் கடிக்க, புற்றில்தலைவைத்து பூமியில்விழுந்து உயிர்ப்புநீங்கினன். முகம்பிணம்போல் ஒளியிழவாமல் உறங்குவான்போலத்தோன்றவனப்பு அழியாதுஇருந்தது. அதுகண்ட சிறார்கள் அனைவரும் இச்செய்தி ஒருவருக்கும் அறிவியாதிருப்போம் என்றுசொல்லிக்கொண்டு ஓடிச்சென்றனர். சூரியனும் அஸ்தமித்தான். சந்திரமதியும் நெடுநேரம்பார்த்தும் மகன்வாராமல் மற்றைச் சிறுவர்எல்லாம்வரக் கவலையுற்று, அச்சிறுரைநோக்கி 'என்மகன்லோகிதாசியன்ஏன்வரவில்லை?' எனவினவ, அவர்கள்ஒன்றும் விடைசொல்லாமல் மயங்கி நின்றனராக, மீண்டும்மிகக்கலங்கி, 'என்மகன்எங்கே? யதார்த்தமே சொல்லுங்கள்; அஞ்சாது அறைமின்' என இரந்து வினவ, அவர்கள் ஒருவர்முகம் ஒருவர்பார்த்து மயங்கிப்பின் துணிந்து 'உன்மகனை அரவம்தீண்டியதனால் உயிர்ப்பின்றிப் பழமரத்தின்அடியில்வீழ்ந்தனன்' என்று உரைக்கக்கேட்டு, இடியுறற அரவம்போலத்துடித்து வீழ்ந்து அறிவுசோர்ந்து

வெகுநேரம் சென்று சிறிது ஞாபகம்வந்து எழுந்து 'என் மகனெவ்வாறு நச்சரவுதீண்டியது? காலையிற்பசியால் வருந்தி அன்னம்கேட்க, அஃதுஇல்லையாக முலைப்பால்வேண்டினன் இஃதும் இல்லாமற்போகப் புனல் ஒன்றே பருகிப் பூசுர குமாரர்களோடு சென்றனனே! அவ்வனத்தில் என்ன அலைந்தானோ! யாதுகாரணத்தால் அரவம்கடித்ததோ! எவ்வளவு தூரத்தில் எங்கேவிழுந்தானோ! அறிகிலேனே!' எனக்கலுழ்ந்து கண்ணீர்சோர மகனைநினைந்து ஒருதீங்கும் செய்திலாத சிறுவனை ஏன் அரவுகடித்ததோ? அவ்வேளையில் அதைத் தடுப்பார் இல்லையோ? குழந்தாய்! கண்மணியே! உவாமதி போலும் உன்முகத்தைப் பாராது எவ்வாறு உயிர்பெற்று இருப்பேன்! கமலமலர்போன்ற கரங்களையும் பாதங்களையும் எப்பொழுது காணுவேன்!' என்று ஏங்கி, வயிறு அலைத்து அழுதுஅழுது அலமந்து அறிவுசோர்ந்துவிழுந்தனள். அது கண்டு சினங்கொண்ட துச்சீலைஎன்பவள் அணுகவந்து மிகவும்உரத்துக்கூவி வெருட்டிக் கடுஞ்சொல்கூறித் தெழித்து ஈனமாகவிளித்து 'அறிவில்! பாவி! இன்று வெள்ளிக்கிழமை என்வீட்டில்ஏன் அமங்கலமாக அழுகிறாய்? உனக்குத்தாயா, தந்தையா, சகோதரியா, புத்திரனா, யார்இறந்தார்கள்? வெளியிற்செல். என்வீட்டில்பிரலாபிக்காதே. என்கணவன்வரின் கோபிப்பார். சிறுவர்கள்வருகிறார்கள், பயப்படுவார்கள். வேதாப்பியாசம் செய்பவர்களுக்கும் விரோதம். உன் புலம்பின் ஒலிகேட்டு, உறங்கும் சிறுவர்கள் விழித்துக்கொள்ளின் பயம் அடைவார்கள். எனக்கு நித்திரைவாராது. கூக்குரலை ஒழி. ஏன்அழுகிறாய்அறை' எனவினவ, 'அன்னாய்! என்மகன்லோகிதாசியனை உம்கணவன்காலகௌசிகர் சமித்துமுதலியகொண்டுவரும்படி ஆக்கினைசெய்து அனுப்பச் சிறுவர்களோடு வனம் சென்றவன் வந்திலன். வந்தசிறுக்கர்கள் அனைவரும் லோகிதாசியன் சர்ப்பம்கடித்திறந்தான் என்று சொல்லுகிறார்கள். தாயே! என்செய்வேன்சொல்' எனத்தொழுது, சிறிது

பொருள் கருணையாயின் மருந்து ஏதேனுந் தேடித்தந்து பிழைப்பிப்பேன். இவ்விடர்ப்போழ்தத்து என்னைக்கா' என்றுகாலில்வீழ்ந்து இரந்து 'உன் அருளால் பிழைப்பாயாயின் பிழைத்தவுடன் அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன்; அணுச்சணமும் நில்லேன். எனக்கு வேறுகதி இல்லையே! வன்மான் அந்த மகாரணியத்தில் எந்நிலையில் இருக்கிரு னோ! வழியும் அறியேனே! அருந்ததியே! அறமூர்த்தியே! அருள்செய்' என்றுகூற, அதுகேட்டவுடன் கோபம் பொங்கி எயிறுகளைக்கடகட எனக்கடித்து 'என்ன! உன்னியல்பு என் றும்தெரியவில்லை! "குதிரைசெத்ததுமன்றிக் குழிதோண்ட வும் கூலி" என்பதுபோல உன்னை அனேகப்பொருள் விலை கொடுத்துக் கொண்டதுமன்றி இன்னுமருந்துக்கும் பொ ருள் கேட்கிறாய். நீபுத்திரனை எங்கோமறைத்துவைத்து மயும் பொருள்கவர்ந்து ஓடப்போக நினைத்திருக்கின்றாய். உன் வஞ்சகம் யான் அறிவேன். இனிஉன்காலுக்கு விலங்கு பூட்டிவைக்க வேண்டும். பிள்ளைஎன்று போக்குச்சொல்லிப் போய்விட நினைத்திருக்கிறாயோ? உன்சங்கதி அறிவேன். நீ வந்தநாள் முதல் காசெல்லாம் கரியாயிற்றே! எவ்வயின்பாசு தானேது? நீகாட்டுக்குப்போனால் என்வீட்டில்வேலையெல்லாம் யார்செய்வார்கள்? என்கணவன்வரின் அவற்கு அன்னம்யார் அடுவார்? பிள்ளைகளுக்கு உண்டி யார் ஊட்டுவார்கள்? பசுக் களுக்குப்புல் யார் கொய்துகொடுப்பர்? தண்ணீர் ஆர்கொ ண்டுவருவர்? அடுசிலுக்கு அரிசிஇல்லையே. நெல்லை யார்குத் துவர்? பிணியால்வருந்தியிருக்கின்றேன். என்கால் மிகநோவு கொண்டது; யார்எனக்கு அடிவருடுவார்? எதிர்நின்று பேசு வையேல் நின்னைப்புடைக்கிறேன் பார். எனக்குமிகக்கோபம் வருகிறது. அழுவையாகில் அடித்து இடுப்பை ஒடிக்கிறேன் காண்' என்று கடுங்கோபமாய்ச்சொல்ல, கற்புக்கரசியாகிய சந்திரமதி அவள்காலில் விழுந்து 'என்புத்திரனைப்பார்த்துவரு கிறேன்; பொய்யொன்றும் இல்லை. வஞ்சகம் செய்துசெல்லே

ளுகில் என்மகன் எனக்கு உதவான்; மகாநரகம் சேருவேன்' என்று சபதம் சொல்லக்கேட்டுப் பின் சிறிதுமனம் இளகி 'நீ வீட்டின்வேலையெல்லாம் முடித்துவிட்டுச்சென்று புத்திரனைக் கண்டுகொண்டுவா' எனக்கட்டளையிட, அவ்வண்ணமே விரைவில் வேலையெல்லாம் இயற்றி ஏகமுயலுகையில், அப்பார்ப்பினி அயர்ந்து முழைபோல்வாயைத்திறந்து கைவிரித்துக் கால் பரப்பி விகாரரூபமாய் உறக்கமுற்றனள். காலிலும்மடியிலும் தோளிலும் வயிற்றின்மேலும் மார்பிலும் கையிலும் மக்கள்கிடந்துஉறங்கினர். அதன்பின் அருந்ததிக்கற்பினளாகிய சந்திரமதி எரிகொள்ளி ஒன்று எடுத்து இருள்திணிந்த நள்ளிரவில் மனிதர்நடையாட்டை யொழிந்து, மகாபூதகணங்கள் மல்கிக் கூகைகள் கூவ நரிகள் ஊளையிட மேடும் பள்ளமும் சேறும்தண்ணீரும் கல்லுமமுள்ளுமாய் நெறி அறிவதரிதாய் அச்சம் விளைக்கும் கானகத்தில் கற்பேதுணையாகக் கடவுள் அடிபோற்றிக் கொள்ளியைக் கையிற்பிடித்து, அதர் எல்லாம் தொலைத்து, அவ்வேதியச் சிறுவர் உரைத்தவண்ணம் அவ்வனத்தின்நடுவண் ஓர் முரிய ஆலமரத்தின் அடியில் மூச்சற்றுவீழ்ந்துகிடக்கும் மைந்தனைக்கண்டு முகத்தைத்துடைத்துக் கைகளைத் தடவிப்பிடித்துப் பாலகனே! என்று அழுது மூர்ச்சித்துப் பின் எழுந்து, மகன்மேல் விழுந்துபுரண்டு, புற்றில் வீழ்ந்திருக்கும் மகவைத் தன்மடியில் வைத்துப் பலவாகப்புலம்பி, 'தீர்க்காயுசு உடையனாயும் சக்கிரவர்த்தியாயும் இருப்பாயென்று முனிவர்கள்சொன்னார்களே; என்பாவத்தினால்அவர்கள் வாக்கும்பொய்த்ததே!' என்றுசொல்லிப்புலம்பி ஆவி உண்டோவென்று மூக்கிலும் மார்பிலுங் கைவைத்துச் சோதித்து, மரித்தான் எனத்தெளிந்து திடசித்தையாய்க் கலங்காமல், 'இனி இச்சவத்தை ஈமத்தில் எரிமூட்டி ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமே' என எண்ணித் தோளில் அக்குழவிப்பிரேதத்தைச் சாத்திக்கொண்டு எடுத்துச்சென்று மயானம் புகுந்தனள்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


## உ௫-ஆவது அத்தியாயம்.

**சந்திரமதி மயானத்தில் புத்திரனுக்குத் தீக்கடன் இயற்றப்புகுதல்.**

உடனே அவ்விமத்திலுள்ள கோரரூபமுள்ள பேய்களும் பூதங்களும் மிகவெருட்டி ஆர்க்கச் சிறிதும் அவள் மனங்கலங்காது சகஸ்ரதனைத் தியானித்துத் தீரமாயிருக்க, அவைகள் ஒன்றும்செய்யகில்லாது ஒழிந்துபோயின. பின்பு, அவ்விமத்தில் எரிந்துசேடித்த குறைக்கொள்ளிகளைத் தேடி எடுத்துக் காட்டம்கொண்டு சிதை அடுக்கித் தீமடுப்பமுயன்று பிரேதம்எரியும் தீயினின்றும் எரிகொள்ளியொன்று எடுத்துத்தீமூட்டி மகனைச்சிதையில் வைத்துப் புலம்பலுற்றனள்: 'நீ இறந்தும் என்நெஞ்சம் இருபிளவாய்ப் பிளவாதே பிருககுமதே! என்மனங் கல்லோ? மன்னர்மன்னன் மகனே! நீசென்றவிடம் சொல், நானும் எய்துவேன். என்பிராணநாதனைப்பிரிந்தும் உன்முகம்பார்த்து உயிர்சுமந்தேன்; இனிஎவ்வண்ணம் உய்வேன் மதலாய்!' என்றுவிளித்து ஓலமிட்டு அழுதனள். வேதாளஞ்சமைத்த மஞ்சத்தில் இருந்த வீரதாசன் உற்றுக்கேட்டு 'இஃதுஓர்பெண்குரல்; இந்நள்ளிரவில் தனியாய் ஒருபெண்குரல் கேட்பது என்ன புதுமை? மற்றோர்மனிதர் அரவமும்இல்லையே! யார் இத்துணிவுள்ளவள் காண்போம்' என வேதாளக்கன்மஞ்சத்தினின்று இழிந்து தண்டம் தோளிற்சார்த்தி அருகில்வந்து 'நீயார்? பெண்ணே! இந்நள்ளிரவில் தனியே ஏன்அழுகின்றனை? நீஇன்ன இயல்பினள் என்று தெளியச்சொல். என் ஆணைகடந்து ஈதுஏன் செய்தாய்? அச்சம் அணுவளவும் இல்லாயாய் அழுகின்றனை; உலக்குங்கரான தீரமுள்ளாளை இவ்வுலகில் எங்கும்கண்டிலேன்' என்று உரப்பிக்கூறினன். அவள் காலஉருத்திரன்போல் பயங்கரரூபனும் காலதண்டங் கைக்கொண்டுநின்ற வீரதாசனைக் கண்ணுற்று விநயத்தோடு வணங்கிக்கைகுவித்து, 'ஓமகாவீர! இந்நகரத்திற் காலகௌசிகன் என்னும்நாமமுள்ள

பஞ்சாங்கப் பார்ப்பனன்வீட்டுத் தொழுத்தை நான். எனக்கு
ஐந்து வயதுள்ளமகன் ஒருவன் அவர் ஏவலாற் சமித்தும்
தருப்பையுங்கொண்டு வருவதற்குப் பார்ப்பனச் சிறுவர்களு
டன் வனஞ்சென்று பாம்புகடித்திறந்தனன். இச்செய்தி
அச்சிறுவர்கூற அறிந்து அவ்வீட்டில் உள்ளோர்க்குச் செய்ய
வேண்டும் தொழில்முற்றும் புரிந்து பின் வனங்குறுகி மைந்
தன் சவத்தைக்கண்டு தீக்கடன்கழிக்க ஈண்டு எடுத்துவந்
தேன். ஏதுமிலேன் ஆதலால் இவ்வெரிகொள்ளிகள் ஆய்ந்து
அடுக்கி எரி மூட்டினேன். உற்றோர் இலளாய்த் தனியே
புலம்புகின்றேன்' என்றுகூற, வீரதாசன் 'இச்சுடலையிற்சவத்
தைத்தகனஞ்செய்பவர் என் அதிபனும்வீரவாகுவின் ஆணைப்
படி, ஒருபணமும் சவப்போர்வைத்துணியும் வாய்க்கரிசியும்
கொடுத்தே ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். அவ்வாறின்றி
என்கட்டளைமீறி ஒழுகுபவர்களை இத்தண்டத்தால்தலையை
உடைத்தாவது இக்கைவாளாற் சிரத்தை அறுத்தாவது
கொல்வேன். நீ பெண் என விடுத்தேன். உன்மகப்பிணம்
இங்கு எரிக்கவொட்டேன். எடுத்துச்செல்' என்றுசவத்தை
இழுத்து எறிந்துவிட்டு 'நீ இங்குநில்லேல்; விரைந்துசென்று
கட்டணம் எல்லாம் கொண்டுவந்துகொடுத்துப் பிணம்சுடு'
என்றுசொல்ல, அவள் அவனைவணங்கிப் பணிவுடன் 'யானோ
ஆருமில்லாதவள். அரைத்துணிதவிர வேறுதுணி இல்லை.
மகனுக்கும் கோவணமன்றிவேறில்லை. ஒற்றைக்காசுதான்
என்னிடத்தில் ஏது! பொருள்யாதுமில்லாத புன்கண்மை
யுள்ளவள். எனக்குஎப்படிப்பொன்கிடைக்கும்? என்புத்திரன்
மேல்ஆணை பொன் சிறிதுமில்லேன், உனக்குப் புண்ணிய
முண்டு. நான்சவத்தை ஸம்ஸ்காரம் செய்வதைத் தடுக்கா
திரு' என்று பலவண்ணமாகவேண்டிக் கூறிப் புலம்ப, அவ
ளை நோக்கிப் 'பொன் இல்லையாயின் கழுத்துத்தாலிப்பொன்னை
யாகிலும்கழற்றித்தந்துஸம்ஸ்காரம்செய், இல்லையெனின்யான்
செய்தலொட்டேன்' என்றுகூற, அதுகேட்டவுடன் ஒன்றும்

தோன்றாதுமயங்கி 'இஃதுஎன்ன விபரீதகாலமோ அறிகிலே னே! என்கழுத்தில் தாலி கணவனுக்கன்றிக் கட்டுபப்படா தே! இதுவும்ஓர்புதுமைஇருந்தபடியென்!' என்றுமிகவும்சிந் தையுற்றவளாய் விநயத்துடன்வினவலுற்றனள்: 'ஓமகாவீர! கருணைபுரிந்து விடைதரல்வேண்டும்' என்று பிரார்த்தித்து, பின் 'நீயார்? காலருத்திரன்போல் இங்குஇருக்கின்றனே. ஊர்ஏது? பேர்யாது? எக்குலத்திற் பிறந்தாய்? யதார்த்த மாகச்சொல். என்கழுத்திற்றாலி உன்கண்ணிற்பட்டது எப் படி? கணவனேயோ? புலையனுக்குஅடிமைபுகுந்ததேன்? மதி வல்லோய்! மறையாதுபகர்' என்று கண்ணீர்சோரமனமறுகி நின்றனள். அதுகேட்டவுடன் அவனும் இவள் மனைவியெ ன்றும் மகனும் தன்மகன்தான்என்றும் இதுவும் விசுவாமித் திரமுனிவர்செய்த மாயைதான்என்றும் உளம்நொந்து ஈசு வரனைநினைந்து பின் சிறிதுஆறி நாணத்தோடுதலைவணங்கி, 'இவ்விடர்எல்லாம் விசுவாமித்திர முனிவர்மாயையால் நேர்ந் தன. இராச்சியமுழுதும் கவர்ந்து தனத்தில் ஆரத்தி நக்ஷத்தி ரகனைஏவி அடிக்கடிபீடித்து இக்காசிநகரம் சேர்ந்தபின் யான் மனைவியை விற்றுப்பொருளீய, அதைத் தம் கூலிக்காயிற்று என்றுசொல்ல என்னைப் புலையனுக்கு விற்றுப் பொருள் வவ் விட்டுபோயினபின்னும், மனதில் இரக்கம்என்பது சிறிது வும்இன்றி பகனையுமட சொல்வித்தனரே! அம்முனிவர் பாதத் திற்பத்தியோடு அருச்சனைசெய்தேனேயன்றி அவர்திருவுள் ளத்துக்கு அணுவளவும் குறைவுசெய்திலேனே! ஏனோ அளவற்ற கொடுமை இயற்றி இன்னல் பயத்துவிகின்றனர்! ஏதுவரினும்எம்பெருமான்அருள். நேர்ந்தவெல்லாம்நுகர்ந்தே ஒழியவேண்டும்' என்று நடுங்கிநாணி 'இந்தச்சவத்தைத் தக னம் செய்வதாயின் என்இறைவன் வீரவாகுவின் கட்டளைப் படிகட்டணம் கொணர்ந்தாலன்றி ஸம்ஸ்காரம்செய்யவொட் டேன். ஸ்வாமித்துரோகம் செய்யலாகாது; செய்யின் மீளா நரகம் எய்ப்பது துணிவு. பர்வதங்களும் கடல்களும் அல்ல

பூமிக்குப்பாரம். தலைவனைவஞ்சிக்கும் துரோகியே நிலப்பொறை எனப் பெரியோர்புகலுவர். நீரிற்குமிழி போன்றயாக்கைநிலையிலையெனநம்பி நீடூழிக்காலம் நரகம் அநுபவிக்க நடுவின்றித் தீவினைபுரியலாமோ! பிறந்தபோதே இறப்பது திண்ணம். "நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந்தடுக்கிலென்!" அட்டை ஒருபுல்லைத்தொட்டு மற்றொன்றை விடுவதுபோல் ஆன்மா ஓர் உடல் புகுதற்கே மற்றொன்றை ஒழிப்பது. இடும்பைக்கு இடும்பை" ஆய், "புன்னுனிமேல் நீர்போலும்" "மலைபாடுமஞ்சுபோலும்" நிலையாதுநீங்குவதாய், "குருங்கொழுவும் குருதியும் என்பும்-தொடரு நரம்பொடுதோலும்-இடைஇடையே-வைத்த தசையும் வழும்பும் ஆய்", "ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்-கோதிக் குழமலைக்கும்கும்பம் ஆய்" நாற்றம்வீசும் இவ்வீனமாகிய உடலுக்காகப் பாவஞ்செய்வேனோ! உயிர் உடல்விட்டு நீங்கினால் மாதாஆர்? பிதாஆர்? சகோதரன்ஆர்? மனைவிஆர்? மகன்ஆர்? பூர்வசன்மத்திற் கொடுக்கவேண்டும் இரணத்தின் சம்பந்தத்தினாலே பசுவும் பத்தினியும் சுதனும் விடும்நேரும். இரணந்தீர்ந்தால் உடனேநீங்கும். நீங்காத்துணைவர் அறுவர்: யாவரெனில், மனமடங்குதலேமனைவி; பொறுமையே புத்திரன்; வாய்மையே அன்னை; அறிவே அத்தன்; அறமே சகோதரன்; கருணையே மித்திரன்; மற்றவர் நிமித்தத்தினால் உறவினர். இவர்களைத்துறந்து உடல்காக்க ஒல்லேன். நீ என் வாய்மைவிரதத்தைச்சிதைக்காது இன்னே உன் இருப்பிடஞ்சென்று அவ்வேதியனைவேண்டி ஒருபணமும்பிணக்கோடித்துண்டும் வாய்க்கு இடும்அரிசியும்வாங்கி வந்துகொடு; விரைந்துசெல்' எனமறுத்துக்கூற, மகவை அங்கேயேவைத்துப் பட்டணத்துக்குள் விரைந்து செல்லாநின்றனள். இச்சமயங்கண்டு விசுவாமித்திரமுனிவர், தவத்தின் பெருமையாற் கள்ளன் ஒருவனை நிருமித்தனர். அவன் கிராதனாய் வாள் கையில் உருவிப்பிடித்துக் கோரரூபனாய்

நீண்டமீசையும் கறுத்தநிறமும் உடையனுய்க் கறுப்பு உடை உடுத்துக் காலன்போல்நின்றனன். அவனைக்கௌசிகமுநி வர்விளித்து 'நீ அரசன் மாளிகையிற்சென்று விலைஉயர்ந்த அணிகள் அணிந்த அவ்வரசன்குழவியைக்கொன்று அணி களைக்கழற்றி, மன்னவர்மறுகிற் செல்லாநிற்கும் அரிச்சந் திரன்மனைவிகையில் வைத்துவிட்டு ஓடிப்போ' என ஆணை செய்ய, அவனும் அன்னவண்ணமே அரசனுடைய அரண் மனையிற்சென்று செவிலியின் அருகில் அணையிற்படுத்துத் துயிலும் வேந்தன்மகவைக் காவற்காரரும் மற்றுமுள்ளவர் களும் ஒருவரும் அறியாமற் கழுத்தைத் திருகிக்கொன்று அணிகளை எல்லாம்கழற்றி ஆடையிற்கட்டி எடுத்துக்கொ ண்டோடினன். பின் செவிலி விழித்துக் குழந்தை கழுத்து முறிந்து இறந்திருப்பதும் அணிகள் கழற்றியிருப்பதும் கண்டு ஓ என்றுஅரற்றி அழுது, கள்ளன்! கள்ளன்!! என்று கூவினள். அப்புலம்பொலிகேட்ட அரண்மனையில் உள் ளோர் அனைவரும்வந்து கூடினர். அரசனும் அவன் மனைவி யும்வந்து மக இறந்ததைக்கண்டு மிகவும் கலுழ்ந்தனர். அங் குள்ளதொழுத்தையரும் தொழும்பரும்யாவரும் கடல்போல் ஓலமிட்டனர். அரசனும்உடனே அவைக்கண் அணுகிக்கள் வனைநாடச் சேவகர்களைவிடுக்க, அவர்கள் ஆயுதங்கள் கைப் பிடித்துத் தெருக்கள்தோறும் தேடிச்செல்லலுற்றனர். கள் வன் அம்மறுகில் அழுது அலமந்துசெல்லும் சந்திரமதியைக் கண்டு, 'மாதர்க்கரசே! இந்நள்ளிரவில் தனியே புலம்புகொ ண்டுசெல்வதேன்? நேர்ந்தஇடுக்கண் என்?' எனப்பரிவோடு வினவ, அக்கற்பின்கிழத்தி உள்ளவாறு கரவாது நேர்ந்த வெல்லாம் விளம்பக் கேட்டு, தானும் அநுதபிப்பான் போற் பாவித்துக் கண்ணீர்சோரநின்று, 'என்சகோதரி! தெய்வச் செயலுக்கு யார் என் செய்யலாம்? "முற்றியிருந்தகனியொ ழியத்திவளியால்-கற்காய் உதிர்தலுமுண்டு." மயிர்நரைத்து தோல்திரைந்து பல்வீழ்ந்து சொல்தளர்ந்து தாழ்ந்துமடி

ந்து தலைநடுங்கித் தண்டுகோலாய் ஊன்றிக் கால்தளர்ந்து பீளை சோரக் கண்ணிடுங்கி இருமி இளைத்து மூத்த விருத்தர்கள் இருக்க, இளையவர்கள் இறப்பதும் இவ்வுலகில் உள்ளது. ஏங்கி என்பயன்?' என இன்னுரைபகர்ந்து 'இனி இரங்காது இப்பொருள்கொண்டு உன்மகனுக்குச் செய்யவேண்டும் தீச்சடங்குசெய்' என்று வலிய அவள் முன்றானையில் அணி முடிப்பைக் கட்டி அவண்நில்லாது அகன்று கரந்துபோயினன்.

---

## உகூ - ஆவது அத்தியாயம்.

### சந்திரமதியைக் கொலையாளியென்று தலைவாங்கத் தீர்மானித்தல்.

உடனே அரசன் சேவகர்கள் ஆயுதங்களோடு ஆரவாரித்துக்கொண்டு அம்மறுகில் அணுகி ஆங்கு ஆடையில் அணி முடிப்போடு இருக்கும் சந்திரமதியைக்கண்டு 'இவளே நமது மன்னவன் மதலையைக்கொன்றமாபாவி; கடுநெஞ்சு உள்ள கள்வி. இரக்கமின்றி எங்கோன் மகவைக்கொன்றை நீயேஅன்றோ?' என்று பலவாசத்தெழித்து உரப்பி எற்றி இடித்துப்பிடித்து இழுத்து வெருவத்தகும் உருவமுள்ள வீரனுகிய வீடணனென்னும் நகரவிசாரணைத்தலைவனிடம் கொண்டுவிட்டனர். அவனும் எழுந்துவந்துபார்த்து மிக்க வியப்படைந்து கோபாவேசங்கொண்டு வாள் உருவி 'யானும் இதுகாறும் கள்வர்பலரைக்கண்டேன்; இவ்வளவு குரூரமான சிந்தையும் துணிவான செயலும் உடையாரைக் கண்டிலேன்; இவள் தோற்றமும் செயலும் ஒவ்வவில்லையே! இவள் தலையை எறிவேன் என்றாலோ, பெண்கொலைபெரும்பாவம்; ஏதுசெயற்பாலதோ அறிகிலேன்; அரசனருகில் அழைத்துச்சென்று அவன் ஆணையின்வண்ணம் நடப்பதுகடமை' யென்று அரசன் மாளிகைக் கண்ணுய்த்து, அவைக்கணவனே புத்திரசோகத்தால் அலமாலு

ற்ற அரசனைநோக்கி, 'வேந்த! நின்மகனைக் கொன்ற கள்வி இவள்; இவ்விரவில் அரண்மனை எய்திமகனைக்கொன்று அணிகளைக்கைக்கொண்டு ஆடையிற்கட்டித் தெருவிற் புறப்பட்டுச் செல்லமுயலுகையில், நம்சேவகர் நகரம் எங்குந்தேடி நடுவண் இவளைக்கண்டு பிடித்துக் கொண்டுவந்தனர்' என்று கூறி, அணிகளையும் அரசன் எதிரில் வைத்தனன். அவ்வாற்றைக் கேட்ட அண்ணலும் அவ்வணிகளை எடுத்துக் கண்ணிலும் முகத்திலும் மார்பிலும்வைத்து, ஏங்கி ஏங்கி இரங்கினன். 'என் செல்வக்குழந்தாய்! உன்னைப்பிரிந்து ஒருகணமும் உய்வேனோ? தேவதேவனை உன்னி நெடுநாள்நோற்ற நோன்பின் பயனாக உன்னைப் பெற்றேன். உன்னையன்றியுய்வேனோ? இவ்வரசாட்சியேன்? மனையேன்? உடலேன்? ஏதும்வேண்டேன், என் கண்மணியே! யான் முன்செய்தபாவம் இவ்வாறு நேர்ந்தது. என்னினும் பாவஞ்செய்தோர் இவ்வுலகில் இல்லை' என்று சொல்லி அடிக்கடி சோர்ந்து அழுது இககள்வியைப் பார்த்து, 'கல்லினும் கடினசித்தமுடையாய்! இராக்ஷசி! இரக்கமின்றி இக்குழவியை என்னவண்ணம் கொலைபுரிந்தனையோ? உனக்கு அணிகளும் பொருளும் வேண்டுமாயின் என்னை யாசித்தால் தருவேனே! நீ என்னகொடுமை செய்தாய்! மாதருவம்கொண்டு மாயைசெய்யும் அரக்கி நீ' என்று இகழ்ந்து, 'இக்கொடியவளைப் பெண்ணென்று நினைத்து உயிரோடுவைப்பின் உலகெல்லாம் அழித்துவிடுவாள்; ஆதலினால், இவள் தலையைத்துமிப்பதேகடன். இறைப்பொழுதும் தாமதியாது இப்பொழுதே சிரத்தைத் துணித்து வதைபுரி' என்று ஆணைசெய்தவுடன், அந்நகரவிசாரணைத்தலைவன் அவள் கையிரண்டையும் பின் இறுக்கிக்கட்டி, கூந்தலைப்பிடித்து இழுத்து இராஜவீதியிற் செல்லாநிற்க, இதுகண்ட நகரமாக்கள், 'குழந்தையைக்கொன்றபாவி இவள்; அரக்கியேயன்றி மாநுடப்பெண் அல்லள். இவள் ரூபம் என்ன? செயல் என்ன? ஆயுதம் உருவிக் கைபிடித்தகாவலாளரை எல்லமா

யம்செய்து உட்சென்றனளோ! பெரியகவாடங்களின் திண்ணிய இருப்புத்தாழ்களை எவ்வாறு நெகிழ்த்தனளோ! இவள் வலியேவலி! மனிதருளாகுவளோ! கள்வர் பலரைக்கண்டோம்; பெண்களிற் களவுசெய்பவரைக்கண்டிலம். அதிலும் இக்கொடுமை எங்கும் கண்டிலம். இவளை உயிருடன்விடின் இரவில் எவரும் உறங்கி எழுவது ஐயம்' என்று இவ்வாறு அதிசயித்துக்கூறினர். சிலர் 'இவள் முகத்தைப்பார்த்தால் தீங்கு செய்தவளாகத் தோன்றிலள். திருமகள்போலிருக்கிறாள். இக்கொலையும் களவும் மாயமுள்ளவன் யாவனோசெய்து மன்னர் சேவகரைக்கண்டு நகைகளை இவள்மடியில் எறிந்திருக்கவேண்டும். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்"; "பகைமையுங்கேண்மையும் கண் உரைக்கும்" என்றபடி இவள் முகத்தையும் கண்ணையும் பார்த்தால் தீங்கு ஒன்றும் இழைத்திலள் என்றே தோன்றுகின்றது. எவர்உள்ளம் எவர்க்குத்தெரியும்? எல்லாம இறைவன் திருவுள்ளத்துக்கே தெரியும்' என்றார். 'பெண்களுக்கு ஆடவரினும் உண்டி இருமடங்கு, துணிவு ஆறுமடங்கு' என்றார்சிலர். 'நன்குஆய்ந்தே இவளைவதைபுரிவது அறம்; இல்லையேல் வேந்தனைப் பெண்கொலைசேரும்' என்றார்சிலர். இன்னணம் எல்லாரும அச்சமும்வியப்பும் அடைந்துகூறுநிற்க, அந்தஅதிகாரியும் வீரவாகுவைவிளித்து, 'அரசன் ஆணைப்படி இவளைத்தலையைவெட்டிவிடு; எள்ளளவும் இரக்கமின்றிக் கங்கத்தலைதுமித்துவிடு. குழந்தைகளைக் கொல்பவள் இக்கொடியவள் உலகில்இருக்கல்ஆகாது' என்று அரசன் முத்திரையோடு ஆணையும் கொடுத்தனன். அவ்வீரவாகுவும் தன் சேவகர்களோடு நகர்ப்புறம்நண்ணி அவர்களைநோக்கி, 'நீவிர் இக்கொடியவளை இழுத்துக்கொண்டு மயானம்சென்று என்சேவகன் வீரதாசன் என்னும் பெயரினனாய் மகாவீரனாய் மிக்கசினமுடையனாய்ச் சத்தியமுள்ளோனாய் மயானத்திற் காவலாய் இருக்கின்றவனிடத்தில் ஒப்பித்து இச்சிறு

ளைக்கொல்லியைச் சிரச்சேதம் செய்யும்வண்ணம் என் னாணையை அவற்குரைத்து மீளுங்கள்' எனக்கட்டளையிட, அவர்களும் அவ்வண்ணமே வீரதாசனிடத்தில் இழுத்துச்சென்றுவிடுத்துச் சிரச்சேதம்செய்ய வீரவாகுவின் கட்டளையும் உரைத்துமீண்டனர். உடனே இருள்கீறிக் கதிரவனும் குணதிசைச்சிகரியின் உச்சியில் தோன்றினன். கயிற்றாற் பிணித்துத்தண்டித்துப்புடைத்து அலைத்து ஈர்த்துக்கொண்டு விடப்பட்டவள் தன்மனைவியே என்று அரிச்சந்திரன் அறிந்து துயர்க்கடலில் மூழ்கி ஒன்றும் தோன்றாது ஓய்ந்து நின்று, விழுவான் ; எழுவான் ; மீண்டும் மூர்ச்சித்து விழுவான். இவ்வண்ணம் அளப்பரிய துயரம் அநுபவியாநின்று சிந்திக்கலாயினான் : 'இவளோ அன்புள்ளமனைவி; மகாராஜன் மகள்; எல்லாச்செல்வமும் எல்லா இன்பமும் நுகர்ந்தவள்; அநேக ஆயிரம் தாதிகள் சூழ்ந்துபோற்றும் பாதபங்கயமுள்ளவள்; இரத்தினம் இழைத்தமாளிகைகளிலும் விலையற்ற மேன்மையுற்ற சயனங்களிலும் ஆசனங்களிலும் மாடங்களிலும் எனக்கு உயிர்த்துணையாயிருந்தவள்; எல்லாப்பிரசைகளிடத்தும் தாய்போல் அன்புள்ளவள்; முனிவர்க்கும் பெரியோர்க்கும் அன்புடன் பூசனைபுரிந்தவள்; தரையிற் கால்தோய்ந்தறியாதவள் ; மாடமும் மாளிகையும்விட்டு முள்ளும்பரலும்உள்ள அதர்தொலைத்து வனம்புகுந்து பசியினும் தாகத்தினும் இளைத்து இந்நகர்புகுந்து பின் காலகௌசிகனுக்கு விலைப்பட்டு அடிமையாய் அலக்கண்எல்லாம் அநுபவித்தனள். மகனும்இறந்தான். இவ்வின்னலும்இவட்குநேர்ந்தது. என்கையினாற்றானே கொலைசெய்யவும்நேர்ந்ததே ! என்செய்கேன்! நான் வீரவாகுவுக்குவிற்கப்பட்டுப் புலைத்தொழிற் பூண்டதும்அன்றி மனைவியைக்கொலைபுரியவும் நேர்ந்ததே! இறைவா! எவ்வுயிருங்காப்பவனே! கருணைக்கடலே! இடரகடியும் எம்பிரானே! என்னையாள்வானே! எல்லாஉலகும் ஆளுடையமூர்த்தியே! உன் அருள் இதுவோ?' என்று ஏங்கி இர

க்கி வாளினால் அவள்கட்டை அறுந்து, 'ஆ! என்ன இன்னல் நேர்ந்தது! உன்சிரம்சேதிக்கக் கையெழவில்லையே! என்னி னும்பாவி இவ்வுலகில் உண்டோ?' என்று அவளைத்தழுவி அழுதழுது அலமரலுற்றனன்.

---

## ௨௭ - ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரன் தன்மனைவியின் சிரத்தைச்சேதிக்க வாள்வீசுதல்.

அதுகண்டசந்திரமதி மனந்தேறி மன்னவனைப்பணிந்து, 'மதிவல்லோய்! கலைக்கடல்கடந்தோய்! உடலின் இழிவும் புகழின் உயர்வும் நன்குணர்ந்தநரபதியே! நீயும் அறியா தார்போல் தைரியம்இழந்து இவ்வாறுகலங்குதியோ? கலங் கேல். உன்றன் பெருங்குணங்கண்டு அறவாழிமூர்த்தி அருள் புரிவார்; ஐயமில்லை. உன்கையால் கொலையுறப்பெறுவதே எனக்குநேர்ந்த நோன்பின்பயன். என்மனநிறைவிற்குத்தடை யில்லை. நிலையில்லா இவ்வுடல் இருந்தென்பயன்? உன்சத்தி யந்தைகவிடேல். எல்லாவுலகும் வாய்மையினாலேயே நிலை நின்றன. எவ்விதரும் இதனாலேயேகொலையும். என்னைக் கொலைசெய்ய மனந்தளர்ந்து செய்யாயாயின் ஸ்வாமித்துரோ கம் ஸம்பவிக்கும். அஃது எல்லாவற்றினும் தீங்குள்ளது; ஆத லின், அக்குற்றம் அணுகாமே துணிந்து என்தலையை வெட்டி விடு. இதனால் உனக்குமேன்மையேநேரும்; ஒருகுறையும் நேராது' என்று தொழுதுசொல்லச் சிறிதுஆராய்ந்து, 'நான் பண்ணியபிரதிஜ்ஞை சிறிதும்தவறுதல்உறேன். என்கையால் உன்னையும் கொன்றபின்செய்யவேண்டுவதுஎன்தான்?' என்று நெட்டுயிர்ப்பு எறிந்து 'சுவாதீனமுள்ளபோது நோன்பும் தயையும் நோக்கல்வேண்டும். அடிமையாய் ஒருவன் ஆணை ப்படிசெய்பவனுக்கு அருள்ஏது? நோன்புஏது? என்தலைவன் கட்டளையின்படி கொல்வதேசெயற்பாலது' எனத்துணிந்து எழுந்து வாள்உருவிக் கையிற்பிடித்து மனைவியாகிலும் ஆம்,

மற்றெவள் ஆகிலும் ஆம், அஃது ஆராய்தற்கடமை எனதோ? என்தலைவன் ஆணைகடவாமையே எனக்குரோன்பு' என்று சொல்ல, அவனும் தன்கணவனை மூன்றுதரம் வலம்வந்து வணங்கி மனக்களங்கமற்றுக் கொலைக்களப்பாறைமீது ஏறி நின்று, ஜகந்நாதனைத் தியானித்துச் சூரியனைப்பார்த்து, 'தாமரைகேள்வ! எல்லாவுலகுக்கும் ஒளிகொடுப்பவனே! நித்தியநைமித்திககருமங்களும் வேள்விகளும் நிறைவேறச் சாக்ஷியாயிருந்து பயன்தருபவனே! முத்திக்கு வழியாயிருப்பவனே! கதிராயிரங்கொண்டகடவுளே! என்கணவன் வாய்மைதிறம்பாதவனாயின் இவ்வுலகமுற்றும் ஆளுக. என்னிடத்துக் கற்புளதாகில் இம்மன்னவன் எவ்வுலகும் ஆளுக. யான் ஆயிரம்சனனமாயினும் தவஞ்செய்து இவ்வரிச்சந்திரனுக்கே மனைவியாக அருள்புரி' என்றுபிரார்த்தித்து, சூரியனைப்பார்த்தபடி கொலைப்பாறைமேல் நிற்க, மன்னவனும் மனந்துணிந்து வாள்எடுத்து அவள்கழுத்தில் எறியத்தொடங்க, அக்கணமே விசுவாமித்திரமுனிவர் ஓடிவந்து அரிச்சந்திரன் கையைப்பற்றிக்கொண்டு 'க்ஷத்திரியவம்சத்திற் பிறந்து பத்தினியை வதைக்கத்தொடங்கினை; உன்மூர்க்ககுணமும் கொடுமையும் பாவத்துக்கஞ்சாமையும் எவ்வளவு அஞ்ஞானத்துக்கு ஏதுவாயினபார். சக்கிரவர்த்தியென்று பேர்பெற்று மனைவியைக் கொலைபுரியலுற்றனை. நின்மனந்தான் என்ன கல்லோ? இன்னும்பார்; மனைவியில்லாதவீடு இடுகாடொக்கும்; அதில்வசித்தாலும் இழிவுண்டு. மனைவியில்லான் செய்யும் கருமமெல்லாம்பயனற்றவை. அவன் பிறப்பும் பயனற்றது. வசிட்டர் இதுதானோ உனக்கு உபதேசித்தார்? பத்தினியைக்கொன்றாற் பாவம் இல்லையென்றும் பெண்கொலை பாவம் அன்றென்றும் உபதேசித்தருளினரோ? பத்தினியைக்கொலைசெய்து புண்ணியந்தேடி எவ்வுலகஞ்செல்லக் கருதியிருக்கின்றனை? பதிவிரதையான பத்தினியைக் கொல்லிற் சத்தியத்தினாற் சுவர்க்கஞ்சேருமோ? அவளின்

திச் சுவர்க்கத்தில் இருப்பு ஆனந்தமுள்ளதோ? பத்தினியும் புத்திரனுமின்றி அநுபவிக்கும் சுவர்க்கமும் நரகத்துக்கு ஒப்பேயன்றி வேறன்றே. என் வாக்கியங்கேளாமையால் இராச்சியமும் தனமும் சுகமும்இழந்து வனத்தில் வெயிலிலும்மழையிலும்வருந்தி மனைவியைவிற்றுப் புலையனுக்கு அடிமையாய்ச் சாதியினின்றும் கருமத்தினின்றும் பதிதனாய்ப் புத்திரனும் பாம்புகடித்து இறந்து பத்தினியையும் கொல்ல நேர்ந்தது. இனியாயினும் என் உரைகேட்டு இல்லையென்று ஒரு மொழிசொல்வையாயின் இராச்சியமும் தருகிறேன்; எல்லாப்பொருளும்தருகிறேன். மகனும்பிழைப்பான். மனைவியோடு சுகமேயிருக்கலாம். சுவர்க்கமும் என்தவப்பெருமையால் உனக்குக்கிடைக்கும். இப்பாவச்செயலைத் துறந்துவிடு' என்று கூற, அரிச்சந்திரன் விசுவாமித்திரமுனிவரைவணங்கி அறையலுற்றனன்: 'முனிவர்க்கரசே! கருணைக்கடலே! பரிசுத்தமான ஒழுக்கத்தவரே! உலகெல்லாம் பரிசுத்தஞ்செய்யவல்லீரே! எல்லாம் அறிந்த தேவரீரும் என்னை இவ்வண்ணம் புகலற்பாலீரோ? தேவரீர் திறல் யான் அறியேனோ? உலகம் தெரிந்ததே! இராச்சியமும் சுவர்க்கமும் மனைவியும் மகனும் சுகமும் செல்வமும் யான்வேண்டேன். எவ்வுலகும்படைத்துக்காத்து அழிக்கும் எங்கும் நிறைந்த பரஞ்சோதியைச் சத்தியத்தினால் அருச்சித்து அவன் அடிபணிந்துய்வேன். எனக்கு வேறொன்றிலும்பற்றில்லை. மீண்டும்மீண்டும் எனக்கு உரைத்தல்வேண்டாம். அருள்புரிந்து நும்மிடமேஎழுந்தருளுக. சத்தியவிரதம்ஒழியேன். தேவரீர் இராச்சியங் கொடுத்தால் நான் கொடுத்ததை நானே கொள்ளலாகுமோ? அந்தணனுக்குக் கொடுத்தபூமியை அணுவளவாயினும் கொள்பவன் சண்டாளன் அல்லனோ? தத்தாபகாரம்என்னுங் குற்றத்தினாரன்றோ இழிந்தபிராணிகளாகப் பிறக்கிறார்கள். பல்லாயிரம்ஆண்டு நரகமும் அநுபவிக்கிறார்களன்றோ? தேவரீருக்குக்கருணை உண்டாயின் என் சத்தியவிரதங்கெடாது

அறுக்கிரகித்துச்செல்லுக' என உறுதிகொண்டிருக்க, விசுவாமித்திரமுனிவர் நாணமுற்றுத் தம் பிரதிஞ்ஞை பயனற்றதாக, மிகுந்தசிந்தையுடன்மோனமாயிருந்தனர். பின் அரிச்சந்திரன் வாளெவிசிமனைவியின்கண்டத்தில் ஓச்சினான். அது கண்டதேவர்களெல்லாம் திகைத்து நின்றனர். அவ்வாள் அவள்கந்தரத்தை அறுக்கவில்லாதுநின்றது. அதுகண்டுஅரிச்சந்திரன் 'சுவாமித் துரோகம் யான் சிறிதுஞ் செய்திலேனே! பொய் ஒன்றும் சொன்னதில்லையே! என்மனதிற்கரவுநினைத்திலேனே! எப்படிஎன்வாள்தடைப்படலாம்' என்று சிந்தையில் அழுந்தி, மீண்டும் அவ்வாளைஎடுத்துஓங்கிக் கழுத்தில் எறிய, அது மலர்மாலைபோல்விழுந்தது. மீண்டும் அரிச்சந்திரன் சினங்கொண்டு 'யான் சத்தியவிரதம் திறம்பாதவனாயின் இவ்வாள் சிரத்தைச் சேதிக்கக்கடவது' எனச்சிந்தித்து மீண்டும் அவ்வாளைஎடுத்து ஒச்சமுயல, இதற்குள்வானத்தில்வந்திருந்த வானவர்எல்லாரும் 'ஆ ஆ! அரிச்சந்திர! சத்தியவிரத! அவ்வாறுதுணியற்க' என்று பகர்ந்தனர்.

---

## உஅ - ஆவது அத்தியாயம்.

### திரிமூர்த்திகளும் பிரத்தியக்ஷமாய் அரிச்சந்திரன் மனைவியைக் கொலைசெய்யாது தடுத்துச் சத்தியவிரதத்தை மகிழ்தல்.

அவன்கரத்தைத் திரிமூர்த்திகளும்பற்றித் தடுத்தனர். தேவர்களும் முனிவர்களும் தத்தம்மனைவிகளோடு வந்து ஈண்டி எங்குமநிறைந்தனர், விசுவாமித்திரமுனிவரும் நாணத்தினல் தலைகவிழ்ந்து ஒன்றுந்தோன்றாது தம்பித்துநின்றனர். பிரமன் முதலியதேவர்கள் அம்மன்னவனைநோக்கி, 'ஓ அரிச்சந்திர! சத்தியவிரத! உன்புகழ் என்றும் அழியாமல் உலகமெங்கும் பரிசுத்தமாக்கக்கடவது' என்று தனித்தனி பியபுகழ்ந்தனர். அரசனும் தேவர்கள் எல்லாரும் அருள்புரி

ந்து எதிர்நிற்பவரைக்கண்ணாரக்கண்டு களித்து ஆனந்தபரவசனாய், மனைவியுடன் அவர்களை வலஞ்செய்து வணங்கித்துதிக்கத்தொடங்கினன்:

'எத்தேவர்க்குந்தேவனே! எவ்வுலகுக்கும் காரணனே! வேதங்களின்சாரமே! நித்தியனே! நிமலனே! எங்கும்நிறைந்தபொருளே! எவற்றுள்ளும்கரந்துறைந்து எவற்றையும் நின்வயின் அடக்கினவனே' என்று எப்பொருட்கும் இறைவன்பதம்போற்றி, 'என்பிறவி பயனடைந்தது; என் துன்பமெல்லாம் ஒழிந்தன' என்றுதுதித்தனன். திரிமூர்த்திகளும் வேந்தர்வேந்தனைத் தங்கைகளினால்தடவி 'உனக்கு என்ன இடர்நேர்ந்தும் உண்மைதவறாது இருந்தாயே! உனது ஒழுக்கங்கண்டுமகிழ்ந்தனம். இம்மூவுலகிலும் கிடைத்தற்கரிய வரம் நீ வேண்டுவனவற்றைப்பெறுக' என்று அருளிச்செய்ய, அரசன் மௌனமாய் ஒன்றும்மொழியாது இருந்தனன். அதுகண்ட பிரமதேவன் 'நீ உன்மனதில் எண்ணியிருக்கும் இழிதகவை ஒழி. அருவருத்தல் கொள்ளல். இம்மயானமோ வேள்விச்சாலை. இவைமயிர்கள் அல்ல; குசைகள். இவை சமித்துகள்; சவத்துள் அல்ல. இவைதலைகள் அல்ல; யாகபாத்திரங்கள். இவ்வந்நிகள் திரேதாக்கினிகள்; பிரேதாக்கினிகள் அல்ல. இவையூபஸ்தம்பங்கள்; சூலங்கள் அல்ல. அவ்வரவம் வேதமந்திரத்தின்கோஷம்; பூதகணங்களின் அரவமல்ல. இருத்துவிக்குக்கள் இவர்கள்; பூதமுதலியகணங்கள் அல்லர். உனக்குத்தலைவனும்வீரவாகுவும் புலையன் அல்லன்; தருமராசன். அக்காலகௌசிகன்கலிராஜன். நக்ஷத்திரகன் சுக்கிரபகவான். உன்மகனைக்கடித்தவன் தக்ஷகன். வேட்டையில் வந்தவிலங்குகளும் நீ அவண்கண்டபூஞ்சோலையும் பூம்பொய்கையும் வெயிலும் மழையும் வேதாளமும் முள்ளும்கல்லும் காட்டுத்தீயும் இன்றிரவு பாலகன் இறந்ததும் விசுவாமித்திரமுனிவர் மாயையால்உண்டாயின. அவர்தவம் இதனால் எவ்வளவு அழிந்துபோயின! உனக்கு ஞானக்கண்தருகிறேன்

பார்' என்று அநுக்கிரகஞ்செய்தவுடன் எல்லாம் பிரமன் சொல்லின்வண்ணமாய் இருக்கக்கண்டு, மனக்கவலை நீங்கி நின்றனன். உடனே தேவாதிதேவன் பின்னும் அரசனைநோக்கி 'உனக்கேன்மனக்கலக்கம்? இவ்வுலகில் இதுமுதல் உன் பேர் சொன்னவர்க்கும் நினைத்தவர்க்கும் கேட்டவர்க்கும் எல்லா இடரும் ஒழியும். எப்பாவமும் நீங்கும். புலையரோடு இணங்கினும் பேசினும் உன்பேர்நினைக்க எல்லாம் ஒழியும். உன்சரிதை இவ்வுலகு உள்ளவளவும் வழங்கக்கடவது. அதுகேட்பவர்களும் சொல்லுபவர்களும் ஊழிதோறூழி பல்லாண்டு இடரின்றித் தூயமனமுடையராய் வாழக்கடவர்' என்றுசொல்லி மீண்டும் 'உனக்குவேண்டும் வரம் கொள்க' என அருளிச்செய்ய, 'நம்புரகத்தில் பிரியா அன்பும், விசுவாமித்திரர் தவம் அழிந்து பிராமணியம்போகாமையும் கருணைசெய்துநல்குக' எனப்பிரார்த்திக்க, மும்மூர்த்திகளும இவன் அன்புக்குமகிழ்ந்து அவ்வாறே அநுக்கிரகித்தனர். 'உபகாரிகளிடத்தில் அன்பிருப்பது ஓர்குணமென்று சான்றோர் கொண்டிலர். அபகாரிகளிடத்தில் அன்புள்ளவனே சற்புருஷன் எனக்கொள்வார்கள். உனக்கு அபகாரஞ்செய்த விசுவாமித்திரமுனிவரிடத்திலும் மிக்க அன்புவைத்தமையால் உன்னிலும்மிக்க ஞானிகளும் முனிவர்களும் யோகிகளும் அரசர்களும் எவர்களும் இல்லை' என்று அங்குவந்தமுனிவாகளெல்லாம பல்லாண்டு வாழ்த்தினர்.

---

## உ௯. ஆவது அத்தியாயம்.

### தேவர் அநுக்கிரகத்தால் குழந்தைகள் பிழைத்தல்.

ஸரஸ்வதி, இலக்ஷ்மி, பார்வதி முதலிய தேவிமார்களும் சந்திரமதியின் கற்புக்கும் பொறுமைக்கும் மகிழ்ந்து 'உன்னால் எவ்வுலகும் வெல்லப்பட்டன. உன்குணத்தினாலேயே உன் கணவனும் வாய்மைவிரதம் நிலைநிறுத்தினான். உன்பேர்சொன்னவர்கள் இடர்தொலைந்து பரிசுத்தராகக்கடவர்' என்று தங்கள் கரத்தினால்தடவி, 'உனக்குவேண்டிய வரங்களைப்பெறுக' எனஉரைக்க, சந்திரமதி 'இனிஎன்றும் என்கணவன் சத்தியம்தவறாதிருக்கவும், எத்தனைசனனம்எடுத்தாலும் அரி

ச்சந்திரனே எனக்குக்கணவனாகும்படிக்கும், இறந்தகுழந்தைகள் இருவரும்பிழைக்கும்படிக்கும் வரந்தரவேண்டும்' என்று சொன்னவுடன், அவர்கள் 'அவ்வண்ணமே ஆகுக'என அனுக்கிரகித்தனர். உடனே லோகிதாசியன் துயில்விழித்தவன்போல் எழுந்து எல்லா அணிகலனும்பூண்டு எல்லோன்போல் ஒளிவிஞ்ச வனப்பே வடிவெடுத்ததுபோல வந்து அன்னைமடியில் உட்கார்ந்தனன். அவளும் பெற்றபொழுதினும் பெரிது உவந்தனள். அப்பொழுதே காசிமன்னவன் குழந்தையும்பிழைத்தெழ, அக்காசிராசனும் அவன்மனைவியும்கண்டு 'இது மகாபதிவிரதையாகிய சந்திரமதியின் பெருமை' என உணர்ந்து அவளைக் கள்ளியென்றுநினைத்துப் பிடித்ததற்காக மனம்வருந்தித் தம்மைக்காக்கும்படி சந்திரமதியைச் சரணம்புகுந்தனர். அவளும்வணங்கி 'இறைவன்கட்டளையின்படி எக்காலத்தில் எதுவருமோ அதுபோகாது. உங்களால்வருவதும் ஒன்றுளதோ? நீவிர் மனக்கலக்கம் அறுமின்' என்று மரியாதைசெய்துவிடுத்தனள். பின்பு விசுவாமித்திரமுனிவர் வந்து அணுகி அரிச்சந்திரனைத்தழுவி, 'நீயே பிறந்ததனாற்பயன்பெற்றாய். உன்கீர்த்தி என்றும் அழியாதிருக்கத்தகுவது. என்னால் நீ பட்ட இடர்களுக்கு ஓர் எல்லையில்லை. நான்செய்ததுன்பத்தினால் இறையும் கலங்காதிருந்தனையே! உன்போல்வார்தீரரும் உளரோ? யானிழைத்த தீங்குமுற்றும் நின்புகழ் வளர்க்கவே ஏதுவாயின. என்னிடத்திலும் சிறிதும் களங்கம்நினையாமல் அன்புவைத்த உன்னை நிகர்ப்பாருமுளரோ? மூவுலகிலுமிலர்' எனப்புகழ்ந்துரைத்தனர். உடனே அரிச்சந்திரன் வணங்கிச் சிரத்திற் கூப்பிய கரத்தனாய், 'மகாநுபாவரே! நும்மாலன்றோ யான்சுத்தனானேன். உமது அருளாலன்றோ மும்மூர்த்திகளும் அநுக்கிரகித்தனர். அறநெறிகளில் உம்மாலன்றோ நன்றாகத் திருத்தப்பட்டேன். நீரேஎனக்கு குருவும்தேவனும். யான் முற்பவத்தில் இயற்றிய பாவங்களின் பயனன்றோ இப்பொழுது அநுபவித்தது' என்று வணக்கத்துடன்கூறும் மன்னவன் கையைப்பற்றிக்கொண்டு, 'என்பிரார்த்தனையை நீ நிறைவேற்றவேண்டும்' என்று பிரார்த்திக்க, அக்குறிப்பு அறிந்த அரசன் 'நுமக்குக்கொடுத்தபூமியை மீண்டுங்கொள்வதுதவிர மற்றேதேனும் இயம்புமின். நும்ஆணை சிரமேற் கொள்வல்.

எனக்கு இராச்சியத்தில் விருப்பமில்லை. நும்போலும் முனிவர் ஆச்சிரமத்தின் அருகு நோன்புபுரிவதே எனக்குஇன்பம்', எனவிண்ணப்பஞ்செய்ய, விசுவாமித்திரமுனிவர் அமரர் அனைவரும்கேட்க, 'ஓ அரிச்சந்திரமகாராசனே! கேள்: நான் தேவேந்திரன் அவைக்கண் சபதம்புரிந்தகாலையில் யான்தோற்றேனேல் உன்னை உலகுக்கெல்லாம் காவலனாக்கிப் பல்லூழிக்காலம் ஆளுகைசெய்யவும் பின் சுவர்க்கத்திற் பல்லூழிக்காலம் தேவராசனோடு ஓர் ஆதனத்திற் சிறப்போடு இருக்கவும் செய்கிறேன் என்று பிரதிஜ்ஞைசெய்திருக்க, என்பிரதிஜ்ஞையைநிறைவேற்ற உன்னால் தடையுண்டாமாயின் நீ பொய்யனாவாய்; நான்பொய்யன் ஆகேன்; ஆதலின் இருவரும் பொய்யராகாது இராச்சியத்தைக் கைக்கொள். தத்தாபகாரம் என்பதுஇஃதன்று. தாதாவாயிருப்பவன்யாசகனைஅழைத்துத் தாரைவார்த்து நல்கினதே தானம். உன்னைவஞ்சித்து வலியப்பறித்தது தானம்ஆகுமோ? மேலும் என்இஷ்டனுக்கு என் இராச்சியத்தைக்கொடுக்கச் சுவாதந்திரியம் எனக்கு இல்லையோ? நீதான் என்மனதுக்குப் பிரியமானவன்; உனக்குத்தான் இதைக்கொடுப்பேன்; யான் இஷ்டமாய்க் கொடுப்பதை நீ கொள்ளல்ஆகாதோ! கூறு' என்றுசொல்ல எதிர்பேச ஆற்றல்இலானாய், அறநெறிக்கு உடன்பட்டு ஒன்றும்உரையாதிருந்தனன். வசிட்டமுனிவரும் தனதுசீடர்களுடன் விரைந்து எழுந்தருள, வள்ளலும்எழுந்திருந்து இறைஞ்சினன். முனிவரும் மன்னவனைத்தழுவி, விண்ணவர்கள் நாப்புண்ணின்று, 'ஓமகாராஜனே! நீ என்னுரை மெய்யாக விசுவாமித்திரமுனிவரால் எண்ணலரிய இடரெல்லாம்பட்டனை. உன்னுடையபுகழ் முன்னினும்மிகுதியாய் மூவுலகும்பரவியது. உன்னுடைய மேன்மைக்கெல்லாம் கௌசிகமுனிவரேகாரணம். அம்முனிவர்செய்கையால் சாணையிற்கடைந்த மணிபோலவும் ஆயுதங்களின் இரணம்அடைந்த விறல்வீரன்போலவும் விளக்கம்பெற்றனை. அவர் உனக்குமகோபகாரி. "நன்றல்ல தன்றே மறப்பது நன்று" ஆதலால் அவரால் அறுபவித்தவெல்லாம் மறந்துவிடு. அவர்சொன்னவண்ணம் செய். மனதிற் சிறிதும் ஐயம்வேண்டாம்' என்று அருளிச்செய்யக் கேட்டு உடனே ஓம்என இயைந்து இராச்சியபாரம் கைக்கொண்டனன்.

பின்பு சுக்கிரனும் யமனும் கலியும்எய்தி 'இறைவ! நீ எங்களாற்பட்ட இன்னலுக்கு ஓர் எல்லை இன்று. ஆயினும் நின் நீதியும் வாய்மையும் இறையளவும்திறம்பாதிருந்தனை. உன்னேயொப்பார் உலகில் எங்கும்இல்லை. உன்புகழ் இரவியும் இந்துவும் உள்ளவரையில்நிலைபெறுக. இம்மையும் மறுமையும் இடையறாவின்பமேறுகர்வை. யாங்கள் இயற்றிய இன்னலை இதயத்துஎண்ணேல்' என இயம்ப, அவர்களைத் தொழுது 'உங்கள் அருளாலன்றோ இடர்க்கடல் கடந்தேன்' என்றுகூறி வணக்கத்துடன் இருந்தனன். அப்பொழுது விண்ணிற் கந்திருவர்பாட அரமகளிர் ஆடத் தெய்வமுரசம் கறங்கப் பல்லியமும் முழக்கினர். அமரர் பூமழைபொழிந்தனர். திரிமூர்த்திகளும்மகிழ்ந்து தேவேந்திரனைநோக்கி 'அரிச்சந்திரமகாராசனை அரியணைமேலேற்றி அரசமுடிசூட்டுக' என்றனர். அமராதிபதியும் தேவர்களோடும் முனிவர்களோடும் இரத்தினம்இழைத்த சிங்காதனத்தில் நித்திலக்கவிகை நிழற்ற அரம்பையர் கவரிஇரட்டச் சந்திரமதியோடு இருக்கச்செய்து நிமலமாய்ப் பரிமளமுள்ள புண்ணியதீர்த்தத்தினாலும் ஆகாசகங்காசலத்தினாலும் தனக்கு வசுக்கள்செய்வதுபோல் அபிஷேகஞ்செய்தனன். தேவதுந்துபி முழங்கின. சுரர்கள் பூமழைபொழிந்தனர். அரம்பைமுதலியோர் நடனமாடினர். முனிவர்கள் ஆசிமொழிந்தனர். இந்திரன் அழைக்கச் சத்தியகீர்த்திஎன்னும் அமைச்சன் சதுரங்கசேனைகளுடன் பலதூரிய முழக்கங்களோடு விசுவாமித்திரமுனிவரிடம் சென்றுவணங்கி 'இப்பொழுது எங்கள்வேந்தன் நீவிராதலின் என்செயற்பாலதோ அருளுமின்; அன்னவண்ணமேயொழுகுவல்' எனவிண்ணப்பஞ்செய்ய, முனிவர் அவன்கையினின்று அரசமுத்திரை ஆழியைவாங்கி அரிச்சந்திரன் அத்தத்திலீந்து மனம்மகிழ்ந்து 'இவ்வுலகம் முற்றும் ஆளுக; பலநூற்றாண்டுவாழ்க' என ஆசீர்வதித்து முடியும் கவித்து, 'கவரிவீசக் கவிகைநிழற்றச் சந்திரமதியோடு அயோத்திநகரம் எய்துக' என ஆசிகூறினர். அமரர் அனைவரும் தத்தம் இடம்சென்றனர். விசுவாமித்திரமுனியும் தம் தவம்இழந்த துக்கத்தினால் முகம்வாடி மீண்டும் தவமியற்ற வனஞ்சென்றனர்.

## ௩௦ - ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரமகாராசன் மீண்டும் அயோத்தியில் அரசாளுதல்.

அரிச்சந்திரமகாராஜனும், கரிகளும் பரிகளும் இரதங்களும் பதாதிகளுஞ்சூழ, குடிகளும் அமைச்சர்களும் கேண்மையரும் கொண்டாட, இரத்தினசிகரங்கள் அமைத்து நித்திலத்துவசங்கள் கட்டிப் பொன்னினும் மணியினும்சமைத்த உச்சயிச்சிரவம்போன்ற இவுளிகள்பூட்டிய இரதத்தில் இல்லாளோடும் மைந்தனோடும் இவர்ந்து வசிட்டமாமுனிவரைமுன்னிட்டுக்கொண்டு, அரம்பை கமுகு கன்னல்முதலிய நாட்டித் துளிர்களும் துணர்களும் துன்றிய தோரணங்கள்கட்டிப் பனிநீர்தெளித்துக் கத்தூரிமெழுகி நித்திலச்சுண்ணமும்பொற்சுண்ணமும் நிரப்பிப்பரப்பி, எங்குமமணக்கோலங்கொண்டு மைந்தரும்மகளிரும் மகிழ்ந்து காணக் கண்ணுக்கினியதோர் விழாவாகக்கொண்டு போனஉயிர் மீண்டும் பெற்றவர்போல் ஆநந்தக்கடலில் அமிழ்ந்துநிற்சப் பட்டணத்தில் அனைவரோடுஞ்சென்று, அந்தணர் ஆசிகூற அரசர்கள்போற்ற மாகதர்புகழ்பாட மகிழ்வுடன் அரியணையில்வீற்றிருந்து, அமலன்அடியை ஆராதித்து மன்னுயிர் அனைத்தும் தன்னுயிரெனக்காத்துக்கொண்டு உலகாண்டு மன்னவர்க்குமன்னவனாய் வீற்றிருந்தனன். இவ்வண்ணம் சின்னாள் கழிந்தபின், வசிட்டமுனிவர் எழுந்தருள, மன்னவன் எழுந்து எதிர்கொண்டு சோடசோபசாரஞ்செய்து மணியாசனத்தில்இருத்தி மகிழ்ந்திருக்கையில், ஆங்குஇருந்த சுயஞ்ஞமுனிவர் வசிட்டமாமுனிவரை நோக்கி, 'இவ்வரிச்சந்திரன் மகாபுருஷன். இச்சந்திரமதியும் மகாபதிவிரதை. லோகிதாசியனும்நிரபராதி. இவர்களுக்கு இத்துன்பம்நேர்ந்தது ஏன்? இயமன்ஏன் புலையனானன்? சனி விசுவாமித்திராகட்டளைக்குப்பயந்து காலகௌசிகனானதேன்?' என்றுவினவ, வசிட்டமாமுனிவர் சொல்லத்தொடங்கினர்:

முன் நீலலோகிதன் என்னும் அரசன் மூவுலகாட்சிதனக்குவேண்டும் என்று விசுவாமித்திர முனிவரைப்பிரார்த்திக்க, அவர் அரசனைநோக்கி 'நீ ஏழுஜநநம் தவமமுயலவாவது வேண்டும்; அன்றி ஒருஜநநத்தில் மிகவும் துன்பம அனுப

க்கவாவதுவேண்டும். அஃதின்றி மூவுலகாட்சி நேராது ன்றுபுகல, அரசன் தும்மாணைப்படி ஒருஜகத்தில் தன் மெல்லாம்நுகர சேர்ந்தேன் என்றுகூற, அவ்வண்ணமே ,குக என்றனர். அவனே அரிச்சந்திரனாய்ப்பிறந்தான்; ஆத ால் விசுவாமித்திரர் மிக்கதுயரமெல்லாம்நுகர்வித்து, மூவு காட்சி அனுக்கிரகஞ்செய்தனர். இவ்வரசன் அக்கினிதே ன் அம்சம் என்பர்.'

'முற்காலத்தில் இவ்வுலகிற் சோதிமான் என்னும் வேந் ெனாருவன் அறநெறிதவறாது அரசியற்றிப் புத்திரனில்லா ல், கடவுளைக்குறித்துத் தவஞ்செய்து ஒருபுதல்வியைப்பெ ற்றன். அவள்பிறந்தகாலம் நல்லகாலம் அன்றென்றும் சம்வத்துக்கு அழிவாகுமாதலால் எங்கேனும் விட்டுவிட வண்டும்என்றும் சோதிடர்கூற, மன்னன் கலங்காநிற்கை ில் அமைச்சன் சொல்லலானன்: முன் மதுரையென்றுபேர் பற்ற நகரத்தைச் [illegible]என்பவன் ஆண்டனன். அவ னுக்கு ஒரு மகள்பிறந்தாள். மணிமாலிகை என்பது அவள் பெயர். அவள் ஒருவரையும் விவாகம்புரிய விருப்பமில்லா மலிருக்கத் தந்தை கவலையுறுத் திருமாலைப்பிரார்த்திக்க, புருஷோத்தமன் ஓர் இராஜகுமாரன்வடிவாய் எய்தினன். மன்னவன் அக்குமாரனைநோக்கித் திருமால்என்று அறியா மல் உன்குலம்எது? பெற்றோர்யாவர்? பேர்யாது? ஊர் யாது? என்றுவினவ, அவன் நானோர் அரசகுமாரன். காசிப கோத்திரத்தன். பெற்றோரை நான் அறியேன். எனக்கு ஈல்லாரில் இடந்தான். என்பேர் சிபதி என்ன, நீ என்புதல்வி யை மணம்புரியவேண்டுமென்று வேந்தன்பிரார்த்திக்க அவ் வாறே மணம்புரிந்துகொண்டனன். பின் சிலநாளிருந்து தன்தேயம்செல்லவேண்டும் எனக்கூற, அரசன் ஊரும்இ ல்லை, உற்றாருமில்லை என்று முன்சொல்லி இப்பொழுது இவ் வாறு கூறலாமோ? எனவினவ, அவர்கள்தேடிவந்தால் உல க்கு இடர்வரும் என்றுகூறி, மணிமாலிகைஎன்பாளுக்குத் தனஉண்மையகர்ந்து திருமால்போயினன். அவளுக்குக்கண வனும் ஆரும்அறியாது வந்துகொண்டிருக்க, அவள் கருவுற றனளாகத் தோழியர் கணவனைப்பிரிந்தபின் நின்மகள் கரு வுற்றனள் என்றனர். அஃதுணர்ந்து நரபதி மகளை சித்திரை செய்கையில் ஒருபேழையில்வைத்து ஆற்றில் விட்டனன்.

அவன் பாற்கடல்சேர்ந்து திருமாலால் ஆதரிக்கப்பட்டு விஷ்ணுவர்த்தமானன் என்னும் ஒருபுதல்வனைப்பெற்றாள். அவன் இவ்வுலகிற் சால்மலித்தீவு ஆண்டனன். ஆதலின், சாஸ்திரத்துக்கு அமைந்து மகளைச் சிக்ஷித்தின் அவளுக்கு நற்காலமுண்டாயிற் சிறப்படைவாள் என்று அமைச்சன் விசாரதன் கூறினன். அரசனும் நித்திரை செய்துகொண்டிருக்கும் மகளைப்பெட்டியில்வைத்துப் பிரவாகத்தில் விட்டான். அப்பெட்டியை மயன்எடுத்துத் திறந்துபார்த்து அதில் ஒரு பெண் இருக்கக்கண்டு வியந்து எடுத்து வெளியேவிடுத்தவுடன் அவள்வணங்கிநிற்க, தீர்க்கசுமங்கலியாயிருஎன்று ஆசீர்வதித்தனனாக, அவள் எனக்கு விவாகமேயில்லை, என்னைத் தேசத்துக்கு அரிஷ்டமென்று ஆற்றில்விட்டனர் என்றுசொல்ல, அவன் என்தவத்தினால் சந்திரமதியாய் மாங்கலியசூத்திரத்தோடு பிறப்பாய் என்று அனுக்கிரகத்துப்போயினன். உடனே தீக்குளித்திறந்து மதிதயன்புத்திரியாய் அவ்வாறே பிறந்தனள். முற்பிறப்பின்பயனால் இத்துன்பமெல்லாம் பட்டனள்.'

'முற்காலத்தில் தக்ஷகன் இந்திரனிடம் செல்லுகையிற் குமாரனை அழைத்துக்கொண்டுபோய் அளகாபுரியின் அருகில்நிறுத்தித் தான் உட்செல்ல, அரம்பையின்மனைவாயிலுக குமாரன் குறுக்காக ஓரரவுஇருப்பதை நளகூபரன்கண்டு தன் கைவாளால் அதைத்துண்டித்துக்கொன்றான். தக்ஷகன் தன் மகனை நளகூபரன் கொன்றதுகண்டு பாம்புகடித்து இறக்கும்படிச்சபித்து மிருதசஞ்சீவினிமருந்தால் தன்மகனையும் உயிர்ப்பித்தனன். அந்நளகூபரன் அம்சத்திற்பிறந்தவன் லோகிதாசியன். ஆதலால், தக்ஷகனாற் கடிக்கப்பட்டிறந்தான். திரிமூர்த்திகள் அநுக்கிரகத்தினால் அதுநீங்கி உயிர்த்துஎழுந்தான்.'

'திரிசங்குமன்னவன் தநுவோடு சுவர்க்கம்புக எண்ணி வசிட்டரைப்பணிய அவர்மறுக்க, அவன் விசுவாமித்திர முனிவரை யடைந்து தன் விருப்பமும் தனக்குக் குரு சாபத்தால் சண்டாளவடிவம்வந்ததும் சொல்லிஇரக்க, அவ் விசுவாமித்திரர் தவப்பெருமையால் அவனைச் சுவர்க்கமேற்ற, அமரர்கண்டு புலையன் இங்குவந்தான் என்று புரந்தரனிடத்துப்புகல, அவன் ஆணையா லங்குவந்திருந்த யமன் புலையன்ன

யாறு இகழ்ந்து காலினால் தலைகீழாக உதைத்துத்தள்ளினன். இதுகண்டு சினந்து விசுவாமித்திரர் சாபத்தினாற் புலையனாய் வீரசேனன் என்பவனுக்குப் புத்திரனாய் வீரவாகுவென்னும் பெயரினனாய் வந்து அரிச்சந்திரனை அடிமைகொண்டனன்; பின் சாபவிமோசனம் ஆகத் தன்னுலகுசென்றான்.'

'முன்னொருகாலத்திற் சூரியன் துவஷ்டாவின்மகள் சமிஞ்ஞையைமணந்து மநு யமன் என்னும் இருவரையும்பெற்றான். சமிஞ்ஞை தன்பெற்றோர்மனைக்குச்செல்ல நினைத்துச் சாயையென்பவளைச் சிருஷ்டித்துத் தன்கணவனுக்கும் மக்களுக்கும் துணையாகவைத்துக் கணவனுடன் சொல்லாமற் சென்றனள். சாயையும் தன்னை இன்னளென்று அறியாது சூரியனைச்சேர்ந்து சௌவர்ணி சநி இருவரையும்பெற்றாளாய்த் தன் சக்களத்திமக்களை ஆதரியாமலிருக்க, யமன் சமயம்பார்த்துச் சனியின்காலை ஒடித்தனன். இஃது அறிந்து சூரியன் சமிஞ்ஞையை நாடச் சமிஞ்ஞை பெண்குதிரையின் வடிவங்கொண்டு வனத்திற்கரந்து இருக்க, அதைக்கதிரவன் அறிந்துதானும்குதிரையாய் வடிவங்கொண்டு அவளைச்சேர்ந்து அசுவினிதேவர்களைப் பெற்றான். அவர்கள் தேவலோகம் சென்றனர். சநி தன்கால் ஒடிந்து நடக்க வலியில்லானாய் நைமிசாரணியத்திற் சேர்ந்து கௌசிகமுனிவர் அருளால் உபதேசிக்கப்பெற்று, தவஞ்செய்து கிருசபதத்தை ந்தனன். ஆதலால், சநி கௌசிகமுனிவர் கட்டளைப்படிக் காலகௌசிகனானான்' என்று சொல்லக்கேட்டு யாவருமகிழ்ந்தனர். வசிட்டமாமுனிவரும் பல்லாண்டுவாழ்கவென அரசனை வாழ்த்தித் தம் இடம் எழுந்தருளினர். அரிச்சந்திரமகாராசனும் அறநெறிதவறாது செங்கோல் செலுத்திப் பல்லாண்டு புகழோடு வாழ்ந்திருந்தனன்.

பிரமதேவன் நாரதமுனிவருக்கு உரைத்தருளினதென்று ஸ்ரீவேதவியாஸபகவான் அருளிச்செய்த காந்தபுராணத்தின் உள்ளுறையான அரிச்சந்திரசக்கிரவர்த்தியின் வாய்மையின் மேன்மையைச் சூதமுனிவர் உரைத்தருளச் சௌநகாதி முனிவர் அனைவரும்கேட்டு அகந்தூய்மையடைந்தனர்.

அரிச்சந்திரன்சரிதை முற்றிற்று.

# அரிச்சந்திரன் சரிதை.

## மேற்கோட் செய்யுட்களின் பதவுரை.

(பக்கம்-௩) திருவாய்மொழி-முதற்பத்து-இரண்டாம்திரு· பாட்டு-௫.

பற்று - (புறம்புள்ள) பற்று, அற்றது எனில் - அற்றது என்ற போதே, உயிர் - ஆத்துமா, வீடு - மோக்ஷத்தை, உற்றது - கையுற்றது. (திண்ணம்).

(பக்கம்-௩) குறள்-அதிகாரம்-௩௫. பாட்டு-௬.

யான் - (தானல்லாத உடம்பை) யான், எனது - (தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை) எனது, என்னும் - என்று நினைக்கும், செருக்கு - (அவற்றின்கண் பற்று செய்வதற்கு ஏதுவாகிய) மயக்கத்தை, அறுப்பான் - கெடுப்பவன், வானோர்க்கு - தேவர்க்கும், உயர்ந்த - அடைதற்கரிதாகிய, உலகம் - முத்தியுலகத்தில், புகும் - செல்லுவான்.

(பக்கம்-௪) குறள்-அதிகாரம்-௩௦. பாட்டு-௭.

பொய்யாமை பொய்யாமை - (ஒருவன்) பொய் பேசாமையையே பொய் பேசாமையையே, ஆற்றின் - செய்ய வல்லனாயின், அறம் பிற - பிற அறங்களை, செய்யாமை செய்யாமை - (அவன்) செய்யாமையே செய்யாமையே, நன்று - நல்லது.

(பக்கம் ௪) குறள்-அதிகாரம்-௩௦ பாட்டு-௯.

சான்றோர்க்கு - (துறவினாலே) நிறைந்தோருக்கு, எல்லாவிளக்கும் - (புறத்திருளை நீக்குகிற உலகத்தோரது) விளக்குகள் எல்லாம், விளக்கல்ல - விளக்குகள் ஆவனவல்ல, பொய்யாவிளக்கே - (அகத்திருளை நீக்குகிற) பொய்யாமையாகிய விளக்கே, விளக்கு - விளக்காம்.

(பக்கம்-௭) குறள்-அதிகாரம்-௩௪. பாட்டு-௨.

பெருஞ்செல்வம் - (ஒருவனிடத்து) பெரிய செல்வம் வருதல், கூத்தாட்டு - கூத்தாடுதல் செய்கிற, அவை-சபையினிடத்தே, குழாத்து அற்று - (காண்போர்) கூட்டம் வருதல் போலும், போக்கும் - (அச்செல்வம்) போகுதலும், அது - அக்கூட்டமானது, விளிந்தற்று- (அக்கூத்தாட்டு முடிந்தவிடத்து) போகுதல்போலும்.

(பக்கம்-எ) திருவாய்-நாலாம்பத்து-முதல்திரு. பாட்டு-க.

ஒரு நாயகமாய் - ஏகாதிபத்தியமாய், ஓட - (நெடுங்காலம்) நடக்கும்படி, உலகு - லோகத்தை, உடன் - எல்லாம் பொருந்தி, ஆண்டவர் - ஆளுகைசெய்தவர், (இராச்சியத்தைஇழந்து லஜ்ஜித்து இராத்திரியிலே அன்னப்பிச்சைக்குப் புறப்பட்டு இருளில் வேற்றுமை தெரியாமலே கால்வைத்து) கருநாய் - கறுப்புநாயாலே, கவர்ந்த - கவ்வப்பட்ட, காலர் - காலையுடையராய், சிதகியபானையர் - (முன்னே உடைந்து புறத்தெறிந்து கிடந்தது இவன் வீழ்தலால் பின்னும்) பொள்ளலாக அதையே பாத்திரமாக உடையராய், பெருநாடு - (தாமாண்ட) பெரிய பூமியில் (தம்மைக்காண முன் சமயபார்த்தவரெல்லாம்), காண - கண்டு நகைக்கும்படி, இம்மையிலே - இந்தப்பிறப்பிலேயே, தாம் - (இலச்சைவிட்டு) தாமே (நேராயிரந்து), பிச்சை - பிச்சையை, கொள்வர் - (நிதிபோல்) கொள்ளுவர்கள்.

(பக்கம்-எ) குறள்-அதிகாரம்-கச. பாட்டு-ச.

ஓத்து - (கற்ற) வேதத்தை, மறப்பினும் - மறந்தானாயினும், கொளலாகும் - (வருணங்கெடாமையாலே பின்னும்) ஓதிக்கொள்ளலாம், பார்ப்பான் - பிராமணனது, பிறப்பு (உயர்ந்த) வருணமானது, ஒழுக்கம் - ஆசாரம், குன்ற - குறைய, கெடும் - கெட்டுப்போம்.

(பக்கம் நக) நாலடி-அதிகாரம் கக. பாட்டு கூ

வேண்டினும் - விரும்பினும், வேண்டாவிடினும் - விரும்பாவிட்டாலும், உறற்பால - வரும்பகுதியுள்ள வினைகள், தீண்டா - வாராமல், விடுதல் - நீங்குதல், அரிது - அரிதாம்.

(பக்கம்-சஉ) நாலடி-அதிகாரம்-ந. பாட்டு-கூ.

நார்த்தொடுத்து - (உயிர்நீங்கிய தோற்பையை) நாரினால்கட்டி, ஈர்க்கில் என் - இழுத்தால் வரும் இழிவுயாது, நன்று ஆய்ந்து - விதிப்படி நன்றாகச் சுத்திசெய்து, அடக்கில் என் - (சிறப்புகளோடு கொண்டுபோய்த் தக்கவிடத்தில்) இட்டால் வரும் உயர்வு யாது, (ஒன்றுமில்லை.)

(பக்கம்-சஉ) நல்வழி-பாட்டு ந.

இடும்பைக்கு - துன்பத்துக்கு, இடும்பை - (காப்பாற்றி) வைக்கும் தோற்பை.

(பக்கம் சஉ)நாலடியார்-அதிகாரம்-ந. பாட்டு-ச

புல்நுனிமேல் நீர்போல் - புல்லின் நுனிமேலிருக்கும் பனிநீர்த்துளிபோல், நிலையாமை - சரீரம் நிலையில்லாமை.

(பக்கம்-௪௨) நாலடியார்-அதிகாரம்-௩. பாட்டு-௮.

மலையாடு மஞ்சுபோல் தோன்றி - மலையில் (சூழ்ந்து) சஞ்சரிக்கும் பனிபோல் (முன்னே) காணப்பட்டு, மற்று - பின்பு, ஆங்கே - காணப்பட்டது போலவே, நிலையாது - (சிறிதுகாலமும்) நிலைபெறுமல், நீத்துவிடும் - உயிர்நீங்கி (அழிந்து) போம்.

(பக்கம்-௪௨) நாலடியர்-அதிகாரம்-௫. பாட்டு-௬.

குடரும் - குடலும், கொழுவும் - மூளையும், குருதியும் - இரத்தமும், என்பும் - எலும்பும், தொடரும் நரம்பொடு - சேர்ந்த நரம்புடன், தோலும்-சருமமும், இடை யிடையே - நடு நடுவில், வைத்த தடியும் - வைத்த இறைச்சியும், வழும்பும் - நிணமும்.

(பக்கம்-௪௨) நாலடியார்-அதிகாரம்-௫. பாட்டு-௭.

ஊறி - (மலங்கள்) சுரந்து, உவர்த்தக்க - வெறுக்கத்தக்க, ஒன்பது வாய்ப்புலனும் - நவத்துவாரங்களினிடத்தும், கோதி - கொழித்து, குழம்பு - மலக்குழை சேற்றை, அலைக்கும் - ஒதுக்கும், கும்பம் - குடம்.

(பக்கம்-௪௩) நாலடியார்-அதிகாரம்-௨. பாட்டு-௯.

முற்றியிருந்தகனி - முதிர்ந்திருந்தபழம், ஒழிய - உதிராதுநிற்க, தீவளியால் - தீக்காற்றினால், நற்காய் - நல்ல (இளமையான) காய்கள், உதிர்தலுமுண்டு - உதிர்ந்து விழுதலுமுண்டு.

(பக்கம்-௪௬) குறள்-அதிகாரம்-௭௧. பாட்டு-௬.

அடுத்தது - தன்னையடுத்த பொருளினது நிறத்தை, காட்டும் - (தான்கொண்டு) காட்டுகிற, பளிங்குபோல் - கண்ணாடிபோல், நெஞ்சம் - (ஒருவனது) நெஞ்சத்தில், கடுத்தது - மிகுந்த குணத்தை, முகம் - (அவன்) முகமானது, காட்டும் - (தான்கொண்டு) காட்டும்.

(பக்கம்-௪௬) குறள்-அதிகாரம்-௭௧. பாட்டு-௯.

பகைமையும் கேண்மையும் - மனத்திலுள்ள பகைத்தன்மையையும்நட்புத்தன்மையையும், கண்-(வேற்றரசர் சொல்லாமற்போனபோதிலும் அவர்) கண்களே, உரைக்கும் - சொல்லும்.

(பக்கம்-௫௫) குறள்-அதிகாரம்-௧௧. பாட்டு-௮.

நன்றல்லது - (ஒருவன் தனக்குச்செய்த) தீமையை, அன்றே - செய்தபொழுதே, மறப்பது - மறந்துவிடுவது, நன்று - அறமாம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

# அரிச்சந்திரன் சரிதை.

## அரும்பத விளக்கம்.

அகங்காரம்—செருக்கு-யான் என்னும் இறுமாப்பு.
அகம்—உள்ளம்-இடம்.
அங்குசம்—மாவெட்டி.
அசரணியர்—இரக்ஷகரில்லாதவர்
அடலை—சாம்பல்.
அடாதது—தகாதது.
அடிசில்—சோறு.
அட்டில்—மடைப்பள்ளி.
அட்டு—சமைத்து.
அணிகலம்—ஆபரணம்.
அணு—மிகச்சிறியபொருள்.
அணுக—கிட்ட.
அணை—படுக்கை-சேர்.
அண்ணல் — பெருமையுடையோன்-அரசன்.
அதமன்—மிகவும் இழிந்தவன்.
அதர்—வழி.
அதிபதி—தலைவன்.
அத்தம்—கை.
அத்தன்—தகப்பன்.
அநந்தன்—அழிவில்லாதவன்.
அநுக்கிரகித்து—ஆசீர்வதித்து.
அந்தணன்—அழகியகருணையுடையோன்-பார்ப்பான்.
அந்தி-சாயங்காலம்.
அமயம்—சமயம்.
அமரர் — தேவர் - மரணமில்லாதவர்.
அமலன்—குற்றமில்லாதவன்.
அமளி—படுக்கை.
அமைச்சர்—மந்திரி.
அமையும்—போதும்.
அயர்வு—வருத்தம்-சோர்வு.
அயின்று—தின்று.

அரக்கன்—இராக்ஷதன்.
அரமகளிர்—தெய்வப்பெண்கள்.
அரம்பை—வாழை-அப்சரஸ்திரீகளில் ஒருத்தி.
அரவம்—ஒலி-பாம்பு.
அரவு—பாம்பு.
அரிது—கூடாது-அருமை.
அரியணை—சிங்காதனம்.
அருகு—பக்கம்-சமீபம்.
அருக்கன்—சூரியன்.
அருந்ததி—வசிட்டர்மனைவி-நல்லொழுக்கத்தில் தடையற்றவள்.
அருந்தி—உண்டு.
அருவருப்பு—அசுத்த எண்ணம்.
அருளிச்செயல் — கிருபையினால் சொல்லுதல்.
அலகிட்டு — துடைப்பத்தால்பெருக்கி.
அலக்கண்—துன்பம்.
அலமந்து—துக்கித்து.
அலறி—கூச்சலிட்டு.
அல்லல்—துன்பம்.
அவண்—அவ்விடம்.
அவனி—பூமி.
அவா—ஆசை.
அவை—சபை.
அளி—வண்டு-கிருபை.
அளித்து—கொடுத்து காப்பாற்றி.
அளை—வளை-புற்று.
அறம்—தருமம்.
அறவாழி—தருமக்கடல்.
அறுசுவை — கைப்பு-தித்திப்பு-புளிப்பு-உப்பு-துவர்ப்பு-கார்ப்பு ஆகிய ஆறு உருசி.

அறைந்தனர்—சொன்னார்.
அற்று—நீங்கி-அத்தன்மையானது.
அனைவருக்கும்—எல்லாருக்கும்.
அன்னம்—அம்சபக்ஷி.
அன்னை—தாய்.
அன்னோன்—அத்தன்மையானவன்-அவன்.

ஆக்கை—சரீரம். [போல.
ஆங்கு—அவ்விடம் - அவ்விதம் -
ஆசனம்—பீடம்.
ஆசான்—குரு.
ஆசி—ஆசீர்வாதம்.
ஆணை—ஆஜ்ஞை.
ஆண்டு—அவ்விடத்தில்-வருஷம்-ஆளுகைசெய்து.
ஆதுலர்—இரப்போர்.
ஆநந்தம்—சந்தோஷம்.
ஆபத்பாந்தவன்—துன்பத்தில் உதவும் உறவானவன்.
ஆய்ந்து—ஆராய்ந்து.
ஆர—நிறைய.
ஆரணியம்—காடு.
ஆராதித்து—பூசித்து.
ஆர்வம்—அன்பு.
ஆவணம்—கடைத்தெரு.
ஆவணச்சீட்டு—அடிமைக்கு எழுதும் விலைச்சீட்டு.
ஆறு—விதம் - வழி.
ஆற்றல்—வல்லமை - செய்தல்.

இகழ்ந்து—நிந்தித்து.
இடுகாடு—மயானம்,
இடுக்கண் } துன்பம்.
இடும்பை }
இதயம்—மனம்.
இந்து—சந்திரன்.
இம்மை—இப்பிறப்பில் அநுபவம்
இயம்பு—சொல்.
இயற்றி—செய்து.
இயைந்து—சம்மதித்து.

இரட்ட—இருபக்கமும்வீச.
இரணம்—கடன்.
இரதம்—இரசம்-தேர்.
இரவி—சூரியன்.
இருடி—முனிவர்.
இருத்தி—உட்காரவைத்து-வைத்து - அமுக்கி.
இருத்துவிக்குகள்—வேள்வியில் மந்திரம் சொல்வோர்.
இருநிதி—மிக்கதிரவியம்.
இல்லக்கிழத்தி—மனைவி.
இவர்ந்து—ஏறி.
இவுளி—குதிரை.
இழிதகவு—இழிவு.
இழைந்த—செய்த.
இறால்—தேன்கூடு.
இறுத்தனன்—ஒடிந்தான் - தங்கினான்-தீர்த்தான்.
இறை—வரி-அரசன் - கொஞ்சம்-கடவுள்-தலைவன்.
இறைவன்—தலைவன் - கடவுள்.
இனிய—இன்பமுள்ள-நல்ல.
இன்று—இப்பொழுது-இல்லை.
இன்னல்—துன்பம். [ன.
இன்னா-துன்பம்-வெறுக்கத் தக்க

ஈண்டு—இவ்விடத்தில்-கூடு-நெருங்கு.
ஈந்து—கொடுத்து.
ஈமம்—சுடுகாடு.
ஈர்க்க—இழுக்க.
ஈனம்—குறைவு-இழிவு.

உச்சரித்து—சொல்லி.
உச்சயிச்சிரவம்—உயர்ந்தகாதுள்ளது-இந்திரன்குதிரை.
உடை—வஸ்திரம்.
உண்டி—சாப்பாடு.
உதித்தோன்—பிறந்தவன்.
உதிரம்—இரத்தம்.
உபசரித்து—நன்மைசெய்து.

உய்ய—பிழைக்க.
உரப்பி—வெருட்டி.
உருத்திரமூர்த்தி—சிவன்.
உரறி — பெருங்கோபங்கொண்டு
கர்ச்சித்து.
உருத்து—கோபித்து.
உருவி—தொளைத்து-உறைநீக்கி.
உலகம்—பூமி-லோகம்மூன்று-சு
வர்க்கம்-மத்தியம்-பாதாளம்- ப
தினான்கு - மேலேழு - கீழேழு-
மேலேழு-பூ-புவர்-சுவர்- ஜனோ
தபோ-மஹோ-சத்தியம்- (லோ
கம்)-கீழேழு-அதல-விதல-சுத
ல-தராதல-ரசாதல-மகாதல-பா
தாள-(லோகம்.)
உலப்ப-கெட.
உலம்—திரண்டகல்.
உவப்பு—மகிழ்ச்சி.
உவா—பௌர்ணமி
உறுத்தி—உறுதிப்படுத்தி.
உற்று—அடைந்து.

ஊக்கம் — உள்ளக்கிளர்ச்சி-தைரி
யம்.
ஊங்கு—மேற்பட்ட.
ஊண்—சாப்பாடு.
ஊதியம்— இலாபம்.
ஊர்தி—வாகனம்.
ஊழி—பிரளயகாலம்.
ஊழ்— விதி.
ஊறி—உறைத்து.
ஊறு—சிதைவு.
ஊன்—மாமிசம்.

எச்சம்—சந்ததி.
எய்தி—வந்து-அடைந்து.
எய்துவித்து—அடைவித்து.
எரி—நெருப்பு.
எரிவாய்—நெருப்புள்ள ஓர்நரகம்.
எல்லோன்—சூரியன்.
எவ்வாற்றான்—எவ்வகையால்.

எழு—எஃகு.
எழுநிலை—ஏழ் அடுக்குமாடம்.
எழுந்தருளுதல்—பெரியோர் வரு
கை.
எழுமை—ஏழுதலைமுறை-ஏழு பி
றப்பு - தேவர்-மனிதர்-விலங்கு-
புள்-ஊர்வன-நீர்வாழ்வன-தாவ
ரம்.
ஏகி—போய்.
ஏக்கம்—இரக்கம்-விசனம்.
ஏண்—வலி.
ஏது—காரணம்.
ஏந்தல்—அரசன்.

ஐயம்— சந்தேகம்.

ஒண்ணாது—கூடாது.
ஒவ்வ—ஒத்திருக்க-சரியாக.
ஒழுக்கம்—ஆசாரம்.
ஒற்றுமை—ஒருமை.

ஓச்சல்—வீசல்.
ஓம்—சம்மதி.
ஓம்பி—உபசரித்து-காப்பாற்றி.
ஓரம்—பக்ஷபாதம்.
ஓரி—நரி-ஆண்நரி.
ஓலம்—ஒலி.

கஞ்சம்—தாமரை.
கடவுளர்—தேவர். [ளி.
கடைப்புறம் — புறவாயிலுக்குவெ
கட்டணம்—ஏற்பாடுசெய்த பண
ம்.
கட்புலம் — கண்ணிடம் - கண்ண
றிவு. [சிறிது.
கணம்—கூட்டம்-பேய்-க்ஷணம் -
கணிசியாது—இலக்ஷியம்செய்யா
மலசாமல்.
கணை—அம்பு. [செய்யும்.
கண்காணிக்கும் — கண்டு காவல்
கண்ணுறல்—பார்த்தல்.

கண்ணோட்டம்—தாக்ஷணியம்.
கதி—வழி-பதவி-ஆதரவு.
கதிர்—கிரணம்.
கதிரவன்—சூரியன்.
கதுப்பு—கன்னம்.
கந்தரம்—கழுத்து.
கந்தருவர்—தேவசாதியரில் ஒருவர்-குதிரைமுகமுள்ளவர்-பாடும் தன்மையுள்ளவர்.
கமலம்—தாமரை.
கமுகு—பாக்குமரம்.
கயவன்—மூடன்-கீழ்மகன்.
கரம்—கை.
கரவாது—ஒளிக்காமல்.
கரவாளம்—கத்தி.
கரவு—வஞ்சனை-திருடுதல்-ஒளித்தல்.
கரி—சாக்ஷி-யானை.
கருணை—கிருபை.
கருத்தன்—படைப்பவன்-கடவுள்.
கருவுற்று—கர்ப்பமாய்.
கலிபுருஷன்—சனி.
கலுழ்ந்து—அழுது.
கலை—சாஸ்திரம்-மான்.
கவந்தம்—தலையில்லா உடல்.
கவரி—சவரி-சாமரை.
கவலை—துன்பம்.
கவன்று—துன்பப்பட்டு.
கவாடம்—கதவு.
கவிகை—குடை.
கழகம்—சபை.
களங்கம்—அழுக்கு-குற்றம்.
களி—சந்தோஷம்.
கறங்க—ஒலிக்க.
கன்னல்—கரும்பு.

காட்டம்—விறகு.
காதலி—மனைவி.
காலதண்டம்—யமனுடைய தடி.
கால்—பாதம்-காற்று-வாய்க்கால்-கக்குகிறது-சக்தி.
காவலற்கு—அரசனுக்கு.
காளை—எருது.
கான்முளை—பிள்ளை.

கிங்கரர்—சேவகர்.
கிஞ்சித்து—கொஞ்சம்.
கிராதர்—வேடர்.
கிருத்தியம்—தொழில்.

குசை—தருப்பை.
குஞ்சி—ஆண் தலைமயிர்.
குடர்—குடல்.
குடாரம்—கோடாலி-கோடரி.
குணதிசை—கிழக்குத்திக்கு.
குண்டிகை—கமண்டலம்.
குதூகலம்—சந்தோஷம்.
குருதி—இரத்தம்.
குழகன்—சிறுவன்-அழகன்.
குழவி—குழந்தை.
குறளன்—குள்ளன்.
குறிப்பு—அபிப்பிராயம்.
குறுகினன்—கிட்டினான்-வந்தான்.

கூகை—கோட்டான்.
கூந்தல்—பெண் தலைமயிர்.

கேண்மை—சிநேகம்.
கேளிர்—உறவினர்.

கையர்—வஞ்சகர்.
கையொத்து—கையொப்பம்-கையெழுத்து.

கொக்கரித்து—வீராவேசத்தாற் கூவி.

கோசருமம்—பசுவின் தோல்.
கோமயம்—சாணி.
கோமறுகு—இராசவீதி.
கோன்—அரசன்.
கௌசேயம்—வெண்பட்டு.

சகடு—வண்டி.
சகதீசுவரன்—உலகுக்கெல்லாம் தலைவன்.

க்கிரவர்த்திகள்—பூமி முழுமையும் ஆண்டவர்-அறுவர்-நளன் அரிச்சந்திரன்-புருகுச்சன்-புரூரவன் கார்த்தவீரியன்-முசுகுந்
நகரன்—சிவன் [தன்
ணப்பன்—சணல்நார்த்தொழில் செய்பவன்.
ண்டிவாளம்—மூறட்டுக்கடாக்களுக்கு இடும் இருப்பு விலங்கு-சங்கடம்.
த்தியகீர்த்தி—மெய்யான புகழ் உள்ளவன்-அரிச்சந்திரன்மந்திரி.
த்தியசந்தன்—மெய்யானபிரதிஜ்ஞையுள்ளவன்.
ந்தம்—அழகு-குணம்.
பதம்—பிரதிஜ்ஞை.
மித்து—ஓமத்துக்கு விறகு.
மைத்து—ஏற்படுத்தி-கட்டி.
மஸ்காரம்—சீர்ப்படுத்தல்-பிணம் சுட்டுச் சீர்ப்படுத்தல்.
ரணம்—இடம-அடைக்கலம-கால்.
ரணியன்—இரக்ஷகன்.
ரிதம்— } சரித்திரம்.
ரிதை— }
வம்—பிணம்.
ற்புருஷர்—நல்லஉத்தமர்.
ாணை—இரத்தினங்களை மாசுநீக்கிச் சீர்ப்படுத்தும் யந்திரம்.

ாபவிமோசனம்—வைவு (சாபம்) விடுகை.
ாரம்—தேறியபொருள்.

கரம்—மலையினுச்சி-தலை-கோபுரமுனி.
தை—பிணஞ்சுட அடுக்கிய காஷ்டம். [ழிதல்.
தைவு—பங்கப்படுத்தல்-உருவ
த்திரபானு—அழகிய சூரியன் போன்றவன்.

சிந்தாக்கிராந்தன் — மனக்கவலைகொண்டவன்.
சிறார்—சிறுவர்.
சிறுக்கன்—சிறுவன்.
சினை—சினை-கருப்பம்.
[மால்.)
சீபதி—இலக்குமி கணவன் (திரு
சுண்ணம்—பொடி.
சுதன்—பிள்ளை.
சுரா—கள்.
சுவர்க்கம்—தேவலோகம்-சுகம் விளைக்குமிடம்.
சுவாதந்திரியம்—சுவாதீனம்.
சுவாமித்துரோகம்—தலைவனை வஞ்சனைசெய்தல்.
சுளித்த—கோபகுறியுள்ள.

சூதமுனிவர்—ஓர் பௌராணிகா-தோஒட்டுங் குலத்திற்பிறந்த
சூத்திரம்—கயிறு. [வா.
சூலம்—முச்சிகையாயுதம். [சனை.
சூழல்—இடம-சுற்றுதல்-ஆலோ
சூளுறவு-பிரதிஜ்ஞை.

செயற்பாலது—செய்யத்தக்கது.
செருக்கு—கர்வம்.
செவி—காது.

சேய்மை—தூரம்.
சோடசஉபசாரம்—பதினாறு நன்மைசெய்தல்-ஆசனம் கொடுத்தல்-கைகழுவநீர்தரல்-கால்கழுவநீர்தரல்-முக்குடிநீர்தரல்.நீராட்டல்-ஆடைசாத்தல்-முப்புரிநூல்தரல்-சந்தனம்பூசல்-மலர்சாத்தல்-அக்ஷதைதூவல்-தூபம்-தீபம்-கற்பூரஆரத்தி-அமுதமளித்தல்-அடைக்காய்தரல்-மந்திரமலர் அர்ச்சித்தல்.
சோதிடர்—ஜோசியம் உரைப்பவர்.

சோர—பெருக.
சோர்வு—தளர்ச்சி.

தகனம்—கொளுத்தல்.
தசை—மாமிசம்.
தடித்த—பருத்த.
தடுமாறி—அலைந்து.
தணந்து—நீங்கி-பிரிந்து
தண்டம்—சிக்ஷை-தடி-அடித்தல்
தண்டு—சேனை-தடி.
தண்ணம்—ஒருபக்கப்பறை.
தத்தம்—தானம் - தானங்கொடுக்கப்பட்டது.
தத்தாபகாரம்—கொடுத்ததை மீண்டும்கவர்தல்.
தநு—உடல்.
தமனியம்—பொன்.
தருமராஜன்—இயமன்.
தவணை—கெடு.
தவம்—தேகத்தை வருத்திச்செய்யும் விரதம்.
தவறு—தப்பிதம்-நீங்கிப்போதல்.
தளைப்பட்டது — காலில் கட்டுண்டது.
தனம்—பொருள்.

தாதா—கொடுப்பவன்.
தாதி—பணிப்பெண்.
தாமதம்—காலக்கழிவு.
தாழ்—தாழ்ப்பாள்.
தானம்—கொடை-இடம்.

திகழும்—விளங்கும்.
திகைத்து—பிரமித்து.
திடசித்தை—உறுதியான மனமுடையவள்.
திண்ணம்—நிச்சயம்.
திண்ணியது — உறுதியுள்ளது - வலி.
திணிந்த—துறுத்த-மிகுந்த.
திரிகரணம்—மனது - வாக்கு - சரீரம் ஆகிய மூன்றுகருவி.

திரிநேத்திரன் — முக்கண்ணுடையவன்.
திரிமூர்த்திகள் — பிரமன் - விஷ்ணு-சிவன் ஆகிய மூன்று கடவுளர்.
திரு—செல்வம்-சிறப்பு-தாலி - இலக்குமி.
திரேதாக்கினி—மூன்று அக்கினி-தக்ஷிணாக்கினி-காருகபத்தியம்-ஆகவநீயம்.
திரைந்து—உடலில் தோல் தளர்ந்து.
திலகன் — நெற்றியில் புண்டரம் போல் சிறந்தவன்.
திவசம்—தினம்.
திறல்—வல்லமை.

தீரன்—தைரியசாலி
தீர்க்கசுமங்கலி—நெடுநாள் மங்கலியத்தோடு கூடியவள்.

துச்சீலை — கெட்டசுபாவமுள்ளவள்-காலகௌசிகன் மனைவி.
துணர்—பூங்கொத்து.
துயர—துன்பம்.
துருத்தி—தீ ஊதும் தோற்கருவி.
துருவி—தேடி - திரிந்து - ஆராய்ந்து.
துர்க்காதேவி—காளி.
துன்றிய—நெருங்கிய-மிகுந்த.
துன்னின—கிட்டின-நேரிட்டன.

தூய—சுத்தமான.
தூரியம்—வாத்தியம்.
தூவி—இறகு.

தெழித்தனர்—அதட்டினர்.

தேரான்—ஆலோசியான்-அறியான்.
தேவரீர்—நீர்
தேவாதிதேவன்—எத்தேவர்க்கும் மேலானதேவன்.
தேற்றரவு—தெளிவித்தல்- தைரியம் சொல்லல்.

தாழுத்தை—பணிப்பெண்.
தாழும்பு—அடிமை.

தாலா—தோற்காத.

ைச—ஆசை
ஞ்சு—விஷம்.
டுவண்—மத்தியில்.
ட்டம்—கூத்து.
ண்பு—சிநேகிதம்.
மன்—இயமன்.
ல்கி—கொடுத்து.
ல்குரவு—வறுமை.
ளகூபரன்—குபேரன்மகன்.
ள்ளிரவு—நடுஇராத்திரி
றை—தேன்.
நன்கு—நன்றாக.

நாகம்—நல்லசர்ப்பம்.
நாண்—கயிறு-வெட்கம்.
நாட்பண்—நடு.
நாமன்—பெயருள்ளவன்.
நான்றது—தொங்கியது.

நிகர்த்த—ஒத்த.
நிகழ—நடக்க
நிணம்—கொழுப்பு
நிதி—திரவியம் [நிலையானது.
நித்தியம் — தினமும் செய்வது
நித்திலம்—முத்து.
நிமித்தம்—காரணம்.
நிரபராதி—குற்றம்அற்றவன்.
நிருபன்—அரசன்.
நிலவு—நிலா-சந்திரன்ஒளி.
நிலை—இருப்பு - என்றுமுள்ளது-
கோபுரஅடுக்கு.
நிழற்ற—நிழல்செய்ய.
நின்மலன்—குற்றமில்லாதவன்.

நீசன்—இழிவானவன்-கீழ்மகன்.
நீடு—நெடுங்காலம்.

நீவிர்—நீங்கள்.

நுகர—அனுபவிக்க.
நுதல்—நெற்றி.

நெகிழ்ந்த—தளர்ந்த.
நெஞ்சம்—மனது. [வன்.
நெடுமால்—விஷ்ணு-மிகப்பெரிய
நெட்டுயிர்ப்பு—பெருமூச்சு.
நெறி—வழி.

நேமி—சக்கரம்-சக்கரவாளபருவ
தம்-உருளை-வட்டம்- சக்கரவா
கப்புள்.

நைமிசாரணியம்—ஓர் புண்ணிய
க்ஷேத்திரம்.
நைமித்திகம்—ஓர்காரணம் பற்றி
ச்செய்யும் கருமம்.

நோன்பு—விரதம். [ய்து
நோன்று—பொறுத்து-தவம செ

பகவன்—தேவன்.
பங்கம்—சேதம்-அழிவு - அவமா
னம். [னப்பட்டு.
பங்கப்பட்டு—மூறிபட்டு - அவமா
பங்கி—தலைமயிர். [ல்.
பச்சாத்தாபம்—பின்பு இரங்குத
படிறன்—பொய்யன் - வஞ்சகன்
திருடன். [டள்ளம்
படுகுழி—யானைபிடிக்கவீழ்த்தும்
படை—சேனை-ஆயுதம்.
படைக்கலம்—ஆயுதம்.
பணி—வேலை-கட்டளை. [ட்டு.
பணித்து —சொல்லி - கட்டளையி
பணிவு—அடக்கம்.
பணைத்து—பருத்து.
பண்டம்—பொருள்.
பதர்—கருக்காய்நெல்-உமி.
பதாதி—காலாள்.
பதி—கணவன்-தலம்-நகரம்.

பத்தினி—மனைவி.
பயிலும்—பழகும்.
பரஞ்சோதி—மேலானஒளி.
பரலோகம்—மேலுலகம்.
பரல்—பருக்கைக்கல்.
பரி—குதிரை.
பரிவு—அன்பு
பருகல்—குடித்தல்.
பவம்—பாவம்-சன்மம்.
பழிப்பவன்—நிந்திப்பவன்.
பழுவம்—காடு.
பற்று—அன்பு-பிடிப்பு.

பாசம்—அன்பு-கயிறு.
பாண்டம்—பானை
பாதலம்—பாதாளம்-கீழுலகு.
பார்ப்பனன்—பிராமணன்.
பார்ப்பினி—பிராமணஸ்திரீ.

பிணி—நோய்.
பிணைப்பட்டேன்—பாத்தியப்பட்டேன்.
பிண்டான்னம்—பிதுருக்களுக்கு இடும்சோற்றுத்திரளை.
பிரமகத்தியை-பிராமணனைக்கொன்றபாவம்.
பிரவாகம்—வெள்ளம்.
பிரலாபிக்காதே—அழாதே.
பிராமணியம்—பார்ப்பாரசாதி.
பிரேதம்—பிணம்.
பிலிற்றும்—துளிக்கும்-பெய்யும்.
பிறழின்—தவறினல்.
பிற்காலிக்கிறவன் — பின்னிடுகிறவன்.

பீடிக்க—துன்பப்படுத்த.
பீளை—கண்அழுக்கு.

புகல—சொல்ல.
புகழ்—கீர்த்தி.
புதல்வன்—மகன்.
புதல்வி—மகள்.
புதுமை—நூதனம்.
புரக்கும்—இரக்ஷிக்கும்.
புரந்தரன்—இந்திரன்-அசுரர் பட்டணங்களைப்பிளப்பவன்.
புராணம் — பழையகதை-வியாசமுனிவரால் செய்யப்பட்டது-ஐந்து லக்ஷணமுடையது-பஞ்சபூத சிருஷ்டி-1; பிராணிசிருஷ்டி-2; வம்சங்கள்-3; மநுவந்தரங்கள் 4; வம்சங்களில் உள்ளவர்சரிதம்-5; அவை பதினெட்டு: மச்சியம்-கூர்மம் - வராகம்- வாமனம் -பிரமம்-வைஷ்ணவம்- பாகவதம்- சைவம்-லைங்கம் - பவுடிகம் - நாரதீயம் -காருடம்- பிரமகைவர்த்தம் - காந்தம்-மார்க்கண்டேயம்-ஆக்கினேயம் - பிரமாண்டம்-பதுமம்.
புருஷோத்தமன்—ஆண்களிற்சிறந்தவன (திருமால.)
புலையன்—சண்டாளன்.
புறங்கூறுவோன்—தூஷிப்பவன்.
புனல்—நீர்.
புன்கண்மை—துன்பம்.

பூசுரன்—பிராமணன்.
பூஞை—பூனை.
பூதம்—பேய்-ஐந்துபூதம் - நிலம்-நீர்-தீ-வளி-ஆகாயம்.
பூரணகும்பம்—நல்ல நீர்நிறைந்த குடம்.

பேழை—பெட்டி.
பேதம்—சினேகிதரைப்பிரித்தல்-வித்தியாசப்படுத்தல்.

பைங்கூழ்—பயிர்.

பொத்தி—மூடி. வைத்த.
பொதிந்த — மறைத்துவைத்த-

பொய்கை—குளம்.
பொறை—பொறுமை-சுமை.

மகம்—யாகம்.
மகாநுபாவன்—பெருந்தன்மையுள்ளவன்.
மகாபுருஷன்—பெரியோன்.
மகிழ்ச்சி—சந்தோஷம்.
மகிஷி—அரசன் மனைவி.
மஞ்சம்—கட்டில்.
மஞ்சனம்—ஸ்நானம்.
மடிமை—சோம்பல்.
மட்டு—அளவு.
மணம்—கலியாணம்-வாசனை.
மணிகர்ணிகை—காசியில், கங்கைக்கணுள்ள ஒரு தீர்த்தத்துறையென்ப.
மணிமாலிகை — இரத்தினமாலை என்பவள்.
மதலை—பிள்ளை.
மதி—புத்தி.
மதிதயன்—கஞ்சி நாட்டரசன்-புத்தியினால்குடிப்பட்டவன்-(நண்ணறிவாளன்).
மது—கள்.
மந்திரம்—ஆலோசனை.
மமகாரம்—எனதென்னும்ஆசை.
மயானம்—இடுகாடு.
மரித்தான்—இறந்தான்.
மருங்கு—பக்கம்-இடுப்பு.
மலிந்து—நிறைந்து.
மறம்—பாவம்-வீரம்-கொலை.
மறுகு—தெரு. [லைதல்
மறுக்கம்—விசனம்-கலக்கம் - அலைதல்
மறை—வேதம்-இரகசியம்.
மன்பதை—சனம்.

மாகதர்—அரசர்களிடத்தூப்புகழ்பாடுவோர்.
மாக்கள்—மனிதர்.
மாண்பு—பெருமை-நன்மை.

மாதிரம்—திக்கு.
மாயை—மயக்குதல்-வஞ்சனை.
மாரி—மழை.
மாழ்ந்து—மயங்கி.
மாளிகை—வீடு.
மானதனன்—மானத்தையேபொருளாகக் கொண்டவன்.

மிடைந்து—நெருங்கி-மிகுந்து.
மித்திரன்—சினேகிதன்.
மிருதசஞ்சீவனி— செத்தவனைப் பிழைப்பிக்கும் மருந்து.

முகில்—மேகம்.
முடி—கிரீடம்.
முத்தி—மோக்ஷம்.
முயற்சி—பிரயத்தினம்.
முரசம—பேரி-மத்தளம்.
முருகன்—சுப்பிரமணியன்.
முழை
முழஞ்சு } —குகை.
முறை—கிரமம்.
முற்பவம்—முன்சன்மம்.
முனிவர்—இருஷி. [வர்.
முனிவரர் — இருஷிகளிற்சிறந்தவர்.
முன்தானை—ஆடையின் தலைப்பு.

மூவுலகு—கீழ்-நடு-மேல்-உலகங்கள்.

மெய்—சரீரம்-உண்மை.
மெழுகி—எரின் உறுப்பு.
மேனி—சரீரகாந்தி-உடம்பு.
மோதின—அடித்தன.
மோழை—அகப்பை-அறிவிலான்.
மோனம்—பேசாமை.
மோக்ஷம்—விடுகை-பதவி.
யாமம்—சாமம். [இடம்.
யூபஸ்தம்பம் — யாகபசுக்கட்டும் இடம்.

வசிட்டர்—ஞானம் தம்மிடத்திற் குடிகொண்டவர்.

வச்சிரகடகம் — வைரத்தினால் செய்தகைவளை. [யிறு.
வடம்—ஆலமரம்-கயிறு-தோற்க
வடிவம்—உருவம்.
வணிகர்—வர்த்தகர்.
வதிந்து—வசித்து.
வதை—கொல்லுதல்-வருத்துதல்
வயப்பட்டு—சுவாதீனப்பட்டு.
வயின்—இடம்.
வரம்—பிரார்த்தனை - சிறந்தது - அருள்கை.
வருடி—தடவி-பிடித்து.
வருவாய்—வரவு.
வரை—அளவு-மலை-மூங்கில் -எல்லை-இரேகை.
வலித்து—நிச்சயித்து.
வவ்வுவார்—கவர்வார்.
வளம்—செழுமை. [ன்.
வள்ளல்—வளையாதுகொடுப்போ
வள்—கூர்மை.
வற்புறுத்தி—உறுதிப்படுத்தி.
வனப்பு—அழகு.
வன்மீகம்—புற்று.

வாய்நேர்ந்து—சொல்லி - பிரதிஜ்ஞைசெய்து.
வாய்ப்பு—சித்தித்தல்-வளமை- த
வாய்மை—உண்மை. [குதி.
வாராணசி—காசி. [சிறந்த.
வான்—ஆகாயம்-மழை - மேகம்-

விகற்பம்—வேறுபாடு-சந்தேகம்.
விசாரம்—ஆலோசனை-விசனம்.
விசாலாக்ஷி—பெரியகண் உடையவள்-காசியில்உள்ளதேவி.
விண்ணப்பம் —வணக்கமாய்ப்பெரியோரிடத்துச் சொல்லுதல்.
விதி—செய்யென்று ஏற்படுத்தியது-ஊழ்.
விதிர்விதிர்த்து—நடுநடுங்கி.
விபரீதம்—வேறுபாடு.
விப்பிரன்—பிராமணன்.
வியப்பு—ஆச்சரியம்.
வியல்—விசாலமான.
விரகு—உபாயம்.
விலங்கு—தளை-மிருகம்.
விவாகம்—கலியாணம்.
விழவு—உற்சவம்-சந்தோஷம்.
விளம்பு—சொல்.
விளித்து—அழைத்து.
வினை—செய்கை.
விஷ்ணுவர்த்தமானன் — விஷ்ணுவினால் விருத்தியாகிறவன்.

வீயும்—அழியும். [ளவன்
வீரசேனன் —சூரரானசேனையுள்
வீரவாகு—வீரமான கையுள்ளவ [ன்.
வெதுப்பு—வேதல்-வெப்பம்.
வெருட்சி—பயம்.
வெள்ளி—சுக்கிரன்.
வெறி—மயக்கம்தரும்பொருள்.
வெறுக்கை—திரவியம்.
வெற்றி—சயம்தரும்செயல்-சயம்.
வேசரி—கழுதை - கோவேறுகழுதை.
வேட்டு—கலியாணம்செய்து-யாகம்செய்து, விரும்பி.
வேண்டுகோள்—பிரார்த்தனை.
வேதம் — அறிவிப்பது - மறை - அபௌருஷேயமானது.
வேதவியாசர்—வேதங்களின் சிக்கறுத்த முனிவர்.
வேதாளம்—பிசாசு.
வேள்வி—யாகம்.

வைகறை—விடியற்காலம்.

க்ஷத்திரியன்—அரசன்.
க்ஷமிக்க—பொறுக்க.

க்ஷேத்திரம்—ஸ்தலம்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 15 | 18 | சர்ந்து | சர்த்து. |
| 16 | 24 | காணேணே | காணேனே. |
| 19 | 11 | வருத்தி | வருக்தி. |
| 19 | 20 | அடிமையாக்கி | அடிமையாக்கிப். |
| 19 | 29 | புககககண்ட | புகக்கண்ட. |
| 20 | 1 | தட்டுத்தமொறி | தட்டித்தமொறி. |
| 21 | 25 | ரன்பவனும | என்பவனும். |
| 22 | 16 | ஒப்பிவித்துவிடு | ஒப்பித்துவிடு. |
| 25 | 15 | உரினும | உறினும். |
| 33 | 25 | பாதாளம | பாதாளம். |
| 39 | 22 | இயல்பினன் | இயல்பினள். |
| 40 | 11 | தகனஞசெய்பவா | தகனஞ்செய்பவர். |
| 40 | 28 | கழுதது | கழுத்து. |
| 43 | 19 | ஓலமிட்டனா | ஓலமிட்டனர். |
| 44 | 24 | பெருமபாவம் | பெரும்பாவம். |
| 45 | 11 | உன்னைப்றெ்றேன் | உன்னைப்பெற்றேன். |
| 48 | 13 | நோன்பினயன் | நோன்பின்பயன். |
| 59 | 21 | வாயிலுக்குகுறுககாக | வாயிலுக்குக்குறுக்காக. |